# வேளாண்மை – உழவர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022–2023

### மானியக் கோரிக்கை எண். 5

## திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2022

# கொள்கை விளக்கக் குறிப்பு 2022–2023

## பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | | 1 – 12 |
| 1. | வேளாண்மை | 13 – 57 |
| 2. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் | 58 – 98 |
| 3. | வேளாண்மைப் பொறியியல் | 99 – 135 |
| 4. | வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி | 136 – 162 |
| 5. | சர்க்கரைத் துறை | 163 – 179 |
| 6. | விதைச்சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்பு | 180 – 196 |
| 7. | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 197 – 236 |
| 8. | தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை | 237 – 253 |
| 9. | மானிய கோரிக்கை | 254 – 259 |
| நிறைவுரை | | 260 – 262 |

## முன்னுரை

**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**

**தொழுதுண்டு பின்செல் பவர்"**

**( திருக்குறள் : 1033 )**

உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால் மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது.

**(கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை)**

நாட்டின் ஒட்டுமொத்த சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில், வேளாண்மை முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்களின் வாழ்வாதாரமாக திகழ்ந்து உணவு அளிப்பதோடு, வேலை வாய்ப்பளித்தல், தொழில்துறை முன்னேற்றம், பன்னாட்டு வாணிபம், வறுமை ஒழிப்பு எனப் பல்வேறு இனங்களிலும் வேளாண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

தமிழ் நாட்டில் ஊரகப்பகுதிகளில் 70 சதவீத மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. வேளாண்மையில் ஏற்படக்கூடிய எந்த ஒரு சிறு மாற்றமும்

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரியதொரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தமிழக அரசு, வேளாண் தொழிலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

குறைந்த அளவு நிலஉடைமை, வேளாண் அல்லாத இதர பயன்பாட்டிற்கு விளைநிலங்களை மாற்றுதல், கணிக்க இயலாத பருவநிலை, விவசாயத் தொழிலாளர்கள் பற்றாக்குறை, வேளாண் விளை பொருட்களைச் சந்தைப்படுத்துதல் ஆகியவை வேளாண்தொழில் சந்திக்கும் பெரும் சவால்களாகும்.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு, வேளாண் தொழிலினை மேம்படுத்தி வேளாண் பெருமக்களின் உயர்விற்காக பல்வேறு முயற்சிகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டில் நிலவும் தட்பவெப்பம், மழையளவு, மண்வளம் ஆகியவற்றிற்கேற்ப பயிர் இரகங்களும், உற்பத்தியை பெருக்கிட நவீன தொழில் நுட்பங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன.

வேளாண் தொழில் சார்ந்த கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, வேளாண் காடுகள் போன்ற தொழில்களையும்

மேற்கொண்டு விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த பண்ணைய முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தில் நெல் உற்பத்தித் திட்டம், ஊட்டச்சத்து மிகுந்த சிறுதானிய இயக்கம், பயறு உற்பத்தி பெருக்க இயக்கம், எண்ணெய்வித்து உற்பத்தி இயக்கம் ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டப்பயன்கள், விவசாயிகளுக்கு முழுமையாக சென்றடைவதை உறுதி செய்ய விரிவாக்கப்பணிகள் முறைப்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**வேளாண் வளர்ச்சிக்கான அரசின் முயற்சிகள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், மேட்டூர் அணை 12.06.2021 அன்று பாசனத்திற்காகத் திறக்கப்பட்டு ரூ.61.09 கோடி நிதி ஒதுக்கீட்டில் குறுவைத் தொகுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனால், இயல்பான குறுவை சாகுபடிப் பரப்பான 3.21 இலட்சம் ஏக்கர் பரப்பினைவிடக் கூடுதலாக 1.69 இலட்சம் ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டு மொத்தம் 4.9 இலட்சம் ஏக்கர்

சாதனை அடையப்பட்டுள்ளது. இது கடந்த 46 ஆண்டுகளில் இல்லாத மாபெரும் சரித்திர சாதனை ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டமான நிகர சாகுபடிப் பரப்பினை 60 விழுக்காட்டிலிருந்து 75 விழுக்காடாக உயர்த்தும் முயற்சியில் ஒரு மைல்கல்லாக, முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்களில் தனிக்கவனம் மேற்கொண்டதன் பயனாக முந்தைய ஆண்டைவிட 6.32 இலட்சம் ஏக்கர் சாகுபடிப்பரப்பு கூடுதலாக அதிகரித்து, மொத்தம் 116.63 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில் குறுவைப் பருவத்தில் அதிக பரப்பளவில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டதாலும், சாதகமான பருவ மழையாலும், உணவு தானிய உற்பத்தி மூன்றாவது முன் மதிப்பீட்டின்படி (07.04.2022 நாளது வரை) 118.01 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அளவில் அடையப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்தி இறுதி மதிப்பீட்டில் கடந்த ஆண்டைவிட கூடுதலாகவே சாதனை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தென்னை, பருத்திப்பயிரில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் உயர்விற்காக விவசாயிகளுக்கு மானியங்கள் வழங்கப்பட்டது.

மக்களின் நலன்பேணும் இவ்வரசு, இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பயிர்பாதுகாப்பு மூலம் இடுபொருள் செலவைக் குறைத்து, நச்சுத்தன்மையற்ற சூழலுக்கு வழிவகுத்து செயல்பட்டு வருகிறது.

இயற்கை இடர்பாடுகள் ஏற்படுத்தும் இன்னல்களில் இருந்து மீளும் வகையில், பிரதம மந்திரி பயிர் காப்பீடுத் திட்டத்தின் கீழ் 2020-2021ஆம் ஆண்டில் பயிர் இழப்பீட்டுத் தொகையாக இதுவரை ரூ.2,082 கோடி சுமார் 9.65 இலட்சம் விவசாயிகளுக்கு ஒப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழையால் ஏற்பட்ட இயற்கை இடர்பாடுகளால், 4,44,988 ஏக்கர் பரப்பளவு சேதமடைந்ததால், பாதிக்கப்பட்ட 3,37,043 வேளாண் பெருமக்கள், மீண்டும் சாகுபடி செய்திட

ஏதுவாக இடுபொருள் மானியமாக ரூ.155.02 கோடி நிவாரண நிதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உழவுத் தொழிலை தொடர்ந்து மேற்கொள்வோரை ஊக்குவிக்கும் விதமாக பல உன்னதத் திட்டங்கள் முதலாம் வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுச் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இரண்டாவது வேளாண் நிதிநிலை அறிக்கையில் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப, புதிய மின்னணு முறைகளும் வேளாண்மையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன.

விவசாயிகள் தங்கள் விளைநிலங்களின் மண்வளத்தினை அறிந்துகொள்ளவும், மண்வள அட்டையினை அச்சிட்டுக்கொள்ளவும் வசதியாக **"தமிழ் மண் வளம்"** என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

பண்டமாற்று முறையில் தொடங்கிய பரிவர்த்தனையானது தற்சமயம் பணமில்லா பரிவர்த்தனையாக மாறியுள்ள காலகட்டத்தில்,

விவசாயிகளும் இடுபொருட்களை எளிதாக பெறுவதற்கு பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தப்பட உள்ளது.

திட்டப்பயனாளிகள் தேர்வில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்திட திட்டப் பயனாளிகளின் பெயர் பட்டியல் கிராம ஊராட்சிகளின் கிராம சபைக் கூட்டங்களில் பார்வைக்காக வைக்கப்பட உள்ளது.

நிலையான வளர்ச்சிக்கான, "நிதி ஆயோக்" அமைப்பானது, 2030ஆம் ஆண்டின் "உலகத்தின் மாற்றத்திற்கான" இலக்கினை அடையும் பொறுப்பினை ஏற்றுள்ளது. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள், சாதனைக்கான பல செயல்முறைகளின் மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 17 இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறைக்கு வறுமை ஒழிப்பு, பசி ஒழிப்பு, தேவைக்கு ஏற்ப உற்பத்தி மற்றும் பயன்பாடு மற்றும் நீரின் முக்கியத்துவம் ஆகிய நான்கு இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இலக்குகளின் படி சாதனைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கையானது, விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள், ஏற்றுமதியாளர்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், வர்த்தகர்கள், வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறை அதிகாரிகளுடனும் நேரடியாகவும், காணொலி வாயிலாகவும் மற்றும் மனுக்கள் மூலமாகவும் பெற்ற கருத்துக்களை ஆராய்ந்து அறிக்கையாக தயார் செய்து 19.03.2022 அன்று **மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால்** சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

**வேளாண்மைத் துறையின் தோற்றம்**


இந்திய பஞ்ச ஆணையம் 1880ஆம் ஆண்டில், வழங்கிய பரிந்துரைகளின்படி, வேளாண்மைத் துறையானது 1882ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு, வேளாண்மை இயக்குநரகமாக 1904ஆம் ஆண்டில் தேவையான பணியாளர்களுடன் தொடங்கப்பட்டது.

**தமிழ்நாட்டில் வேளாண்மை**

தமிழ்நாடு, நிலவியல் அமைப்பில் மித மற்றும் வறண்ட ஈரப்பத வெப்ப மண்டலத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் 11–வது பெரிய மாநிலமாகவும் (1.3 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவு), ஏழாவது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாகவும் (2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 7,21,47,000) விளங்குகிறது. அகில இந்திய அளவில் நான்கு சதவீத பரப்பினையும், ஆறு சதவீத மக்கள் தொகையினையும், மூன்று சதவீத நீர் ஆதாரங்களையும் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் 79.38 இலட்சம் நிலவுடைமைதாரர்கள் 59.71 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடுகின்றனர். (இந்திய அரசின் 10–வது வேளாண்மை கணக்கெடுப்பின்படி) மொத்த நிலவுடைமைதாரர்களில், குறு சிறு விவசாயிகள் 93 சதவீதமாகவும், நடுத்தர மற்றும் பெரு விவசாயிகள் ஏழு சதவீதமாகவும் முறையே 62 மற்றும் 38 சதவீதம் நிலப்பரப்பிற்கு நில உடைமைதாரர்களாக உள்ளனர். இந்திய சராசரி நிலவுடைமைப் பரப்புடன் (1.08 எக்டர்) ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் சராசரி நிலவுடைமைப் பரப்பானது 0.75 எக்டராக உள்ளது.

**படம்: 1 – தமிழ்நாட்டின் நிலப்பயன்பாடு 2020–21**





**மொத்த நிலப்பரப்பு – 130.33 இலட்சம் எக்டர்**
**பயிரிடு திறன் (%) – 127.35** (மொத்த சாகுபடி பரப்பு / நிகர சாகுபடி பரப்பு x 100)

***(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு.)***

## தமிழ்நாட்டின் சராசரி மழையளவு

தமிழ்நாட்டின் ஆண்டு சராசரி மழையளவு 937.5 மி.மீ. ஆகும். நாட்டின் சராசரி மழையளவான 1200 மி.மீ. உடன் ஒப்பிடுகையில், இது 28 சதவீதம் குறைவானதாகும்.

## படம்: 2 – 2021 ஆம் ஆண்டில் பருவம் வாரியாக பெறப்பட்ட மழையளவு




**(ஆதாரம் : இந்திய வானிலைத்துறை)**


## பாசன நீர் ஆதாரம்

### அட்டவணை: 1.1 – நீர் ஆதாரங்கள் வாரியான நிகர பாசனப் பரப்பு (2020–21)

| பாசன ஆதாரம் | எண்ணிக்கை (எண்கள்) | நிகர பாசனப் பரப்பு (இலட்சம் எக்டர்) | நிகர பாசனப் பரப்பு (சதவீதம்) |
|---|---|---|---|
| கால்வாய்கள் | 2,241 | 6.68 | 24.16 |
| ஏரிகள் | 41,123 | 3.72 | 13.47 |
| கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் | 18,80,126 | 17.20 | 62.22 |
| இதர பாசனம் | | 0.04 | 0.15 |
| **மொத்தம்** | | **27.64** | **100.00** |

**ஆதாரம் : பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு**

## படம்: 3–தமிழ்நாட்டின் 7 வேளாண்தட்ப வெப்ப மண்டலங்கள்





**ஆதாரம் : தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் இணையதளம்**

# 1.வேளாண்மை

## 1.1. பயிர்சாகுபடி பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அதிகரித்தல்

தமிழ்நாட்டில் நெல் மற்றும் இதர பயிர் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்களை மாநில மற்றும் ஒன்றிய அரசுத் திட்டங்கள் மூலம் விவசாயிகளிடையே பரவலாக்கம் செய்ததன் மூலம் கடந்த 2020–21ஆம் ஆண்டில் 108.24 இலட்சம் மெட்ரிக் டன் உணவு உற்பத்தியை விட நடப்பாண்டில் (2021–22) 118.01 இலட்சம் மெட்ரிக் டன் மூன்றாவது முன் மதிப்பீட்டின்படி (07.04.2022 நாளது வரை) கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த வேளாண்பயிர்களின் உற்பத்தி கடந்த ஆண்டைவிட ஒன்பது சதவீதம் அதிகரித்துள்ளது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் இல்லாத சாதனையாகும்.

**படம்: 4 – கடந்த ஐந்தாண்டுகளில் உணவு தானிய உற்பத்தி (இலட்சம் மெட்ரிக் டன்)**




** (மூன்றாவது முன் மதிப்பீட்டின் படி)

**அட்டவணை: 1.2 –2022–23 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

| **வ. எண்** | **பயிர்கள்** | **பரப்பு (இலட்சம் எக்டர்)** | **உற்பத்தி (இலட்சம் மெ.டன்)** | **உற்பத்தி திறன் (கிலோ/எக்டர்)** |
|---|---|---|---|---|
| 1 | நெல் | 19.00 | 75.50 | 3,973 |
| 2 | சிறுதானியங்கள் | 9.67 | 42.75 | 4,421 |
| 3 | பயறு வகைகள் | 9.48 | 7.90 | 833 |
| **மொத்த உணவு தானியங்கள்** | | **38.16** | **126.15** | |
| 4 | எண்ணெய் வித்துக்கள் | 5.50 | 14.30 | 2,603 |
| 5 | பருத்தி | 1.74 | 4.40* | 430** |
| 6 | கரும்பு | 1.60 | 200.00 | 125*** |
| | **மொத்தம்** | **47.00** | | |

* *உற்பத்தி இலட்சம் பொதிகள்: பொதி ஒன்றுக்கு 170 கிலோ* ** உற்பத்தித் திறன்–பஞ்சு *** *உற்பத்தி மெட்ரிக் டன் / எக்டர்*

## 1.2 முதன்மை வேளாண்மை திட்டங்கள்

### 1.2.1.கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

ஐந்து ஆண்டுகளில் அனைத்து கிராமங்களிலும் ஒட்டுமொத்த வேளாண் வளர்ச்சி மற்றும் தன்னிறைவு அடைந்திடும் நோக்கத்துடன் 2021-22 ஆம் ஆண்டில் "**கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்**" என்ற திட்டம் ரூ.227.059 கோடி நிதி ஒதுக்கீட்டில் 1,997 கிராம பஞ்சாயத்துகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2021-22 ஆம் ஆண்டில் ஆழ்துளை, குழாய் கிணறுகளுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில் இத்திட்டம் 3,204, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்ட கிராமப் பஞ்சாயத்துக்களில் ஒருங்கிணைந்து ரூ. 300 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.2. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்

2021-22 ஆம் ஆண்டில் 7.5 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் ரூ.146.64 கோடி திட்ட மதிப்பீட்டில்

**மானாவாரி நிலங்களின் மேம்பாட்டிற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதால், 3.15 இலட்சம் சிறு, குறு விவசாயிகள் பயன்பெற்றனர்.**

இத்திட்டம் 2022–23ஆம் ஆண்டில் ரூ.132 கோடி நிதி ஒதுக்கீட்டில் 7.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் 3,000 மானாவாரி நிலத்தொகுப்புகளை உருவாக்கி தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.2.3.தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம்

2021–22ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.11.14 கோடி ஒன்றிய மற்றும் மாநில நிதி ஒதுக்கீட்டில், முழு மானியத்தில் 73 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உயர் மதிப்பு மரவகைகளான **தேக்கு, செம்மரம், வேங்கை, மஞ்சள் கடம்பு, சந்தனமரம், மலை வேம்பு**, **ஈட்டிமரம்**, **நீர்மருது** , **மகோகனி**, மருத்துவ குணமுள்ள மரவகைகள், **நாவல் மற்றும் புளி** உள்பட **அதிக பலன் தரும் மரங்கள்** வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் 80 இலட்சம் மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு முழு

மானியத்தில் வழங்கிட ரூபாய் 12 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.2.4. ஆதி திராவிடர், பழங்குடியின சிறு, குறு விவசாயிகளுக்கு கூடுதலாக 20 சதவிகித மானியம்

உயர்மதிப்பு வேளாண் திட்டங்களில் ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பை சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நடைமுறையில் உள்ள மானியத்துடன் 20 சதவிகித கூடுதல் மானியம் மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். இதற்கென 2022-23 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 1.3. மாற்றுப்பயிர் சாகுபடியை ஊக்கப்படுத்துதல்

அதிக நீர் தேவைப்படும் நெல் பயிருக்கு மாற்றாக குறைந்த நீர்த் தேவை உள்ள பயறுவகைகள், சிறுதானியங்கள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் பயிரிடுவதன் மூலம் மண்ணின் வளம் மற்றும் நீடித்த வேளாண்மையினை அடைந்திட வாய்ப்பாகும் என்பதால் மாற்றுப்பயிரிட இவ்வரசு ஊக்கப்படுத்துகிறது.

நெல் பயிறுக்கு மாற்றாக மேற்கண்ட பயிர்கள் **66,000** ஏக்கர் பரப்பளவில் **10** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் **2022-23** ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

**1.4. பயிர் சாகுபடி விவரம்**

**1.4.1. நெல்**

நெல் சாகுபடியானது, அனைத்து மாவட்டங்களிலும், மூன்று பருவங்களிலும் – கார் / குறுவை / சொர்ணவாரி (ஏப்ரல் முதல் ஜீலை வரை), சம்பா / தாளடி / பிசானம் (ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை) மற்றும் நவரை/ கோடை (டிசம்பர் முதல் மார்ச் வரை) மேற்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் இயல்பாக 19 இலட்சம் எக்டர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டு 68.66 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மகசூல் அடையப்பெறுகிறது.

2021 – 22 ஆம் ஆண்டில் செம்மை நெல் சாகுபடி மற்றும் நேரடி நெல் விதைப்பு முறையே **13.21** இலட்சம் எக்டர் மற்றும் **4.3** இலட்சம் எக்டர் பரப்பளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


நெற்பயிரின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் முறையே ரூபாய் 21 கோடி மற்றும் ரூபாய் 7.51 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்துசெயல்படுத்தப்படும்.

மேலும் விவசாயிகளுக்கு தார்பாய்கள் வழங்குதல், நெல் குழித்தட்டு நாற்று நடவு முறை செயல்விளக்கத் திடல் அமைத்தல், வரப்பு பயிர் சாகுபடி, துத்தநாக சல்பேட் மற்றும் ஜிப்சம் இடுதலை ஊக்குவித்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் மற்றும் திட்டங்கள் 2022-23 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படவுள்ளன.


### 1.4.2. சிறுதானியங்கள்:

சிறுதானியங்கள் ஊட்டச்சத்து நிறைந்தவை. சிறுதானியங்கள் சராசரியாக 8.94 இலட்சம் எக்டர் பரப்பளவில் 31.35 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி கொண்டு சாகுபடி செய்யப்படுகின்றன.

## படம் : 5 – 2020–21 சிறுதானியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி




பரப்பு (இலட்சம் எக்டர்)




உற்பத்தி (இலட்சம் மெ.டன்)

**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)**


### 1.4.2.1. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்


சிறுதானிய உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், ஒன்றிய, மாநில நிதி ஒதுக்கீட்டில் **"இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்", அமைக்கப்பட்டு, "சிறுதானிய திருவிழா"** மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படவுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் மக்காச்சோளம் மற்றும் ஊட்டச்சத்து மிக்க சிறுதானியங்கள் பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரிக்க ரூபாய் 2.74 கோடி மற்றும் 13.54 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.4.3. பயறுவகைப் பயிர்கள்

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய பயறுவகைப் பயிர்களான உளுந்து, பச்சைப்பயறு, துவரை மற்றும் கொள்ளு ஆகிய பயிர்களின் இயல்பான பரப்பு 8.17 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி 5.05 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் உள்ளது.

**படம் : 6 – 2020 –21 ஆம் ஆண்டு பயறுவகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி**




**ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு (இறுதி மதிப்பீடு)**

பயறு வகைப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு 2021–22 ஆம் ஆண்டில் தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய வேளாண்

வளர்ச்சித் திட்டம் ரூபாய் 34.51 கோடி மற்றும் ரூபாய் ஐந்து கோடி நிதி செலவில் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.


மேலும் துவரை உற்பத்தியை அதிகரிக்க 2022–23 ஆம் ஆண்டில் "துவரை சாகுபடி சிறப்பு மண்டலம்" அமைக்கப்படவுள்ளது.


2021–22 ஆம் ஆண்டில் சம்பா நெல் அறுவடைக்குப் பின், பயறுவகைகளின் இயல்பான சாகுபடி பரப்பை 2.2 இலட்சம் எக்டர் பரப்பிலிருந்து அதிகரித்திட திட்டமிட்டு இதுவரை 3.07 இலட்சம் எக்டர் சாகுபடி பரப்பில் சாதனை அடையப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் ரூபாய் 3.03 கோடி நிதி ஒதுக்கீட்டில் நெல் தரிசில் பயறு சாகுபடித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் ரூபாய் ஐந்து கோடி நிதி ஒதுக்கீட்டில் 2022–23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.4.4. எண்ணெய்வித்துப் பயிர்கள்

எண்ணெய்வித்துக்கள் இயல்பாக, 3.82 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு எக்டருக்கு 2,405 கிலோ உற்பத்தித் திறன் என்ற அளவில் 9.18 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**2020-21 – எண்ணெய் வித்துக்கள் பரப்பு, உற்பத்தி**






***(ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு அரசு–2020–21 ஆம் ஆண்டின் இறுதி மதிப்பீடு)***

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் மற்றும் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் எண்ணெய்வித்துப் பயிர்களின் பரப்பு மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க 2021–22 ஆம் ஆண்டில் முறையே ரூபாய் 25.20 கோடி மற்றும் ரூபாய் 65 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டது.

நெல் அறுவடைக்குப்பின், நிலக்கடலை, எள் போன்ற எண்ணெய்வித்துப் பயிர்களை பயிரிடும் நோக்கத்துடன் 2021–22 ஆம் ஆண்டில், ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது.

சோயாபீன்ஸ் சாகுபடிப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் **"தங்கப்பயறு சோயாபீன்ஸ்" என்ற திட்டம்** 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய, மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.

### 1.4.5. பருத்தி

தமிழ்நாட்டின் வணிகப் பயிரான பருத்தி சராசரியாக 1.62 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, ஒரு எக்டருக்கு 411 கிலோ பஞ்சு மகசூலுடன் 3.92 இலட்சம் பஞ்சுப் பொதிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீண்ட மற்றும் மிக நீண்ட இழை பருத்தி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் "**நீடித்த நிலையான பருத்தி இயக்கம்**" 2021-22 ஆம் ஆண்டில் ரூ. 11 கோடி மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டிலும், தேசிய உணவு பாதுகாப்பு (பருத்தி) இயக்கத்தின் கீழ் ரூ. 2.83 கோடி நிதி ஒதுக்கீட்டிலும் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1.4.6. **கரும்பு**

தமிழ்நாட்டில் பயிரிடப்படும் முக்கிய வணிகப் பயிரான கரும்பு 36 மாவட்டங்களில் சராசரியாக சுமார் 1.56 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 161 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க தேசிய உணவுப் பாதுகாப்பு இயக்கம் (கரும்பு) ரூ. 42 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டன. பிரதம மந்திரி நுண்ணீர் பாசனத் திட்டத்தின் (PMKSY) மூலம் சொட்டு நீர் பாசனம் அமைக்க கரும்பு விவசாயிகளுக்கு 5,519 எக்டர் பரப்பளவிற்கு கூடுதல் உபகரணங்களுக்கான மாநில அரசின் மானியமாக ரூ.14.51 கோடி செலவிடப்பட்டுள்ளது. இவ்வரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளின் காரணமாக 2021-22 ஆம் ஆண்டில் கரும்பு சாகுபடி பரப்பு கடந்த ஆண்டைவிட 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இத்திட்டம் 2022-23ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.4.7 தென்னை

தமிழ்நாட்டில் தென்னை அனைத்து மாவட்டங்களிலும் 4.39 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு 49,474 இலட்சம் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

2021–22ஆம் ஆண்டில் தென்னை சாகுபடியை ஊக்குவிக்க **தென்னையில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, தென்னையில் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை** முறையே மூன்று கோடி ரூபாய் மற்றும் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. மேலும் 2022–23 ஆம் ஆண்டில் ஒன்பது கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கண்ட திட்டங்களுடன், தென்னை, மா, முந்திரி போன்ற பயிர்களில் **ஊடுபயிர் சாகுபடியை** ஊக்குவிக்கும் வகையில் செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளது.

## 1.5. வேளாண் துறையின் இதர திட்டங்கள்

### 1.5.1.நீடித்த நிலையான வருமானத்திற்கு ஒருங்கிணைந்த பண்ணையம்

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் –

மானாவாரி பகுதி மேம்பாடு ஆகிய இரு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பயிர் சாகுபடி, கறவை மாடு, எருமை, ஆடுகள், செம்மறி ஆடுகள், கோழிகள் வளர்ப்பு, பழமரக்கன்றுகள், தீவனப்பயிர் சாகுபடி, மண்புழு உரம் தயாரித்தல் மற்றும் தேனீ வளர்ப்பு உள்ளிட்ட தொகுப்பிற்கு 50 சதவீதம் அல்லது ரூ.45,000/- நிதியுதவியுடன், 13,300 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் 2021-22ஆம் ஆண்டில் ரூ.59.85 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.5.2. இயற்கை வேளாண்மை ஊக்குவிப்பு

இயற்கை வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு 2022-23 ஆம் ஆண்டில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் பசுந்தாள் உர விதைகளும், மண்புழு உரம், அமிர்தகரைசல் போன்றவற்றை தயாரித்து விற்பனை செய்ய ஆர்வமுள்ள 100 உழவர் குழுக்களுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் ஒரு கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

2022–23ஆம் ஆண்டில், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மையில் ஆர்வமுள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து 150 இயற்கை வேளாண்மை தொகுப்புகள் 7,500 ஏக்கர் பரப்பளவில் ஒன்றிய, மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படும்.

### 1.5.3. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றும் சிறப்பு திட்டம்

சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தில், ஓராண்டுக்கு மேலாக தரிசாக இருக்கும் நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதன் மூலம், 2021–22 ஆம் ஆண்டில், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்துப் பயிர்கள் முறையே 6,929 எக்டர், 6,347 எக்டர் மற்றும் 1,728 எக்டர் பயிர் சாகுபடிக்கு கொண்டுவர ரூ. 20.57 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.5.4. இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல்

வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு படித்த

இளைஞர்களை தேர்வு செய்து, அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு 2021–22 ஆம் ஆண்டில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் 193 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அக்ரி கிளினிக் அல்லது வேளாண் சார்ந்த தொழில் தொடங்குவதற்கு பட்டதாரி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் 200 இளைஞர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.5.5. உயர்தர உள்ளூர் இரகங்களை பிரபலப்படுத்துவதற்கான கண்காட்சிகள் (Genetic Diversity Fairs)

பாரம்பரியமிக்க மற்றும் உள்ளூர் பயிர் இரகங்களைக் கண்டறிந்து, சிறந்த இரகங்களை உருவாக்க ஆண்டுக்கு மூன்று முறை இரகங்களை பிரபலப்படுத்துவதற்கான கண்காட்சிகள் மாவட்டந்தோறும் நடத்தப்படும். இத்திட்டம் 2022– 2023–ஆம் ஆண்டில் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.5.6.நெல் ஜெயராமன் பாரம்பரிய நெல் இரகங்கள் பாதுகாப்பு இயக்கம்

2021-22 ஆம் ஆண்டில் 33 அரசு விதைப் பண்ணைகளில் 200 ஏக்கர் பரப்பளவில் 15 பாரம்பரிய நெல் இரகங்கள் பயிரிடப்பட்டு, அதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விதைகள் விவசாயிகளுக்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் விநியோகிக்கப்பட உள்ளது. 2022-23ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

### 1.5.7. உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்குதல்

2021-22ஆம் ஆண்டில் சிறு, குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மண்வெட்டி, களைகொத்து, இரும்பு சட்டி, கடப்பாறை மற்றும் கதிர் அரிவாள் அடங்கிய 64,444 வேளாண் உபகரணத் தொகுப்புகள் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட உள்ளது.


## 1.6. தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)

வேளாண்மைத் துறையின் கீழ் 2015 ஆம் ஆண்டு **தமிழ்நாடு மாநில விதை மேம்பாட்டு முகமை (டான்சிடா)** துவங்கப்பட்டு, விதைகள் மற்றும் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் 33 அரசு விதைப்பண்ணைகளும், ஆறு அரசு எண்ணெய்வித்துப் பண்ணைகளும் மற்றும் ஒரு அரசு பயறு பெருக்கப் பண்ணையும் செயல்பட்டு வருகின்றன.

2021–22 ஆம் ஆண்டில், நெல், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், பருத்தி ஆகிய பயிர்களின் சான்று விதைகள் மொத்தம் 25,933 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டது.

2022–23ஆம் ஆண்டில் 30,345 மெட்ரிக் டன் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி ஆகிய பயிர்களின் விதைகள் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**படம்:8–2022-23ஆம் ஆண்டிற்கான விதை கொள்முதல் மற்றும் விநியோகத்திட்டம்**




## 1.6.1.தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

தமிழ்நாட்டில் இயங்கி வரும் 23 தென்னை நாற்றுப் பண்ணைகள், 16 தென்னை ஒட்டு சேர்ப்பு மையங்கள் மூலம் 2021-22 ஆம் ஆண்டில் 9.84 இலட்சம் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. 2022-23ஆம் ஆண்டில் 17.4 இலட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

### 1.6.2. விதை சுத்திகரிப்பு நிலையங்கள்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் வழங்கிட 126 விதை சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் விதைகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

### 1.6.3. விதைகள் மற்றும் நடவுப் பொருட்களுக்கான துணை இயக்கம்:

தரமான சான்று பெற்ற விதைகளை மானியத்தில் வழங்குவதற்காக இத்திட்டம் 2021-22-ஆம் ஆண்டில் ரூ.29.43 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டது. 2022-23-ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.6.4. வேளாண்மை விரிவாக்க மையங்கள்:

தமிழ்நாட்டில் மொத்தம் 880 வேளாண்மை விரிவாக்க மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 383 மையங்கள் வட்டார அளவில் முதன்மை மையங்களாகவும், 497 மையங்கள் குறுவட்ட அளவில் துணை மையங்களாகவும் செயல்படுகின்றன.

இவற்றுள் 228 முதன்மை மையங்கள் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்களாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 256 துணை வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**1.7. பயிர் பாதுகாப்பு**

ஒருங்கிணைந்த முறையில் பூச்சி நோய் மேலாண்மை, தரமான, பாதுகாப்பான பூச்சிக்கொல்லிகள் விநியோகம், பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் அயல்நாட்டு புதியவகை பூச்சி, நோய் நுழைவினை தடுப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

**1.7.1.உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி செய்தல்.**

தமிழ்நாடு அரசின்கீழ் இயங்கும் 24 உயிரி கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் வாயிலாக உயிரி பூச்சிக்கொல்லிகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**அட்டவணை: 1.3– 2021 –22 ஆம் ஆண்டில் உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் உற்பத்தி மற்றும் விநியோகம்**

| **வ. எண்** | **உயிரி பூச்சிக்கொல்லிகள் மற்றும் உயிரி கட்டுப்பாட்டு காரணிகள்** | **உற்பத்தி மற்றும் விநியோகம்** |
|---|---|---|
| 1. | டிரைகோடெர்மா விரிடி *(கிலோ)* | 1,58,700 |
| 2. | *சூடோமோனாஸ் புளூரசன்ஸ் (கிலோ)* | 1,52,175 |
| 3. | *பவேரியா பேசியானா (கிலோ)* | 38,332 |
| 4. | *டிரைகோகிரம்மா கைலோனிஸ் (சிசி)* | 17,924 |
| 5. | *மெட்டாரைசியம் அனிசோபிலியே (கிலோ)* | 1,28,520 |
| 6. | *கிரைசோபெர்லா (எண்கள்)* | 79,29,000 |

இத்திட்டம் 2022–23–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.7.2.பயிர்களில் பூச்சிநோய் தாக்குதலை எதிர்கொள்ள சிறப்பு நிதி

புதிய பூச்சிகள், நோய் ஆகியவற்றின் தாக்கம் துவங்கியவுடனே அவற்றை எதிர்கொள்ளும் வகையில் ஐந்து கோடி ரூபாய் கொண்ட ஒரு சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டு, அதனைப் பயன்படுத்தி பூச்சி நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## 1.8. உரம்

முக்கிய இடுபொருளான இரசாயன உரங்கள் ஒன்றிய அரசின் உரம் மற்றும் இரசாயனத்துறை மூலம் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றன.

2021–22 ஆம் ஆண்டில் 21.62 இலட்சம் மெட்ரிக் டன் உரங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

**அட்டவணை: 1.4– ஆண்டு வாரியாக உர விநியோக விபரங்கள் பின்வருமாறு**

| உரம் | உர விநியோகம் (இலட்சம் மெட்ரிக் டன்) | |
|---|---|---|
| | 2020 – 21 | 2021 – 22 |
| யூரியா | 8.66 | 9.51 |
| டி.ஏ.பி | 2.50 | 2.20 |
| பொட்டாஷ் | 2.62 | 2.35 |
| காம்ப்ளக்ஸ் | 5.44 | 7.56 |
| **மொத்தம்** | **19.22** | **21.62** |

## 1.9. தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள்

தமிழ்நாட்டில் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களும், 12 பூச்சிக்கொல்லி ஆய்வகங்களும்,

மூன்று மாநில பூச்சிக்கொல்லி ஆய்வகத்துடன் கூடிய குறியீட்டு மையங்களும், இரண்டு அங்கக உர பரிசோதனை ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர திருச்சி மாவட்டத்தில் உயிர் உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மத்திய கட்டுப்பாடு ஆய்வகம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

**1.9.1.உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களின் செயல்பாடுகள்**

தரமான உரங்கள் விற்பனையாவதை உறுதிப்படுத்தும் வகையில், 2021–22ஆம் ஆண்டில் 19,495 உர மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, 459 தரமற்ற உர மாதிரிகள் கண்டறியப்பட்டது. அவற்றுள் 376 மாதிரிகளுக்கு துறைரீதியாகவும், 56 மாதிரிகளுக்கு சட்டரீதியாகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2022–23 ஆம் ஆண்டில், 24,500 உர மாதிரிகள் பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 14 உரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்களுக்கும் ISO 17025:2017 தேசிய தர நிர்ணயச்சான்று

(NABL Accreditation) பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் ஆண்டில் 1,402 அங்கக உர மாதிரிகள், 1,001 உயிர் உர மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதில், 112அங்கக உர மாதிரிகள் மற்றும் 31 உயிர் உர மாதிரிகள் தரமற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

2022–23ஆம் ஆண்டில், 2,160 அங்கக உர மாதிரிகள் மற்றும் 2,200 உயிர் உர மாதிரிகளை பரிசோதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.9.2. பூச்சிக்கொல்லி ஆய்வகங்களின் செயல்பாடுகள்

ISO: 17025:2017 தேசிய தர நிர்ணயச் சான்று கோயம்புத்தூர் ஆய்வகத்திற்கு பெறப்பட்டதுடன், காஞ்சிபுரம் பூச்சிக்கொல்லி ஆய்வகத்திற்கு சான்று பெறும் நிலையில் உள்ளது. மீதமுள்ள 10 ஆய்வகங்களுக்கு சான்று பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021–22 ஆம் ஆண்டில், 21,952 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், 113 மாதிரிகள் தரமற்றது எனக் கண்டறிந்து தக்க

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2022–23 ஆம் ஆண்டில், 21,850 பூச்சிக்கொல்லி மாதிரிகள் ஆய்வு செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.9.3.உயிரி கட்டுப்பாட்டுக் காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம்

2022–23 ஆம் ஆண்டில், டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், பெவேரியா போன்ற உயிரி கட்டுப்பாட்டு காரணிகளின் 500 மாதிரிகளின் தரப் பரிசோதனை திருச்சிராப்பள்ளியிலுள்ள புதிய உயிரி கட்டுப்பாட்டு காரணிகள் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 1.10. மண் வள மேம்பாடு

### 1.10.1. மண் பரிசோதனை நிலையங்கள்

தமிழ்நாட்டில் 32 மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மண் வகையீடு மற்றும் நிலப்பயன்பாட்டு நிறுவனம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயல்பட்டு

வருகிறது. விரிவான மண் வகையீடு விபரங்களை ஆவணப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது.

விவசாயிகளின் நலனுக்காக, **2022–23** ஆம் ஆண்டில் **மயிலாடுதுறையில்** புதிய மண் பரிசோதனை நிலையம் அமைக்கப்பட உள்ளது.

### 1.11. நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையம்

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான் மலையில் 14 அத்தியாவசியமான நுண்ணூட்டக் கலவைகள் தயாரிக்கப்பட்டு 2021–22 ஆம் ஆண்டில் 2,836 மெட்ரிக் டன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 2022–23 ஆம் ஆண்டில், 3,000 மெட்ரிக் டன் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

### 1.12. உயிர் உர உற்பத்தி மையங்கள்

தமிழ்நாட்டில் எட்டு வகையான உயிர் உரங்கள், **22 உயிர் உர உற்பத்தி மையங்களில்** உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்படுகிறது. துத்தநாகத்தை கரைத்துக்கொடுக்கும் பாக்டீரியா உற்பத்தி செய்யப்பட்டு மாநில அரசு விதைப்பண்ணைகளுக்கு வழங்கப்பட உள்ளது.

2021–22 ஆம் ஆண்டில் **11.38 இலட்சம் லிட்டர் திரவ உயிர் உரங்கள்** உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022–23ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.13. வேளாண் விரிவாக்கத்திற்கான துணை இயக்கம் – மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டம் – அட்மா.

வேளாண் விரிவாக்கத் துணை இயக்கத் திட்டமானது வேளாண்மை மற்றும் சகோதர துறைகள், கால்நடைப் பராமரிப்பு, பட்டு வளர்ப்பு, மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை, வனத்துறை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகிய துறைகளின் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 1.13.1. அட்மா திட்ட செயலாக்கம்.

2021–22ஆம் ஆண்டு அட்மா திட்டத்தில் வேளாண்மை குறித்த பயிற்சி வழங்குதல், கண்டுணர் பயணங்கள், செயல்விளக்கத்திடல்கள் மூலம் பயிர்களில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்தும்

முறைகள், விவசாய விளைபொருட்களை மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்தும் முறைகள் போன்ற பல்வேறு செயல்பாடுகளுக்கு ரூ. 52.01 கோடி செலவிடப்பட்டு இதுவரை 4,76,154 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

**அட்டவணை: 1.5 – 2021–22–ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகள்**

| வ. எண் | இனம் | பயிற்சிகளின் எண்ணிக்கை | பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | உள் மாநில பயிற்சி | 313 | 12,920 |
| 2 | உள்மாவட்ட பயிற்சி | 7,404 | 2,96,160 |
| 3 | மாநிலங்களுக்குள்ளான கண்டுணர் பயணம் | 555 | 27,750 |
| 4 | உள் மாநில கண்டுணர் பயணம் | 1,379 | 68,950 |
| 5 | செயல் விளக்கங்கள் | 6,914 | 6,914 |
| 6 | பண்ணைப் பள்ளிகள் | 473 | 11,825 |

2022–23–ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.14. வேளாண்மை பயிற்சி நிலையங்கள்

#### 1.14.1. உழவர் பயிற்சி நிலையங்கள்

வேளாண்மைத் துறையின்கீழ் 22 உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் விவசாயிகள், விவசாய ஒருங்கிணைப்பாளர், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்களுக்கு பண்ணை மேலாண்மை மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்து வருகின்றன.

#### 1.14.2.மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம் (ஸ்டாமின்)

வேளாண்மைத்துறையில் பணிபுரியும் **விரிவாக்க அலுவலர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு,** வேளாண்மை விரிவாக்கம், நிர்வாகம், மேலாண்மை மற்றும் கணினி தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி மாநில வேளாண்மை விரிவாக்க மேலாண்மை நிலையத்தினால் அளிக்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 1,033 அலுவலர்களுக்கு, ரூ.24.75 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.14.3.மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம் (சமிதி)

வேளாண்மை மற்றும் அதன் தொடர்புடைய துறைகளில் பணிபுரியும் இடைநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண்மை விரிவாக்க மேலாண்மை முதுகலை பட்டயப் படிப்பு (PGDAEM), இடுபொருள் விற்பனையாளர்களுக்கான வேளாண் விரிவாக்க சேவை பட்டயப்படிப்பு (DAESI), பூச்சிக்கொல்லி விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் அவர்களுக்கான பூச்சிக்கொல்லி மேலாண்மை குறித்த சான்றிதழ் படிப்பு, கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி (STRY) மற்றும் சான்றுபெற்ற பண்ணை ஆலோசகர் (Certified Farm Advisor) போன்ற திட்டங்களை ஒருங்கிணைத்து, கண்காணிப்பு செய்து செயல்படுத்தப்படுகின்றன.

2021–22 ஆம் ஆண்டில், 2,282 தொழில்நுட்ப அலுவலர்களுக்கு ரூ. 65.14 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.14.4. நீர் மேலாண்மை பயிற்சி மையம்

மதுரை மாவட்டம், விநாயகபுரத்தில் அமைந்துள்ள இம்மையத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் களப்பணியாளர்களுக்கு நீர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2022–23ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.15. உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சியில் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை 10 முன்னோடி விவசாயிகளை தெரிவு செய்து (இரண்டு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் விவசாயிகள் உட்பட) புதிய வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் வேளாண் திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கங்களும், பயிற்சிகளும் வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் மூலம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

விரிவாக்க அலுவலர்கள் கிராம ஊராட்சிகளுக்கு வருகை புரியும் தேதி மற்றும் இடம் பற்றிய விபரம் முன்னோடி விவசாயிகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படுவதோடு, அவர்களின் வருகையை உழவன் செயலி மூலம் அறிந்து கொள்ளலாம்.

### 1.15.1. கைபேசி செயலி மூலம் கண்காணித்தல்

வேளாண் விரிவாக்க அலுவலர்கள், கிராம ஊராட்சிகளுக்கு பயணம் மேற்கொண்ட விவரங்களை பதிவேற்றம் செய்திடவும் அவர்கள் மேற்கொள்ளும் பயணங்களை வேளாண் உயர் அலுவலர்கள் கண்காணிக்கவும் ஒரு தனி கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளது. அவர்களின் களப்பயணம், மேற்கொள்ள தவறிய களப்பயணம், விவசாயிகள் தெரிவித்த களப்பிரச்சனைகள் மற்றும் கண்காணிப்பு அலுவலர்களின் ஆய்வு ஆகியவற்றை உள்ளடக்கிய, இணையதள முகப்பு (Dash board) உருவாக்கப்பட்டுள்ளது. விரிவாக்கப் பணியாளர்களின் பெயர், தொடர்பு எண், கிராம ஊராட்சியில் அவரின் தொடர்பு மையம் ஆகியவற்றை விவசாயிகள் உழவன் செயலியில் காணலாம்.

### 1.15.2 ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

விவசாயம், விவசாயம் சார்ந்த தொழிலை இலாபகரமாக மாற்ற 2,500 ஊரக இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் கடந்த ஆண்டைப் போலவே 2022-23 ஆம் ஆண்டிலும் வழங்கப்படும்.

### 1.16. தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

இத்திட்டம் உலக வங்கி நிதியுதவியுடன், நீர்ப்பாசன மேலாண்மை, காலநிலை மாற்றத்திற்கு உகந்த இறவைப்பாசன வேளாண்மை ஆகியவற்றின் மூலம் பயிர் உற்பத்தித் திறனைப் பெருக்கும் நோக்கத்திற்காக, 66 துணையாற்றுப் படுகைகளில், 2017-2018 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளுக்கு ரூ.84.15 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், 2021-22ஆம் ஆண்டில் மூன்று கட்டங்களாக, 43 துணையாற்றுப் படுகைகளில் **பயிர் செயல்விளக்கங்கள், இயந்திரக் களையெடுப்பு மற்றும் மாதிரி கிராமங்கள் திட்டம்** ஆகிய இனங்களைக் கொண்டு ரூ.17.17 கோடி நிதி ஒதுக்கீட்டில்

செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 1.17. வேளாண்மைத்துறை சார்ந்த விருதுகள்

#### 1.17.1. செம்மை நெல் சாகுபடிக்கான "திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தித் திறன் விருது".

2011 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவில் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையினை கடைப்பிடித்து, அதிக நெல் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு திரு.சி.நாராயணசாமி நாயுடு அவர்கள் பெயரில் விருது, பரிசுத்தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்விருது 2021–22ஆம் ஆண்டில் சாதனை புரிந்த விவசாயிக்கு நடப்பாண்டில் வழங்கப்படும்.

#### 1.17.2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது:

பாரம்பரிய நெல் இரகங்களைப் பாதுகாத்து, பயிரிடும் விவசாயிகளை ஊக்குவித்திடும் விதமாக 2018–19 ஆம் ஆண்டு முதல் **"பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பாரம்பரிய நெல் பாதுகாவலர் விருது"**

மாநில அளவில் முதல் மூன்று விவசாயிகளுக்குப் பரிசுத்தொகையாக முறையே ஒரு இலட்சம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இவ்விருது 2021-22ஆம் ஆண்டில் சாதனை புரிந்த விவசாயிகளுக்கு நடப்பாண்டில் வழங்கப்படும்.

### 1.17.3.வேளாண்மையில் சிறப்பாக செயலாற்றும் விவசாயிகளுக்குப் பரிசு

விவசாயிகளையும், புதிய கருவிகள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடிக்கும் விவசாயிகளையும் ஊக்குவித்து பரிசு வழங்கிட, 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய மூன்று துறைகளிலும் விவசாயிகளை ஊக்கப்படுத்த, ஒவ்வொரு துறைக்கும் இரண்டு இலட்சம் வீதம், ஆறு இலட்சம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 1.18. பயிர் விளைச்சல் போட்டி

சிறந்த வேளாண் சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக, மாநில மற்றும் மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு ரொக்கப்பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**அட்டவணை 1.6 மாநில மற்றும் மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுத் தொகை**

| பயிர்கள் | முதல் பரிசு (ரூபாய்) | இரண்டாம் பரிசு (ரூபாய்) |
|---|---|---|
| **மாநில அளவில்** | | |
| நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | 25,000/- | 15,000/- |
| சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை. | 15,000/- | 10,000/- |
| **மாவட்ட அளவில்** | | |
| நெல், நிலக்கடலை, கரும்பு மற்றும் பருத்தி | 15,000/- | 10,000/- |
| சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பச்சைப்பயறு மற்றும் துவரை. | 10,000/- | 5,000/- |

## 1.19. மின்னணு வேளாண்மை திட்டம் (Digital Agriculture Scheme)

விளைநிலங்கள் வாரியாக பயிரின் விதைப்பு முதல் அறுவடை செய்து விற்பனை செய்யும்வரை அனைத்து தொழில்நுட்பங்களையும், புவியிடக் குறியீடு **(Geo Tagging)**, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் **(Artificial Intelligence)**, வலைதளத்தினைக் கொண்டு செயல்படும் பொருட்கள் **(Internet of Things)**, **"புவி இடஞ்சார்ந்த தொழில்நுட்பம்" (Geo Spatial Technology),** மற்றும் **"தொலையுணர்தல்" (Remote Sensing)** போன்ற மின்னணு முறைகளைக் கொண்டு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, உயர் மகசூல் மற்றும் அதிக வருமானம் பெற வழிவகை செய்யப்படும்.

விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையங்களில் இடுபொருட்களைப் பெறும்போது, தங்கள் பங்களிப்புத் தொகையினை இ–சலான், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, ஒருங்கிணைந்த பணப் பரிவர்த்தனை **(Unified Payment Interface)** மூலம் செலுத்த வழிவகை செய்யப்படும். இது சோதனை முறையில் ஒரு மாவட்டத்தில் ஒரு வட்டாரத்தில் செயல்படுத்தப்படும்.

## 1.20. பயிர் காப்பீடு

இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் பயிர் மகசூல் இழப்பினை விவசாயிகள் ஈடுகட்டுவதற்கு பயிர் காப்பீடுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-2022ஆம் ஆண்டில் இத்திட்டத்தை **மாநில அரசு மற்றும்** காப்பீட்டு நிறுவனக்களுக்கிடையே, **80:20 பகிர்மான அடிப்படையில் இணை காப்பீட்டுத் திட்டமாக** தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் மற்றும் இப்கோ டோக்கியோ பொது காப்பீட்டு நிறுவனத்தால் 37 மாவட்டங்கள் அடங்கிய 14 தொகுப்புகளில் செயல்படுத்தப்பட்டது. இதுவரை 26.06 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு, 40.63 இலட்சம் ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. **மேலும் 2020-2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சம்பா பருவத்தில் 6.25 இலட்சம் விவசாயிகள் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.**

2021-2022 ஆம் ஆண்டு குளிர்கால பருவத்திற்கான பயிர் காப்பீட்டு பாலிசியை விவசாயிகளின் இல்லங்களுக்கே சென்று

விநியோகம் செய்யும் திட்டம் வேளாண்மை – உழவர் நலத் துறையால் 26.02.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

**மாநில அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக** 2020–2021 **ஆம் ஆண்டில் ரூ.1,950 கோடி தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டதுடன்,** **2021–2022 ஆம் ஆண்டில் ரூ.**2,324 **கோடி காப்பீட்டுக் கட்டண மானியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**தமிழ்நாடு அரசு எடுத்த** சீரிய முயற்சியால் **2020–2021–ஆம் ஆண்டிற்கான** இழப்பீட்டுத் தொகையாக, இதுவரை **ரூ.2,082** கோடி **9.65 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தின் கீழ் 2022–2023 **ஆம் ஆண்டில், ரூ.2,339 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 1.21. வேளாண்மைத் துறை பணியாளர் அமைப்பு

வேளாண்மைத்துறை மொத்தம் 10,575 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

**அட்டவணை: 1.7 – தொழில்நுட்ப அலுவலர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 5 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 37 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் | 132 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 424 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 1,099 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 337 |
| 7 | உதவி விதை அலுவலர் | 509 |
| 8 | உதவி வேளாண்மை அலுவலர் | 2,320 |
| | **மொத்தம் தொழில்நுட்ப அலுவலர்கள்** | **4,863** |

**அட்டவணை: 1.8– அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்**

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | துணை இயக்குநர் | 2 |
| 2 | ஆட்சி அலுவலர் | 34 |
| 3 | கண்காணிப்பாளர் | 185 |
| 4 | உதவியாளர் | 650 |
| 5 | இளநிலை உதவியாளர் | 389 |
| 6 | தட்டச்சர் | 366 |
| 7 | கண்காணிப்பாளர் (பிணையம்) | 149 |
| 8 | உதவியாளர் (பிணையம்) | 249 |
| 9 | இளநிலை உதவியாளர் (பிணையம்) | 573 |
| 10 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–1) | 1 |
| 11 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–2) | 39 |
| 12 | சுருக்குத் தட்டச்சர் (தரம்–3) | 95 |
| 13 | ஓட்டுநர் | 292 |
| 14 | ஆய்வக உதவியாளர் | 143 |
| 15 | பதிவறை எழுத்தர் | 157 |

| வ. எண் | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 16 | அலுவலக உதவியாளர் | 586 |
| 17 | காவலாள் | 1,133 |
| 18 | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 19 | இதர பணியாளர்கள் | 667 |
| | **மொத்தம் தொழில்நுட்பமல்லாத இதர பணியாளர்கள்** | **5,712** |

## 2. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை

தமிழ்நாட்டில், 1979–ஆம் ஆண்டில் 6.6 இலட்சம் எக்டராக இருந்த தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி பரப்பு தற்பொழுது 15.28 இலட்சம் எக்டராக அதிகரித்துள்ளது. இது 1979–இல் தோட்டக்கலைத்துறை என்ற தனித்துறை உருவாகிய பின் ஏற்பட்ட முன்னேற்றமாக கருதப்படுகிறது. தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதாலும், தரப்படுத்துதல், சந்தைபடுத்துதல் மூலம் வேலைவாய்ப்புகளை வழங்குவதாலும், மக்களின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்வதாலும், வேளாண்மையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

காய்கறிகள் மற்றும் பழங்களின் தேவை நாள்தோறும் அதிகரித்து வருவதால், இவைகளின் உற்பத்தியினைப் பெருக்கிடவும், புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு சென்றடையவும், தோட்டக்கலைத்துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக குழித்தட்டு நாற்றுகள் உற்பத்தி, வெண்ணெய்ப்பழம் (Avacado), துரியன், ஸ்டிராபெர்ரி, கொடுக்காப்புளி, டிராகன் போன்ற புதிய பயிர்கள் அறிமுகம், பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் சாகுபடி, நுண்ணீர்ப் பாசனம், நீர்வழி உர மேலாண்மை, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து, பூச்சி, நோய் மேலாண்மை, அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் போன்ற உயர் தொழில்நுட்பங்களும், வீட்டுக் காய்கறித் தோட்டம், மாடித் தோட்டம், பந்தல் காய்கறிகள் சாகுபடி, காளான் வளர்ப்பு, ஊட்டச்சத்துத் தோட்டம் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

## 2.1: தேசிய அளவில் தோட்டக்கலை பயிர்களில் தமிழ் நாட்டின் பங்கு:

தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் சாகுபடி 15.28 இலட்சம் எக்டர் மற்றும் உற்பத்தி 206.39 இலட்சம் மெட்ரிக் டன் ஆகும். பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவை தாளித, மணம் கூட்டும் பயிர்கள், மூலிகை, வாசனை திரவிய பயிர்கள், மலர்கள் உற்பத்தி கடந்த ஆண்டை விட 6.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

## அட்டவணை – 2.1 : தோட்டக்கலை பயிர்கள் – பரப்பு, உற்பத்தி, உற்பத்தி திறன்

| வ.எண் | பயிர் | 2020–21 | | | 2021–22 ( முதல் முன் மதிப்பீடு) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ.டன்) | உற்பத்தி திறன் (மெ. டன்/ எக்டர்) | பரப்பு (இலட்சம் எக்டர்) | உற்பத்தி (இலட்சம் மெ. டன்) | உற்பத்தி திறன் (மெ.டன்/எக்டர்) |
| 1 | பழங்கள் | 3.13 | 56.34 | 18.02 | 3.30 | 60.72 | 18.40 |
| 2 | காய்கறிகள் | 3.34 | 82.02 | 24.49 | 3.83 | 94.03 | 24.55 |
| 3 | சுவை தாளித மணம் கூட்டும் பயிர்கள் | 1.17 | 2.51 | 2.15 | 1.27 | 2.73 | 2.15 |
| 4 | தோட்டப் பயிர்கள் | 7.01 | 57.51 | 8.20 | 7.08 | 58.13 | 8.21 |
| 5 | மூலிகை மற்றும் வாசனை திரவியப் பயிர்கள் | 0.20 | 2.85 | 13.96 | 0.13 | 1.82 | 14.01 |
| 6 | மலர்கள் | 0.43 | 5.16 | 12.03 | 0.45 | 5.45 | 12.10 |
| **மொத்தம்** | | **15.28** | **206.39** | | **16.06** | **222.87** | |

### 2 .1 .1 : பழப்பயிர்கள்

தமிழ்நாட்டில் தோட்டக்கலை பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பில், பழப்பயிர்களின் பரப்பு 20 சதவீதமாகும். பல்வேறு வகையான பழங்கள் சாகுபடி செய்யப்பட்ட போதிலும், முக்கியமாக மா மற்றும் வாழை 2.44 இலட்சம் எக்டர் பரப்பில் பயிரிடப்படுகிறது. இது பழங்களின் மொத்த சாகுபடிப் பரப்பில் 78 சதவீதமாகும். கொய்யா, எலுமிச்சை, தர்பூசணி, நெல்லி, சப்போட்டா, பலா, ஆரஞ்சு, திராட்சை உள்ளிட்ட இதர பழங்கள் 22 சதவீத பரப்பில் பயிரிடப்படுகிறது. தோட்டக்கலை பயிர்களின் மொத்த உற்பத்தியில், பழங்களின் உற்பத்தி 27 சதவீதமாகும்.

மா சாகுபடி பரப்பில், கிருஷ்ணகிரி மாவட்டமும் (31,176 எக்டர்), உற்பத்தியில் திருவள்ளூர் மாவட்டமும் (99,745 மெட்ரிக் டன்) முதலிடம் வகிக்கின்றன.

வாழை சாகுபடி பரப்பு (15,272 எக்டர்) மற்றும் உற்பத்தியில் (5,60,756 மெட்ரிக் டன்) ஈரோடு மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. ஈரோடுக்கு அடுத்தபடியாக சாகுபடி பரப்பில் தூத்துக்குடி மாவட்டம் (8,283 எக்டர்) இரண்டாம் இடத்திலும்,

உற்பத்தியில் தேனி மாவட்டம் (4,21,134 மெட்ரிக் டன்) இரண்டாம் இடத்திலும் உள்ளது.

மாநில அளவில், திருநெல்வேலி மாவட்டம் நெல்லி சாகுபடி பரப்பு (1,208 எக்டர்) மற்றும் உற்பத்தியில் (28,992 மெட்ரிக் டன்) முதல் இடத்தில் உள்ளது.

**அட்டவணை 2.2: பழங்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|
| 1 | மா | 1,46,071 | கிருஷ்ணகிரி (31,176), தருமபுரி (16,509), திண்டுக்கல் (15,816), திருவள்ளூர் (11,059), தேனி (9,385) |
| 2 | வாழை | 97,644 | ஈரோடு(15,272), தூத்துக்குடி (8,283), கோயம்புத்தூர் (7,012), தேனி (6,122), திருச்சிராப்பள்ளி (6,113) |
| 3 | கொய்யா | 12,958 | திண்டுக்கல் (1,938), மதுரை (1,533), விருதுநகர் (1,214), விழுப்புரம் (1,144). கடலூர் (1,087) |
| 4 | எலுமிச்சை | 11,757 | தென்காசி(3,057), திண்டுக்கல் (2,388), திருச்சிராப்பள்ளி (1,023), தேனி(748), தூத்துக்குடி (679) |
| 5 | தர்பூசணி | 10,841 | செங்கல்பட்டு (3,338), விழுப்புரம் (1,886), |

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டர்) |
|---|---|---|---|
| | | | திருவள்ளூர் (1,262), சேலம் (648), தருமபுரி (625) |
| 6 | நெல்லி | 7,297 | திருநெல்வேலி (1,208), தென்காசி (1,063), திண்டுக்கல் (1054), திருப்பூர் (498), தேனி (345) |
| 7 | சப்போட்டா | 5,268 | திண்டுக்கல் (1,006), திருப்பத்தூர் (393), விருதுநகர் (387), கிருஷ்ணகிரி (321), தேனி (314) |
| 8 | பலா | 3,180 | கடலூர் (718), கன்னியாகுமரி (567), திண்டுக்கல் (382), நாமக்கல் (258), புதுக்கோட்டை (226). |
| 9 | ஆரஞ்சு | 2,228 | திண்டுக்கல் (1,337), சேலம் (702), நீலகிரி (93) |
| 10 | திராட்சை | 2,070 | தேனி (1,796), திண்டுக்கல் (195) |
| 11 | இதர பழங்கள் | 13,229 | கன்னியாகுமரி (1,720), ஈரோடு (1,351), திண்டுக்கல் (1,257), திருவண்ணாமலை (1,109), நாமக்கல் (1,067) |

2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற

திட்டங்கள் வாயிலாக ரூ. 71.36 கோடி நிதியில் 31,259 எக்டர் பரப்பில் பழப்பயிர்கள் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**2.1.2 : காய்கறிகள்**

தமிழ்நாட்டில், தோட்டக்கலை பயிர்களின் மொத்த சாகுபடி பரப்பில் காய்கறி பயிர்களின் சாகுபடி பரப்பு 22 சதவீதமாகவும், உற்பத்தி 40 சதவீதமாகவும் உள்ளது. தருமபுரி, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் காய்கறி பயிர்கள் அதிகமாக பயிரிடப்படுகின்றன.

காய்கறி பயிர்கள் சாகுபடி பரப்பில் தருமபுரி மாவட்டம் (44,970 எக்டர்) முதலிடமும், கிருஷ்ணகிரி மாவட்டம் (32,800 எக்டர்) இரண்டாவது இடமும், நாமக்கல் மாவட்டம் (29,616 எக்டர்) மூன்றாவது இடமும் வகிக்கின்றன.

மொத்த காய்கறி சாகுபடி பரப்பில், வெங்காயம், தக்காளி, கத்தரி, வெண்டை, கீரை வகைகள், பீன்ஸ், கேரட், பாகல் , அவரை ஆகிய பயிர்கள் 59 சதவீதம் பயிரிடப்படுகிறது.

## அட்டவணை 2.3 : காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 1 | வெங்காயம் | 53,891 | பெரம்பலூர் (9,589), நாமக்கல் (5,764), திருச்சிராப்பள்ளி (5,540), தூத்துக்குடி (5,426), திண்டுக்கல் (4,314) |
| 2 | தக்காளி | 44,918 | தருமபுரி (13,542), கிருஷ்ணகிரி (10,845), சேலம் (5,000), திண்டுக்கல் (2,501), திருப்பூர் (2,399) |
| 3 | கத்தரி | 26,873 | தருமபுரி (4,477), சேலம் (3,515), திருவண்ணாமலை (2,817), கிருஷ்ணகிரி (1,936)கள்ளக்குறிச்சி , (1,076) |
| 4 | வெண்டை | 22,876 | தருமபுரி (4,883), சேலம்(3,739), திருவண்ணாமலை (2,187), கள்ளக்குறிச்சி (1,004), இராணிப்பேட்டை (900) |
| 5 | முருங்கை | 18,199 | திண்டுக்கல் (4,354), தேனி (3,078), கரூர் (2,482), தூத்துக்குடி (1,661), அரியலூர் (1,628) |
| 6 | கீரை வகைகள் | 10,267 | கிருஷ்ணகிரி (2,440), சேலம் (1,242), வேலூர் (913), திருவள்ளூர் (790), நாமக்கல் (706) |
| 7 | பீன்ஸ் | 6,796 | கிருஷ்ணகிரி (4,439), திண்டுக்கல் (1,113), நீலகிரி (329), சேலம் (261), ஈரோடு (243) |

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 8. | கேரட் | 5,659 | நீலகிரி (3,728), திண்டுக்கல் (978), கிருஷ்ணகிரி (946) |
| 9 | பாகல் | 5,069 | தருமபுரி (1,072), சேலம் (684), கோயம்புத்தூர் (532), திருவண்ணாமலை (274), கிருஷ்ணகிரி (218) |
| 10 | அவரை | 4,278 | தர்மபுரி(1,292), சேலம் (742), திண்டுக்கல் (673), தேனி (426), கிருஷ்ணகிரி (337) |
| 11 | இதர காய்கறிகள் | 44,613 | கிருஷ்ணகிரி(6,973), திண்டுக்கல் (4,900), தர்மபுரி (4,727), சேலம் (3,208) நீலகிரி ( 2,986) |

காய்கறிகளின் தேவையை கருத்தில் கொண்டு, உற்பத்தியினை பெருக்கிட 2022–23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மானாவாரி பகுதி மேம்பாடு, மாநில தோட்டக்கலை வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின் வாயிலாக காய்கறி பயிர்களின் சாகுபடிப் பரப்பினை 60,959 எக்டரில் அதிகரிக்க ரூ.118.58 கோடி நிதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.1.3 : மலர்கள்

தமிழ்நாட்டில் முக்கிய மலர்களான மல்லிகை, முல்லை, பிச்சி, சம்பங்கி, ரோஜா, செவ்வந்தி, செண்டு மல்லி, வாடாமல்லி, கோழிக்கொண்டை, அரளி ஆகியன அதிக அளவில் பயிரிடப்படுகிறது. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பில், மலர்களின் சாகுபடிப் பரப்பு 2.8 சதவீதமாகவும், உற்பத்தியில் 2.5 சதவீதமாகவும் உள்ளது.

மலர்கள் சாகுபடிப் பரப்பில், மல்லிகை, முல்லை, காக்கடான் மற்றும் பிச்சிப்பூ 40 சதவீதமும், சம்பங்கி 16 சதவீதமும் பயிரிடப்படுகிறது.

**அட்டவணை 2 . 4 : மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்**

| வ.ண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 1 | மல்லிகை | 13,719 | மதுரை (1,666), தருமபுரி (1,394), திருவள்ளூர் (1,139), ஈரோடு (1,138), சேலம் (909) |
| 2 | சம்பங்கி | 7,026 | தருமபுரி(2,936), திருவண்ணாமலை (1,626), ஈரோடு (344), திண்டுக்கல் (311), திருவள்ளூர்(187) |
| 3 | செவ்வந்தி | 6,913 | தருமபுரி (2,448), கிருஷ்ணகிரி (2,398),சேலம்(1,075), திருவண்ணாமலை (508) |

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 4 | ரோஜா | 3,019 | கிருஷ்ணகிரி (1,298), தருமபுரி(554), திருவண்ணாமலை(199), நாமக்கல் (145), திண்டுக்கல் (105) |
| 5 | அரளி | 2,303 | சேலம் (868), தருமபுரி (517), நாமக்கல் (420), திண்டுக்கல் (322) |
| 6 | இதர மலர்கள் | 9,940 | கிருஷ்ணகிரி(1,687), திருவண்ணாமலை (1,467), தர்மபுரி(1,187), திண்டுக்கல் (807), சேலம் ( 547) |

2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் 4 இலட்சம் சதுர மீட்டரில் பசுமை குடில்கள் மற்றும் நிழல் வலை கூடங்கள் அமைத்து, மலர்கள் சாகுபடி செய்து விவசாயிகள் கூடுதல் மகசூல் மற்றும் உயர் தரமான மலர்களைப்பெற ரூ.17.57கோடி நிதியில் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், 2022-23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின்

மூலம் ரூ. 8.83 கோடி நிதியில் ,2,805 எக்டரில் மலர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட உள்ளது.

### 2 .1.4 : சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள்

தமிழ்நாட்டில் மிளகாய், மஞ்சள், புளி, கொத்தமல்லி, மிளகு, ஏலக்காய், கிராம்பு, இஞ்சி, பூண்டு போன்ற சுவைதாளித, மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடியில், சுவை தாளித, மணம் கூட்டும் பயிர்களின் சாகுபடிப் பரப்பு 7.5 சதவீதமாகவும், உற்பத்தி 1.2 சதவீதமாகவும் உள்ளது.

**அட்டவணை 2.5 : சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள்**

| வ.ண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 1 | மிளகாய் | 54,231 | இராமநாதபுரம் (15,939), தூத்துக்குடி (13,689), சிவகங்கை (5,064), திருவண்ணாமலை (2,344), சேலம் (1,643) |

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் மற்றும் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 2 | மஞ்சள் | 20,771 | தருமபுரி (6,704), ஈரோடு (4,251), சேலம் (3,302), கள்ளக்குறிச்சி(2154). நாமக்கல் (1,396) |
| 3 | புளி | 14,496 | திண்டுக்கல் (3,294), தேனி(1,607), தருமபுரி (1,305) மதுரை (1,146), கன்னியாகுமரி (907) |
| 4 | கொத்த மல்லி | 9,334 | தூத்துக்குடி (3,672), இராமநாதபுரம் (1,916), விருதுநகர் (1,797), திருப்பூர்(682), தருமபுரி (414), |
| 5 | மிளகு | 6,604 | நாமக்கல் (2,348), திண்டுக்கல் (1,224), சேலம் (1,181), நீலகிரி (984), கன்னியாகுமரி (319) |
| 6 | இதர சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் | 11,299 | கோவை(2,194), நீலகிரி(1,807), தேனி(1,657), திண்டுக்கல்(959), கன்னியாகுமரி (906) |

2022–23 ஆம் ஆண்டில், தேசிய தோட்டக்கலை இயக்கம், மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களின்

வாயிலாக ரூ.10.88 கோடி நிதியில் 7,250 எக்டர் பரப்பில் சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது.

**2.1.5 : தோட்டப்பயிர்கள்**

தமிழ்நாட்டில், மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடி பரப்பில், தோட்டப் பயிர்களின் சாகுபடிப் பரப்பு 46 சதவீதமாகவும், உற்பத்தி 28 சதவீதமாகவும் உள்ளது.

தோட்டப்பயிர்களில் தென்னை, சாகுபடி பரப்பில் 63 சதவீதமும், உற்பத்தியில் 65 சதவீதமும் பங்களிக்கிறது. தென்னைக்கு அடுத்தப்படியாக முந்திரி, தேயிலை, காப்பி, பாக்கு, கோகோ மற்றும் இரப்பர் ஆகியன அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

**அட்டவணை 2.6: தோட்டப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்**

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 1 | முந்திரி | 84,924 | அரியலூர் (30,524), கடலூர் (29,483), புதுக்கோட்டை (5,929), விழுப்புரம் (3,031), சிவகங்கை (2,838) |

| வ. எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|
| 2 | தேயிலை | 69,743 | நீலகிரி (55,910), கோயம்புத்தூர் (11,191), தேனி (1,621), திருநெல்வேலி (804), கன்னியாகுமரி (214) |
| 3 | காப்பி | 33,360 | திண்டுக்கல் (11093), நீலகிரி (7,457), சேலம் (7,008), தேனி (3,107), கோயம்புத்தூர் (2,248) |
| 4 | பாக்கு | 7,762 | கோயம்புத்தூர் (2,282), சேலம் (2,006), ஈரோடு (802), தருமபுரி (737), நாமக்கல் (681) |
| 5 | கோகோ | 2,170 | கோயம்புத்தூர் (748), தருமபுரி (433), சேலம் (238), திண்டுக்கல்(135) |
| 6 | இதர தோட்டப்பயிர்கள் | 5,03,068 | கோவை(88,527), திருப்பூர் (63,174), கன்னியாகுமரி (53,940), தஞ்சாவூர் (41,868), திண்டுக்கல் (28,873) |

2022-23 ஆம் ஆண்டில், முந்திரி சாகுபடி 5,160 எக்டர் பரப்பில் ரூ. 9.95 கோடி நிதியில் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம், மானாவரி பகுதி மேம்பாடு ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

## 2.1.6 : மூலிகை மற்றும் வாசனைப் பயிர்கள்

தமிழ்நாட்டில் மொத்த தோட்டக்கலைப் பயிர்களின் சாகுபடிப் பரப்பில், மூலிகை மற்றும் வாசனைப் பயிர்களின் சாகுபடி, உற்பத்தி ஒரு சதவிகிதமாக உள்ளது.

தமிழ்நாட்டில் மூலிகை, வாசனை திரவியப் பயிர்கள் பரப்பில் திண்டுக்கல் (4,955 எக்டர்) மாவட்டம் முதலிடத்திலும், அதனைத் தொடர்ந்து திருப்பூர் (3,917 எக்டர்), தருமபுரி (2,023 எக்டர்), திருவண்ணாமலை (1,992 எக்டர்), கரூர் (1,315 எக்டர்) ஆகிய மாவட்டங்கள் உள்ளன.

**அட்டவணை 2.7: மூலிகை மற்றும் வாசனைப்பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யும் மாவட்டங்கள்**

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு & (எக்டரில்) |
|---|---|---|---|
| 1 | கண்வலிக்கிழங்கு | 5,134 | திண்டுக்கல் (2,370), திருப்பூர் (2,037), கரூர் (603) |
| 2 | மருந்துக்கூர்க்கன் | 3,403 | கள்ளக்குறிச்சி (1,151), சேலம் (1,011), திருவண்ணாமலை (779) |

| வ.எண் | பயிர்கள் | பரப்பு (எக்டர்) | அதிக அளவில் பயிர் செய்யும் மாவட்டங்கள் பரப்பு & (எக்டரில்) |
|---|---|---|---|
| 3 | பால்மரோசா | 791 | திருவண்ணாமலை (546), தருமபுரி (202) |
| 4. | எலுமிச்சை புல் | 363 | திருவண்ணாமலை (360) |
| 5. | இதர மூலிகை, வாசனைப் பயிர்கள் | 10,748 | திண்டுக்கல் (2,584), திருப்பூர் (1,879), தர்மபுரி (1,805), விருதுநகர் (1,045), கரூர் (709) |

## 2.2: ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

### 2.2.1 : சிக்கன நீர் பாசனத் திட்டம் (Scheme for judicious use of irrigation water)

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், உற்பத்தியை பெருக்கவும், தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, அதிக பரப்பளவை சாகுபடிக்கு கொண்டுவர, நுண்ணீர்ப் பாசன திட்டம் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை மேலும் ஊக்குவிக்கும் முயற்சியாக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும்,

இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டில், ரூ.960 கோடி நிதியில், ஒரு இலட்சம் எக்டர் பரப்பளவில் தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களில், நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை ஏற்படுத்தி, பயிர் உற்பத்தி திறனைப் பெருக்கி, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.2 : ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கம் - தேசிய தோட்டக்கலை இயக்கம் (MIDH-National Horticulture Mission)

இத்திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி இயக்கத்தின் துணை திட்டமாக 2014-15 ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற ஒன்றிய, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 26 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், பழங்கள், காய்கறிகள், தோட்டப்பயிர்கள், சுவை தாளித மற்றும் மணம் கூட்டும் பயிர்கள், மூலிகை மற்றும் வாசனை திரவிய பயிர்கள் மற்றும் மலர்கள் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் மூலம் கூடுதல் வருமானம்

கிடைக்கும் தொழில்நுட்பங்களான காளான் வளர்ப்பு, மண்புழு உர உற்பத்தி, தேனீ வளர்ப்பு ஆகியவற்றை மேற்கொள்ள விவசாயிகளுக்கு பயிற்சியும், மானியமும் வழங்கப்படுகிறது.

2021-22 ஆம் ஆண்டில், ரூ.125 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் ரூ.53.27 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் 24,188 எக்டரில் பரப்பு விரிவாக்கமும், 17,700 எக்டரில் இயற்கை முறையில் பயிர் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெண்களை தொழில் முனைவோர்களாக முன்னேற்றுவதற்காக, சிறிய அளவிலான காளான் உற்பத்திகூடம் அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. பலா சாகுபடி பரப்பினை அதிகரிக்கவும், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் பதப்படுத்துதலை மேம்படுத்துவதற்காகவும். கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டாரத்தில், பனிக்கன்குப்பம் கிராமத்தில், பலா சிறப்பு மையம் ஐந்து கோடி ரூபாய் நிதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.340.31 கோடி நிதியில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 2 .2. 3 : தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம்
## [ National Agriculture Development Programme (NADP)]

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் 2021-22 ஆம்ஆண்டில் ரூ. 61.05 கோடி நிதியில், இயற்கை வேளாண்மை முறையில் 40,000 எக்டர் பரப்பில் காய்கறிகளை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கியும், தரமான கொடி வகை காய்கறிகள் மற்றும் பழங்களை உற்பத்தி செய்திட 638 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்திடவும், காய்கறி சாகுபடி மேற்கொள்ளாத கிராமங்களில் 1,250 எக்டர் பரப்பில், காய்கறி சாகுபடியை ஊக்குவிக்கவும் செயல்படுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.86.39 கோடி நிதியில், தோட்டக்கலை பயிர்களில் இயற்கை வேளாண் சாகுபடி முறையை 41,000 எக்டர் பரப்பில் ஊக்குவித்தல், குறைந்த மகசூல் தரும் பயிருக்கு மாற்றாக அதிக மகசூல் தரும் தோட்டக்கலைப் பயிர்களை 8,381 எக்டர் பரப்பில் பயிரிடுதல், பாரம்பரிய காய்கறி இரகங்களை 1,000 எக்டர் பரப்பில் சாகுபடி செய்ய ஊக்குவித்தல், பூண்டு, மங்குஸ்தான், வெண்ணைப்பழம், முருங்கை, வெங்காயம் முதலிய தோட்டக்கலைப் பயிர்களை

5,500 எக்டர் பரப்பில் சாகுபடி செய்தல், 200 எக்டர் பரப்பில் நிரந்தர பந்தல் அமைத்து சாகுபடி மேற்கொள்ளுதல், வாழை, தக்காளி, பீன்ஸ் போன்ற பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 3,000 எக்டரில் 'Y' வடிவ பந்தல் அமைத்தல் போன்ற திட்டக்கூறுகளுடன் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.4 : நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA) – மானாவாரி பகுதி மேம்பாடு [Rainfed Area Development – RAD]

தோட்டக்கலைப்பயிர்கள் சாகுபடியை, கால்நடை, மீன்வளர்ப்பு, வனவியல், வேளாண்மை போன்றவற்றுடன் ஒருங்கிணைத்து, விளை பொருட்களை மதிப்பு கூட்டி, வருமானத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2021–22 ஆம் ஆண்டில், மானாவாரி பகுதி மேம்பாடு 23 மாவட்டங்களில் ரூ. 16.24 கோடி நிதியில், 4,400 அலகுகள் அமைத்து, தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு, ஆடு வளர்ப்பு போன்றவை அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணையம், மண்புழு உரப்படுக்கைகள், பயிற்சிகள்

மற்றும் செயல்விளக்கங்கள் போன்ற செயல்பாடுகளுடன் செயல்படுத்தப்பட்டது.

2022-23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.25.45 கோடி நிதியில், தோட்டக்கலை சார்ந்த பண்ணையம், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, தீவனப்பயிர்கள், தேனீ வளர்ப்பு, மண்புழு உரப்படுக்கைகள் அடங்கிய ஒருங்கிணைந்த பண்ணையம் 5,000 அலகுகள் அமைத்து, அலகு ஒன்றுக்கு ரூ. 50,000 மானியத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2.2.5:தேசிய மூங்கில் இயக்கம் (National Bamboo Mission – NBM)**

வனம் அல்லாத, அரசு மற்றும் தனியார் நிலங்களில் மூங்கில் தோட்டங்களின் பரப்பளவை அதிகரித்தல், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை தொழில்நுட்பங்களை ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களுடன் ஒன்றிய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், ரூ. 2.91 கோடி நிதியில் 614 எக்டர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. மேலும், 2022-23 ஆம்

ஆண்டில், ரூ.3.75 கோடி நிதியில் 850 எக்டர் பரப்பில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.2.6:மாநில தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம் (State Horticulture Development Scheme – SHDS)

தேசிய தோட்டக்கலை இயக்கம் செயல்படுத்தப்படாத மாவட்டங்களில் தோட்டக்கலை பயிர்களின் பரப்பு விரிவாக்கத்தில் சிறப்பு கவனம் செலுத்திட இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்ட திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டது. இதில் இரண்டு இலட்சம் காய்கறி விதை தளைகள், ஒரு இலட்சம் மாடித் தோட்ட தளைகள் மற்றும் இரண்டு இலட்சம் ஊட்டச்சத்து தோட்ட தளைகள் ஆகியவை 75 சதவீத மானியத்தில் அனைத்து மாவட்டங்களிலும் இணையவழி மூலம் விண்ணப்பித்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

2021-22 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 41.53 இலட்சம் நிதியில் செயல்படுத்தப்பட்டது. 2022-23ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.33.38 கோடி நிதியில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 2.2.7: கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் – 2022–23 [Kalaignarin All Village Integrated Agriculture Development Programme 2022–23 – KAVIADP]

2021–22 வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் அறிவித்தபடி, தமிழ்நாட்டில் ஐந்தாண்டு காலத்தில் அனைத்து கிராமங்களிலும், விவசாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்து, விவசாய தன்னிறைவு அடையும் வகையில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டம் மாநில நிதியில் செயல்படுத்தப்படுகிறது.

இச்சீரிய திட்டம் 2021–22–இல் 1,997 கிராமங்களில் ரூ.5.28 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2022–23ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 3,204 கிராமங்களில் தோட்டக்கலை சார்ந்த இனங்கள் ரூ. 8.27 கோடி நிதியில் செயல்படுத்தப்படும்.

**2.2.8: தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் [Tamil Nadu Irrigated Agriculture Modernization Project – TNIAMP]**

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டம் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு அரசினால் செயல்படுத்தப்படும் ஒரு பல்நோக்கு திட்டமாகும். தேர்வு செய்யப்பட்ட உபவடி நீர் நிலப்பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களில் இருந்து குறைந்த நீர் தேவைப்படும் அதிக வருவாய் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை உயர் மற்றும் நீர் மேலாண்மை தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாகுபடியினை அதிகப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

2021–22 ஆம் ஆண்டில், 5,486 எக்டர் பரப்பில் பயிர் செயல்விளக்கங்களும், 2,073 எக்டர் பரப்பில் நுண்ணீர் பாசன அமைப்புகளும், மாதிரி கிராமங்களுக்கான பணிகளும் ரூ.35.62 கோடி நிதியில் மேற்கொள்ளப்பட்டது.

2022–23 ஆம் ஆண்டில், இத்திட்டம் ரூ.45.57 கோடி நிதியில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.2.9:பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் [Pradhan Mantri Fasal Bima Yojana – PMFBY]

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் அறிவிக்கை செய்யப்பட்ட குறுவட்டங்களில், அறிவிக்கை செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு விவசாயிகள் பயிர் காப்பீடு செய்யலாம்.

**ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை – காரீப் பருவம் – 13 பயிர்கள் –** வாழை, மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், உருளைக்கிழங்கு, வெங்காயம், சிவப்பு மிளகாய், வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கேரட், பூண்டு, இஞ்சி, தக்காளி.

**அக்டோபர் முதல் மார்ச் வரை – ராபி பருவம் – 13 பயிர்கள்** – வாழை, மரவள்ளிக்கிழங்கு, உருளைக்கிழங்கு, வெங்காயம், சிவப்பு மிளகாய், வெண்டை, கத்தரி, முட்டைக்கோஸ், கேரட், பூண்டு, இஞ்சி, கொத்தமல்லி, தக்காளி.

தோட்டக்கலைப் பயிர்களுக்கு இரண்டு பருவங்களிலும் காப்பீட்டுத் தொகையில் ஐந்து சதவீதத்தை பயிர் காப்பீட்டு கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும்.

2021–22 ஆம் ஆண்டில், 1,38,466 விவசாயிகள் 42,603 எக்டர் பரப்பளவில் அறிவிப்பு செய்யப்பட்ட தோட்டக்கலைப் பயிர்களில் பயிர் காப்பீடு செய்துள்ளனர்.

**2.2.10: நிலையான வளர்ச்சி இலக்குகள் [Sustainable Development Goal]**

2020 – 21 ஆம் நிதியாண்டில் 3,000 புதிய உழவர் ஆர்வலர் குழுக்கள், 29,647 எக்டர் பரப்பளவில் அங்கக தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி மற்றும் 2,14,216 எக்டர் பரப்பளவிற்கு நுண்ணீர் பாசன அமைப்புகள் ஆகிய நிலையான வளர்ச்சி இலக்குக்கான குறியீடுகள் அடையப்பெற்றுள்ளன.

மேலும், இலக்குகளில் கோரப்பட்ட 82.02 இலட்சம் மெட்ரிக் டன் காய்கறிகள், 56.33 இலட்சம் மெட்ரிக் டன் பழங்கள் மற்றும் 2.51 இலட்சம் மெட்ரிக் டன் வாசனை, சுவைதாளிதப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 2.3: தோட்டக்கலைத்துறையின் கட்டமைப்பு வசதிகள்

### 2.3.1:அரசு தோட்டக்கலை பண்ணைகள் [State Horticulture Farms – SHF]

தமிழ்நாட்டில், தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறையின் கீழ், 36 மாவட்டங்களில், 79 அரசு தோட்டக்கலை பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன (இணைப்பு 1). தோட்டக்கலைப் பயிர்களின் இனத்தூய்மையான, தரமான நடவுசெடிகளை சரியான நேரத்தில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலையில் விநியோகம் செய்வதே அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் முக்கிய நோக்கமாகும். இப்பண்ணைகள் விவசாயிகளுக்கு சமீபத்திய தொழில்நுட்பங்களை விளக்கும் "மாதிரி செயல்விளக்க பண்ணைகளாக" திகழ்வதுடன், நிலமற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கி வருகிறது.

2021-22 ஆம் ஆண்டில், 37.28 கோடி நடவுச்செடிகள் அரசு தோட்டக்கலை பண்ணைகள் மற்றும் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதில் 25.37 கோடி குழித்தட்டு காய்கறி மற்றும் மலர் நாற்றுகளும் அடங்கும்.

2022-23 ஆம் ஆண்டில் 40.9 கோடி நடவுச்செடிகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

2021-22 ஆம் ஆண்டில், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 328 மெட்ரிக் டன் காய்கறி விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல், மாடித்தோட்டம் அமைத்தல் மூலம் காய்கறி விதை தளைகளாக பல்வேறு திட்டங்கள் வாயிலாக விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

2022-23 ஆம் ஆண்டில், 350 மெ.டன் தக்காளி, கத்தரி, வெண்டை, வெங்காயம், கீரை வகைகள், பூசணி, புடல், பாகல், பீர்க்கன், சுரை, சாம்பல் பூசணி, முருங்கை, கொத்தவரை, அவரை, பட்டாணி, பீன்ஸ், காராமணி, உருளைக்கிழங்கு போன்ற பல்வேறு வகையான உண்மை நிலை காய்கறி விதைகளை அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் மாநில மரமாகிய பனை மரம், வேறுபட்ட மண் வகைகளிலும், புயல், சுழல் காற்று மற்றும் வறட்சி போன்ற பல்வேறு காலநிலைகளை தாங்கி வளரும் தன்மையுடையது. பனைமரத்தின் முக்கியத்துவம் கருதி 2021-22 ஆம் ஆண்டில், ஒரு இலட்சம் பனங்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய, அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

### 2 . 3 . 1. 1 : மண்புழு உர உற்பத்தி

மண்புழு உரமானது, மண்ணில் நுண்ணுயிர் செயல்பாடு மற்றும் அங்கக தன்மையை அதிகரித்து காற்றோட்டம், நீர் தேக்க சக்தி ஆகியவற்றை கூட்டுவதன் மூலம் தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி மகசூலை அதிகரிக்கச் செய்கிறது. 2021-22ஆம் ஆண்டில் 823 மெட்ரிக் டன் மண்புழு உரம் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 2022-23 ஆம் ஆண்டில் 1,000 மெட்ரிக் டன் மண்புழு உரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.3.2 : பூங்காக்கள் மற்றும் தோட்டங்கள்

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, எட்டு மாவட்டங்களில் 24 பூங்காக்களை பராமரித்து வருகிறது. இவை பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு மையங்களாகத் திகழ்வதுடன், தாவரவியல் மாணவர்களுக்கு பயிலும் களமாகவும் விளங்குகின்றன (இணைப்பு 2).

2021–22ஆம் ஆண்டில், நாகப்பட்டினம் மாவட்டம் நாகூரில் இரண்டு கோடி ரூபாய் நிதியில் நெய்தல் பூங்கா அமைக்கவும், கடலூர் மாவட்டம், வடலூரில் ஒரு கோடி ரூபாய் நிதியில் தோட்டக்கலை பூங்கா அமைக்கவும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### 2.3.3 : நில எழிலூட்டும் பிரிவு (Landscape Wing):

மாநகரங்களில் வசிக்கும் மக்களின் நிலஎழிலூட்டும் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, திட்ட வடிவமைப்பு மற்றும் செயலாக்கத்திற்கு தொழில்நுட்ப அலுவலர்களை கொண்டு நிலஎழிலூட்டும் பிரிவை உருவாக்கியுள்ளது. இப்பிரிவானது பொதுமக்கள், அரசுத்துறை அலுவலகங்கள், தனியார் நிறுவனங்களில் புதிய நிலஎழில் வடிவமைப்பை

உருவாக்குவதிலும், ஏற்கனவே உள்ள எழில் வடிவமைப்பை மேலும் அழகுபடுத்துவதிலும், மாடித் தோட்டம் போன்ற அமைப்புக்களை தேவைக்கேற்ப அமைத்துக் கொடுப்பதிலும் ஈடுபட்டு வருகிறது.

நில எழிலூட்டல் பிரிவின் மூலம், 2021–22ஆம் ஆண்டில் எழும்பூர் அருங்காட்சியகத்தில் தோட்டம் அமைக்கும் பணியும், ஆளுநர் மாளிகையில் புல்தரை புதுப்பிக்கும் பணியும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2022–23ஆம் ஆண்டில், தஞ்சாவூர் விமானபடைத்தளம் மற்றும் செம்மஞ்சேரி குடிசை மாற்று வாரியத்தில் நிலஎழிலூட்டல் ரூ.0.8 கோடி மதிப்பில் பணிகள் தொடங்கப்பட உள்ளது.

### 2.3.4 : மகத்துவ மையங்கள்

உயர் தொழில் நுட்பங்களுடன் கூடிய செயல் விளக்கத்திடல்கள் அமைக்கவும், விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கவும், ஆறு இடங்களில் பயிர்களுக்கு ஏற்ப மகத்துவ மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.8: மகத்துவ மையங்கள் விபரம்**

| வ. எண் | மகத்து மையம் | இடம் |
|---|---|---|
| 1. | கொய் மலர்கள் | தளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 2. | காய்கறிகள் | ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் மாவட்டம். |
| 3. | மலை காய்கறிகள் | நஞ்சநாடு, நீலகிரி மாவட்டம். |
| 4. | வெப்ப மண்டல பழப்பயிர்கள் | கஞ்சநாயக்கன்பட்டி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 5. | தேனீ வளர்ப்பு | பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம். |
| 6. | பாரம்பரிய மலர்கள் | திருப்பரங்குன்றம், மதுரை மாவட்டம். |

### 2.3.5 : தோட்டக்கலை பயிற்சி மையங்கள் (Horticulture Training Centre)

சென்னை – மாதவரம், புதுக்கோட்டை – குடுமியான்மலை, கிருஷ்ணகிரி – தளி, மற்றும் நீலகிரி – உதகமண்டலம் ஆகிய நான்கு இடங்களில் தோட்டக்கலை – மலைப்பயிர்கள் துறையின் கீழ் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன.

### 2.3.6 : தோட்டக்கலை பட்டயப் படிப்பு

தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிலையம் – மாதவரம், சென்னை, தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் – தளி, கிருஷ்ணகிரி மற்றும் காய்கறி மகத்துவமையம்– ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் ஆகிய மூன்று இடங்களில், ஆண்டு தோறும் தலா 50 மாணவர்களுக்கு ஈராண்டு பட்டயப் படிப்பு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

2021ஆம் ஆண்டு முதல், இப்பட்டயப் படிப்பிற்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் இணைப்பு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### 2.4. : பணியாளர்கள் விபரம்

தோட்டக்கலைத் துறையின் கீழ் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**அட்டவணை 2.9: பணியாளர் விபரம்**

| வ. எண் | பணியிட விபரம் | மொத்த பணியிடம் |
|---|---|---|
| **அ.** | **தொழில்நுட்ப அலுவலர்கள்** | |
| 1. | தோட்டக்கலை கூடுதல் இயக்குநர் | 2 |
| 2. | தோட்டக்கலை இணை இயக்குநர் | 6 |
| 3. | தோட்டக்கலை துணை இயக்குநர் | 43 |
| 4. | தோட்டக்கலை உதவி இயக்குநர் | 398 |
| 5. | தோட்டக்கலை அலுவலர் | 404 |
| 6. | தோட்டக்கலை துணை அலுவலர் | 123 |
| 7. | உதவி தோட்டக்கலை அலுவலர் | 1,625 |
| 8. | உதவி விதை அலுவலர் | 5 |
| | **மொத்தம்** | **2606** |
| **ஆ.** | **அமைச்சுப் பணியாளர்கள்** | |
| 9. | இதர அலுவலர் பணியிடங்கள் விவரம் (துணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை கணக்கு அலுவலர், ஆட்சி அலுவலர், கணக்கு அலுவலர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 1,222 |
| | **மொத்தம்** | **3,828** |

# இணைப்பு–1
## மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணைகள்

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப் -பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | கீழப்பழுவூர் | 2018 | 7.58 |
| 2 | சென்னை | மாதவரம் | 1980 | 4.38 |
| 3 | கோயம்புத்தூர் | ஆனைக்கட்டி | 1986 | 12.00 |
| 4 | கோயம்புத்தூர் | கண்ணம்பாளையம் | 2001 | 11.20 |
| 5 | கடலூர் | நெய்வேலி | 1985 | 39.53 |
| 6 | கடலூர் | விருத்தாச்சலம் | 1975 | 10.43 |
| 7 | தர்மபுரி | போளயம்பள்ளி | 2013 | 2.73 |
| 8 | தர்மபுரி | வட்டார நாற்றங்கால் மையம், தர்மபுரி | 2020 | 0.40 |
| 9 | திண்டுக்கல் | சந்தையூர் | 2018 | 15.20 |
| 10 | திண்டுக்கல் | நீலமலைக்கோட்டை | 2020 | 0.40 |
| 11 | திண்டுக்கல் | கொடைக்கானல் | 1961 | 1.73 |
| 12 | திண்டுக்கல் | தாண்டிக்குடி | 1985 | 5.45 |
| 13 | திண்டுக்கல் | சிறுமலை | 1980 | 200.04 |
| 14 | திண்டுக்கல் | காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார் சத்திரம் | 2012 | 5.33 |
| 15 | திண்டுக்கல் | கொத்தபுள்ளி | 2021 | 5.87 |
| 16 | ஈரோடு | பகுத்தம்பாளையம் | 2018 | 10.00 |
| 17 | செங்கல்பட்டு | ஆத்தூர் | 1961 | 12.24 |
| 18 | காஞ்சிபுரம் | விச்சந்தாங்கல் | 1982 | 23.25 |
| 19 | காஞ்சிபுரம் | மேல்கதிர்பூர் | 1982 | 42.63 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப் -பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 20 | காஞ்சிபுரம் | மேலொட்டிவாக்கம் | 1982 | 20.60 |
| 21 | காஞ்சிபுரம் | பிச்சிவாக்கம் | 1982 | 34.00 |
| 22 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி | 1922 | 12.64 |
| 23 | கன்னியாகுமரி | பேச்சிப்பாறை | 1967 | 6.00 |
| 24 | கரூர் | முதலைப்பட்டி | 1978 | 23.96 |
| 25 | கிருஷ்ணகிரி | திம்மாபுரம் | 1952 | 9.62 |
| 26 | கிருஷ்ணகிரி | ஜீனூர் | 1980 | 123.45 |
| 27 | கிருஷ்ணகிரி | கொய்மலர்கள் மகத்துவ மையம், தளி | 2012 | 22.00 |
| 28 | மதுரை | பூஞ்சுத்தி | 2012 | 5.76 |
| 29 | மதுரை | பாரம்பரிய மலர்களுக்கான மகத்துவ மையம் . திருப்பரங்குன்றம் | 2019 | 2.65 |
| 30 | நாகப்பட்டினம் | வண்டுவாஞ்சேரி | 2018 | 6.54 |
| 31 | நாகப்பட்டினம் | புஷ்பவனம் | 2021 | 10.25 |
| 32 | நாமக்கல் | செம்மேடு | 1974 | 11.60 |
| 33 | நாமக்கல் | படசோலை | 1989 | 22.67 |
| 34 | பெரம்பலூர் | வெங்கலம் | 2018 | 4.72 |
| 35 | புதுக்கோட்டை | குடுமியான்மலை | 1974 | 118.68 |
| 36 | புதுக்கோட்டை | வல்லத்திராக் கோட்டை | 1977 | 521.20 |
| 37 | புதுக்கோட்டை | நாட்டுமங்கலம் | 1985 | 53.02 |
| 38 | இராமநாதபுரம் | ஓரியூர் | 2013 | 14.77 |
| 39 | சேலம் | மாபெரும் பழப்பண்ணை கருமந்துறை | 1981 | 419.77 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப் -பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 40 | சேலம் | மணியார்குன்றம் | 1982 | 101.21 |
| 41 | சேலம் | அதோப. கருமந்துறை | 1981 | 39.35 |
| 42 | சேலம் | முள்ளுவாடி | 1985 | 48.40 |
| 43 | சேலம் | சிறுமலை | 1987 | 8.00 |
| 44 | சேலம் | ஏற்காடு | 1975 | 10.13 |
| 45 | சிவகங்கை | தேவக்கோட்டை | 1985 | 81.19 |
| 46 | சிவகங்கை | நேமம் | 1979 | 38.77 |
| 47 | சிவகங்கை | கிளாதரி | 2019 | 12.81 |
| 48 | தஞ்சாவூர் | ஆடுதுறை | 1988 | 8.90 |
| 49 | தஞ்சாவூர் | மருங்குளம் | 1966 | 10.77 |
| 50 | நீலகிரி | பர்லியார் | 1871 | 6.25 |
| 51 | நீலகிரி | கல்லார் | 1900 | 6.77 |
| 52 | நீலகிரி | பழப்பதனிடும் நிலையம் குன்னூர் | 1965 | 4.05 |
| 53 | நீலகிரி | பழவியல் நிலையம் குன்னூர் | 1948 | 10.46 |
| 54 | நீலகிரி | காட்டேரி | 1974 | 16.96 |
| 55 | நீலகிரி | தொட்டபெட்டா | 1969 | 2.52 |
| 56 | நீலகிரி | தும்மனட்டி | 1956 | 9.80 |
| 57 | நீலகிரி | நஞ்சநாடு | 1917 | 64.00 |
| 58 | நீலகிரி | தேவாலா | 1978 | 80.00 |
| 59 | நீலகிரி | கோல்கிரைன் | 1989 | 20.40 |
| 60 | தேனி | பெரியகுளம் | 1950 | 9.32 |
| 61 | தூத்துக்குடி | கீழவல்லநாடு | 2019 | 3.82 |
| 62 | திருவாரூர் | மூவாநல்லூர் | 2018 | 5.82 |
| 63 | திருப்பூர் | சங்கராமநல்லூர் | 2018 | 10.12 |

| வ எண் | மாவட்டம் | அரசு தோட்டக்கலை பண்ணையின் பெயர் | அமைக்கப் -பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 64 | திருநெல்வேலி | வன்னிக்கோனேந்தல் | 2018 | 10.86 |
| 65 | திருவண்ணாமலை | புதூர் செக்கடி | 2018 | 12.76 |
| 66 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை, ஜமுனாமரத்தூர் | 2019 | 0.68 |
| 67 | திருவண்ணாமலை | வட்டார நாற்றங்கால் பண்ணை. போளூர் | 2020 | 1.52 |
| 68 | திருச்சிராப்பள்ளி | தொரக்குடி | 2013 | 4.05 |
| 69 | திருச்சிராப்பள்ளி | வெப்ப மண்டல பழப்பயிர்கள் மகத்துவ மையம் தஞ்சநாயக்கன்பட்டி | 2019 | 8.67 |
| 70 | திருப்பத்தூர் | தகரக்குப்பம் | 1985 | 34.40 |
| 71 | திருப்பத்தூர் | கூடப்பட்டு | 1961 | 10.08 |
| 72 | திருவள்ளூர் | ஈக்காடு கண்டிகை | 2020 | 3.62 |
| 73 | இராணிப்பேட்டை | நவ்லாக் | 1981 | 84.42 |
| 74 | கள்ளக்குறிச்சி | ஏ. சாத்தனூர் | 2018 | 10.00 |
| 75 | வேலூர் | அகரம்சேரி | 2020 | 34.76 |
| 76 | விருதுநகர் | பூவாணி | 1967 | 9.46 |
| 77 | விருதுநகர் | ஸ்ரீவில்லிபுத்தூர் | 1982 | 46.27 |
| 78 | விருதுநகர் | ஆதித்தநேந்தல் | 2020 | 0.81 |
| 79 | விழுப்புரம் | எலவனாசூர்கோட்டை | **2022** | **7.20** |
| | | **மொத்தம்** | | **2743.67** |

## இணைப்பு 2

## மாநிலத்தில் உள்ள அரசு தோட்டக்கலை பூங்காக்கள்

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | செம்மொழிப் பூங்கா, சென்னை | 2010 | 3.21 |
| 2 | சென்னை | தோட்டக்கலைப் பூங்கா, மாதவரம் | 2018 | 8.90 |
| 3 | சென்னை | செங்காந்தள் பூங்கா | 2021 | 2.76 |
| 4 | சென்னை | பாரம்பரியப் பூங்கா, வண்ணாரப் பேட்டை | 2021 | 1.56 |
| 5 | கன்னியாகுமரி | சுற்றுச்சூழல் பூங்கா, கன்னியாகுமரி | 2018 | 6.07 |
| 6 | இராமநாதபுரம் | பாலை மரபணுப் பூங்கா, அச்சடிபிரம்பு | 2015 | 4.04 |
| 7 | சேலம் | ரோஜா தோட்டம், ஏற்காடு | 2005 | 2.02 |
| 8 | சேலம் | ஏரி பூங்கா, ஏற்காடு | 2018 | 1.32 |
| 9 | சேலம் | அண்ணா பூங்கா, ஏற்காடு | 1999 | 1.74 |
| 10 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா-1. ஏற்காடு | 2012 | 8.50 |
| 11 | சேலம் | அரசு தாவரவியல் பூங்கா-2, ஏற்காடு | 2012 | 7.69 |
| 12 | சேலம் | ஐந்திணை குறிஞ்சி மரபணுப் பூங்கா, ஏற்காடு | 2012 | 7.28 |

| வ. எண் | மாவட்டம் | பூங்காக்களின் பெயர் | அமைக்கப் பட்ட வருடம் | பரப்பு (எக்டரில்) |
|---|---|---|---|---|
| 13 | தென்காசி | சுற்றுச்சூழல் பூங்கா, குற்றாலம் | 1986 | 15.07 |
| 14 | திருவண்ணா-மலை | திருவண்ணாமலை பூங்கா | 2021 | 3.64 |
| 15 | திண்டுக்கல் | ரோஜா பூங்கா மற்றும் கொய்மலர் செயல் விளக்க மையம், கொடைக்கானல் | 2012 | 4.05 |
| 16 | திண்டுக்கல் | பிரையண்ட் பூங்கா மற்றும் அண்ணா பூங்கா, கொடைக்கானல் | 1900 | 8.29 |
| 17 | திண்டுக்கல் | செட்டியார் பூங்கா, கொடைக்கானல் | 1980 | 2.02 |
| 18 | நீலகிரி | அரசு தாவரவியல் பூங்கா, ஊட்டி | 1848 | 21.60 |
| 19 | நீலகிரி | அரசு ரோஜா பூங்கா, ஊட்டி | 1995 | 7.29 |
| 20 | நீலகிரி | சிம்ஸ் பூங்கா, குன்னூர் | 1874 | 11.34 |
| 21 | நீலகிரி | காட்டேரி பூங்கா | 2012 | 2.00 |
| 22 | நீலகிரி | தேயிலை பூங்கா, தொட்டபெட்டா | 2015 | 1. 60 |
| 23 | நீலகிரி | மரவியல் பூங்கா, உதகை | 2008 | 1.58 |
| 24 | நீலகிரி | சுற்றுச்சூழல் பூங்கா , கல்லார் | 2021 | 2.15 |
| | | **மொத்தம்** | | 134.12 |

## 3. வேளாண்மைப் பொறியியல்

நிலம் சீர்திருத்தத்தில் தொடங்கி விதைப்பு, பயிர் பாதுகாப்பு, அறுவடை மற்றும் அறுவடைக்குப்பின் மதிப்புக் கூட்டுதல் போன்ற பல்வேறு வேளாண் பணிகளை மேற்கொள்ள, வேளாண்மைக்கு தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாகிவிட்ட இன்றைய சூழலில் கால விரயமின்றி குறித்த நேரத்தில் மேற்கொள்ள ஏதுவாக, வேளாண் இயந்திரமயமாக்கலை விவசாயிகளிடையே கொண்டு சேர்ப்பதில் இன்றியமையாததாக வேளாண்மைப் பொறியியல் துறை விளங்குகிறது.

விவசாயத்திற்கு பெருகி வரும் நீரின் தேவையினை, குறைந்து வரும் நீர் ஆதாரங்களைக் கொண்டு சிறப்பான நீர்வள பாதுகாப்பு, நீர் மேலாண்மை உத்திகளைக் கையாண்டு, விவசாயிகளிடம் நீங்காத இடம் பெற்றுள்ளது வேளாண்மைப் பொறியியல் துறை. மண் வளத்தினை பாதுகாத்திடவும், புதிய பாசன ஆதாரங்களை உருவாக்கிடவும், பாசன நீரினை இறைத்திட புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான தொழில்

நுட்பங்களை புகுத்திடவும் விவசாயிகளுக்கு துணைபுரிகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

விளைவித்த வேளாண் விளைபொருட்கள் உரிய விலையின்றி வீணாவதை தடுத்து, விவசாயிகள் மதிப்புக் கூட்டி, இலாபம் ஈட்ட, முக்கிய பங்காற்றுகிறது வேளாண்மைப் பொறியியல் துறை.

இத்தகைய முயற்சிகளை தங்கு தடையின்றி விவசாயிகளிடம் கொண்டு சேர்த்திட, பல்வேறு சிறப்பான திட்டங்களை சீரான முறையில் கீழ்க்கண்டவாறு வேளாண்மைப் பொறியியல் துறை செயல்படுத்தி வருகிறது.

1.வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்
2.வேளாண் இயந்திரமயமாக்குதல்
3.வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல்
4. சூரிய சக்தி மூலம் வேளாண்மை
5. மண் – நீர்வளப் பாதுகாப்பு
6. நீர் மேலாண்மை
7. கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

## 3.1. இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல்

வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக நில மேம்பாடு, சிறு பாசனத் திட்டங்களின் கீழ் பல்வேறு நவீன புதிய வேளாண் இயந்திரங்கள், கருவிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

### 3.1.1. நிலமேம்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையில், புதர் அகற்றுதல், நிலம் சமன்படுத்துதல் மற்றும் நிலம் சீரமைத்தலுக்காக 86 மண்தள்ளும் இயந்திரங்கள் (புல்டோசர்), நீர்நிலைகளை பராமரிக்கவும், மேம்படுத்தவும், கரைகளை வலுப்படுத்தவும், ஆழப்படுத்தி அதன் கொள்ளளவினை அதிகரிக்கவும் 60 சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்கள், 10 டிராக் வகை மண் அள்ளும் இயந்திரங்கள், உழவுப் பணிகள் மேற்கொள்ள 272 டிராக்டர்கள், ஆறு மினி டிராக்டர்கள், 44 நெல் அறுவடை இயந்திரங்கள், 20 வாகனத்துடன் இயங்கக் கூடிய தேங்காய் பறிக்கும் இயந்திரங்கள், ஒரு கரும்பு அறுவடை செய்யும் இயந்திரம் ஆகியவை உள்ளன. இவ்வியந்திரங்கள்

தேவைப்படும் விவசாயிகளுக்கு இணைப்பு கருவிகளுடன் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

### 3.1.2.சிறுபாசனத்திற்கான நிலத்தடி நீர் ஆதாரங்களை உருவாக்குதல்

இத்திட்டத்தின் கீழ், விவசாயிகளின் பயன்பாட்டிற்காக காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வண்டல் மண் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 25 சுழல் விசைத் துளைக் கருவிகள், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கடின பாறைப் பகுதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வண்டல் மண் பகுதிகளுக்கு நான்கு பெர்குஷன் துளைக் கருவிகள் மற்றும் திருவாரூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள குறைந்த ஆழமுள்ள பகுதிகளில் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 21 சிறு விசைத்துளைக் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையில், குறைந்த ஆழத்தில் குழாய்க்கிணறுகள் அமைத்திட 19 கைத்துளைக் கருவிகள், திறந்தவெளி கிணறுகளை ஆழப்படுத்தவும், விவசாய நிலங்களில் உள்ள பாறைகளை தகர்த்து அப்புறப்படுத்துவதற்கு எட்டு பாறை வெடிக் கருவிகள், குழாய்க்கிணறு மற்றும் ஆழ்துளை குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு ஏற்ற நிலத்தடி நீர் இருக்கக்கூடிய மண் படிவங்களின் அமைப்பினை கண்டறிந்திட 21 நவீன நிலத்தடி நீர் ஆய்வுக் கருவிகள் மற்றும் நிலத்தடி நீரின் தன்மையையும், அளவினையும் கண்டறிந்திட இரண்டு மின்னியல் ஆய்வுக் கருவிகள் என பல்வேறு சிறு பாசன திட்டக் கருவிகள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

### 3.1.3. இ–வாடகை ஆன்லைன் கைபேசி செயலி

விவசாயிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள தங்களுக்குத் தேவைப்படும் வேளாண் இயந்திரங்களை இணையதளம் மூலம் வீட்டிலிருந்தும், வயல்களிலிருந்தும் எளிதாக முன்பதிவு செய்திடவும், மிக எளிதாக வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் பெற்றுப்

பயன்பெறவும், வாடகைத் தொகையை முன்னதாக இணையதளம் அல்லது செயலி மூலம் செலுத்திடவும் "இ-வாடகை" ஆன்லைன் கைபேசி செயலி 08.01.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இச்செயலி விவசாயிகளிடம் பெரும் வரவேற்பைப் பெற்று சிறப்பாக தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.1.4. பேரிடர் மேலாண்மை இயந்திரங்கள்

இயற்கை பேரழிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கின் போது நிவாரணப் பணிகளை மேற்கொள்ள டிராக்டரால் இயங்கக் கூடிய 21 நீர் இறைக்கும் பம்புகள் மற்றும் 805 அதிக திறன் கொண்ட மரம் அறுக்கும் கருவிகள் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளன. பேரிடர் மீட்புப் பணிகளுக்காக மண்தள்ளும் இயந்திரங்கள் மற்றும் டிராக்டர்களுடன் நீர் இறைக்கும் பம்புகளும், மரம் அறுக்கும் கருவிகளும் வேளாண்மைப் பொறியியல் துறையால் குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

**3.1.5. நவீன மற்றும் புதிய வேளாண் இயந்திரங்கள்**

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை வலுப்படுத்துவதற்காக, 2021–2022 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டபடி, ரூ.22.89 கோடி மதிப்பீட்டில், விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய, உழவுப் பணிகள் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ள 185 டிராக்டர்கள், நிலங்களில் உள்ள அழிக்கப்பட வேண்டிய மற்றும் அப்புறப்படுத்தப்பட வேண்டிய செடி மற்றும் இதர புல் பூண்டுகளை பற்பல துண்டுகளாக்கி மண்ணுடன் கலந்து நிலத்திற்கேற்ற உரமாக்கும் வகையில் 185 ரோட்டவேட்டர்கள், மண் கட்டிகளை உடைத்து, நிலத்தின் கடினத் தன்மையினை குறைத்து, உழவுக்கு பயன்தரக் கூடிய 120 ஸ்பிரிங் வகை ஒன்பது வரிசை கொத்து கலப்பைகள், 65 ரிஜிட் வகை ஒன்பது வரிசை கொத்துக் கலப்பைகள் மற்றும் சேற்று உழவிற்கு 120 கேஜ் வீல்கள் ஆகியவற்றை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பெறப்பட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியுதவியுடன் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**3.1.6. வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் இருப்பினை வலுப்படுத்துதல்**

வேளாண்மைப் பொறியியல் துறைக்கு மேற்குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2021–2022–இல் குறிப்பிட்டுள்ளபடி, தற்பொழுது வருவாய் கோட்ட அளவில் செயலாக்கத்தில் உள்ள வேளாண் இயந்திரங்களை, விவசாயிகள் பயன்பெறும் வகையில், வட்டார அளவில் முதற்கட்டமாக டெல்டா மாவட்டங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

**3.1.7. புதிய வேளாண் இயந்திரங்கள், நடமாடும் பழுது நீக்கும் வாகனம் (Mobile Servicing Unit)**

விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை குறைந்த வாடகைக்கு வழங்கும் திட்டத்தினை நடப்பாண்டில் மேலும் வலுப்படுத்துவதற்காகவும், நெல் அறுவடை காலங்களில் அறுவடை தங்குதடையின்றி நடைபெறவும், 2022–2023 ஆம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில்

அறிவிக்கப்பட்டபடி, பத்து நெல் அறுவடை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன. மேலும், வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்களையும், கருவிகளையும் பணித் தளத்திலேயே பழுதுபார்த்திட ஏதுவாக மூன்று நடமாடும் பழுது நீக்கும் வாகனங்கள் அமைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 3.1.8.வேளாண் இயந்திரங்களுக்கான பராமரிப்புக் கூடங்கள்

விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கப்படுகின்ற வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை பாதுகாப்பாக வைக்கவேண்டிய அவசியத்தினை கருத்திற் கொண்டு பழுதினை உடனுக்குடன் நீக்கி முழுமையான பயன்பாட்டினை உறுதிசெய்யவும், வேளாண் இயந்திர பராமரிப்புக் கூடம் ஒவ்வொன்றும் தலா ரூ.20 இலட்சம் என்ற மதிப்பீட்டில் மொத்தம் 35 வேளாண் இயந்திர பராமரிப்புக் கூடங்கள் அமைக்கும் பணிகள் ஏழு கோடி ரூபாய் செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

மேலும், 2022-23 ஆம் நிதியாண்டில் பத்து வேளாண் இயந்திரங்களுக்கான பராமரிப்புக் கூடங்கள் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.2.60 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 3.2. வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்

வேளாண்மையில் இயந்திர சக்தியின் பயன்பாட்டினை ஊக்குவித்து, அதிகரித்து வரும் வேளாண் பணியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்திட, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல், பல்வேறு வகையான வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல் முதலான திட்டங்களுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டம் ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளில், விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான

இயந்திரங்களின் மாடல்களை தேர்வு செய்து பயன் பெறலாம்.

### 3.2.1.தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்குதல்

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட விவசாயிகள் டிராக்டர், பவர் டில்லர், சுழல் கலப்பை, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், பல்வகைப் பயிர் கதிரடிக்கும் இயந்திரம், வைக்கோல் கட்டு கட்டும் இயந்திரம், நிலக்கடலை தோண்டும் கருவி, கரும்பு சோகை உரிக்கும் கருவி, அறுவடை இயந்திரம் போன்ற இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க சிறு, குறு, ஆதி திராவிட, பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம், இதர விவசாயிகளுக்கு 40 சதவீத மானியம், நேரடி மானியம் வழங்குதல் முறை (Direct Benefit Transfer–DBT)–யின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின்கீழ், 2021–22 ஆம் ஆண்டில் 1,598 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ரூ.25.87 கோடி மானியத்தில் வழங்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுதானிய பயிர்கள் மற்றும் பயறு வகைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, 2022–2023 ஆம் ஆண்டில் விவசாயிகள் பயன் பெறும் வகையில் 6,357 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

இயந்திரங்கள் வாங்க இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு, உதவிடும் வகையில் வேளாண் இயந்திரப்பணிகளுக்கு அதிகபட்சமாக ஏக்கருக்கு 800 ரூபாய் வீதம் அதிகபட்சமாக ஐந்து ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும். இதன் மூலம் 62,000 ஏக்கரில் உள்ள சுமார் 37,000 சிறு, குறு விவசாயிகள் பயனடையும் வகையில் பத்து கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

### 3.2.2. வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைத்தல்

நவீன வேளாண் தொழில்நுட்பங்களான "ட்ரோன்"(Drone) போன்றவற்றை விவசாயிகளிடையே அறிமுகப்படுத்தி வேளாண்மையை மேம்படுத்திடவும், வேளாண் பணிகளுக்கு தேவைப்படும் வேளாண் இயந்திரங்கள் தட்டுப்பாடின்றி கிடைத்திடவும், உயர் தொழில் நுட்பம் மற்றும் அதிக விலையுள்ள வேளாண் இயந்திரங்களை வாங்கி பராமரிக்க இயலாத சிறு, குறு

விவசாயிகளுக்கு உதவிடவும், கிராமப்புற தொழில் முனைவோர்கள், பதிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மூலம் வட்டார அளவிலும், கிராம அளவிலும் மற்றும் கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படுகிறது. இம்மையங்கள் மூலம், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

வட்டார அளவிலான வாடகை மையங்களை ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு 40 சதவீத மானிய அடிப்படையில், அதிகபட்சமாக ரூபாய் பத்து இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இத்தகைய வட்டார அளவிலான 36 வாடகை மையங்கள் 2021-22 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராம அளவில் வேளாண் இயந்திர வாடகை மையங்கள் ரூபாய் பத்து இலட்சம் திட்ட மதிப்பில் அமைக்க, ஒரு மையத்திற்கு 80 சதவீத மானியத்தின்படி அதிகபட்சம் ரூபாய் எட்டு இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில்

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் உள்ள விவசாய தொகுப்புகள் அடங்கிய கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. இம்மையங்கள் 2021-2022 ஆம் ஆண்டு வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி ரூ.14.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதுவரை 180 வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மேலும், கிரிஷி கல்யாண் அபியான் (KKA III) திட்டத்தின் கீழ் 11 கிராம அளவிலான வாடகை மையங்கள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கரும்பு சாகுபடியில் இயந்திரமயமாக்குதலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர மற்றும் கருவிகள் வாடகை மையம் தொழில்முனைவோர்கள் மூலம் ரூ.150 இலட்சம் மதிப்பீட்டில் அமைப்பதற்கு, 40 சதவீத அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.60 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டில், 15 கரும்பு சாகுபடிக்கேற்ற வேளாண் இயந்திர வாடகை மையங்கள் பெரம்பலூர், கடலூர், அரியலூர்,

திருச்சி, தேனி, செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சிவகங்கை, நாமக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.2.3. வேளாண் இயந்திரங்கள், சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை பழுது நீக்கி பராமரிக்கும் மையங்கள்

விவசாயிகளின் விளைநிலங்களிலேயே வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை கால விரயமின்றி பழுது நீக்கி பராமரித்து, வேளாண் பணிகளை குறித்த காலத்தே செய்திடவும், கிராமப்புற இளைஞர்கள், தொழில் முனைவோர்கள், விவசாய குழுக்கள் மற்றும் உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு, எட்டு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையம் அமைப்பதற்கு 50 சதவீத மானியம் அதிகபட்சமாக நான்கு இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

கடந்த 2021–22 ஆம் ஆண்டில் 19 மையங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு,

எட்டு மையங்கள் அமைக்க மாவட்ட அளவிலான செயற்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, இதுவரை இரண்டு மையங்கள் அமைக்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, வேளாண் பொறியியல், இயந்திரவியல் பொறியியல், தானியங்கி பொறியியல் போன்றவற்றில் பட்டயம் அல்லது பட்டம் பெற்ற இளைஞர்கள் மூலம் விவசாயிகளுக்கு உதவும் வகையில் 25 வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் பழுது நீக்கி பராமரிக்கும் மையங்கள் 50 சதவீத மானியத்துடன் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ளது.

### 3.2.4. ஊரக இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

விவசாயிகள் தங்கள் வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகளை கிராமப்புற பகுதிகளிலேயே பழுதுநீக்கி, பராமரிப்பதற்கு தேவையான திறன் வாய்ந்த நபர்களை உருவாக்கிடவும், ஊரக வேலையில்லா

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கி அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் கையாளுதல், பராமரித்தல் மற்றும் இயக்குதல் குறித்தான பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதி உதவியுடன் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2021-22 ஆம் ஆண்டில், வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருவாரூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள பயிற்சி மையங்களில் மொத்தம் 600 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்கிட ஒப்புதல் பெறப்பட்டு பயிற்சிகள் துவக்கப்படவுள்ளது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில், தெரிவிக்கப்பட்டவாறு மேலும் 750 ஊரக வேலையில்லா இளைஞர்கள் மற்றும் வேளாண் இயந்திர வாடகை மைய உரிமையாளர்களும் பயன் பெறும் வகையில் ரூ.63.48 இலட்சம் செலவில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

## 3.3. வேளாண் விளைபொருள் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்குதல்

விவசாயிகள் தாங்கள் விளைவித்த சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் இதர வேளாண் விளைபொருட்களின் சேமிப்பு கால அளவினை அதிகரித்து, அவற்றின் மதிப்பைக் கூட்டிட, வேளாண் விளைபொருட்கள் மதிப்புக் கூட்டும் இயந்திரங்களை மானியத்தில் வாங்கிட தனிப்பட்ட விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவி குழுக்கள், விவசாய பயன்பாட்டு குழுக்கள் மற்றும் தொழில் முனைவோர்களுக்கு 40 சதவீத மானியத்தில் வழங்கப்படுகிறது.

கடந்த 2021-22 ஆம் ஆண்டில் 208 மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கப்பட்டு திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, 292 மதிப்புக்கூட்டும் இயந்திரங்கள் 40 சதவீத மானியத்தில் ஐந்து கோடி ரூபாய் செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளது.

## 3.4. சூரிய சக்தி மூலம் வேளாண்மை

பசுமை ஆற்றலான சூரிய சக்தியை வேளாண்மையில் பயன்படுத்திட பல்வேறு திட்டங்கள் விவசாயிகளுக்கு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் இணைப்பு இல்லாத விவசாயிகளுக்கு பாசன நீரை இறைப்பதற்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் அமைத்தல், சூரிய சக்தியை பயன்படுத்தி வேளாண் விளைபொருட்களை இயற்கை தன்மை மாறாமல் உலரவைப்பதற்கு சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல் போன்ற தொழில் நுட்பங்களை வேளாண்மைப் பொறியியல் துறை பிரபலப்படுத்தி விவசாயிகளுக்கு மானிய உதவியுடன் செயல்படுத்தி வருகிறது.

### 3.4.1. முதலமைச்சரின் சூரிய சக்தி பம்புசெட்டுகள் திட்டம்

மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 171 விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் ரூ.3.8 கோடி மானிய உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2021-2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட்டுகள் திட்டத்தின் கீழ் மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் 10 குதிரைத்திறன் வரையிலான 5,000 பம்புசெட்டுகள் 70 சதவீத மானிய உதவியுடன் விவசாயிகளுக்கு அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக 2,000 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் விவசாயிகளுக்கு 70 சதவீத மானியத்தில் அமைத்திட திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, 850 பயனாளிகளுக்கு பணியாணைகள் வழங்கப்பட்டு விவசாயிகளின் நிலங்களில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023-ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டவாறு 10 குதிரைத்திறன் வரையிலான 3,000 மின்கட்டமைப்புடன் சாராத தனித்து சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் 70 சதவீத மானியத்தில் ரூ.65.34 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட உள்ளது.

### 3.4.2. சூரிய கூடார உலர்த்திகள் அமைத்தல்

இயற்கையில் அபரிமிதமாக கிடைக்கக் கூடிய சூரிய ஆற்றலினைக் கொண்டு, விவசாயிகள், விவசாய குழுக்கள் மூலம் பசுமை குடில் வகையிலான 400 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரையிலான சூரிய கூடார உலர்த்திகள் அமைத்து, எண்ணெய் வித்துக்களான கொப்பரை தேங்காய், எள், நிலக்கடலை, பழவகைகளான வாழைப்பழம், நெல்லிக்காய், வாசனைப் பொருட்களான கிராம்பு, இஞ்சி மற்றும் மிளகாய், முருங்கை இலை, கருவேப்பிலை, மூலிகைச் செடி இலைகள் போன்ற வேளாண் விளைபொருட்களை சீரான முறையில் சுகாதாரமாக உலர்த்தி, அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளைத் தவிர்த்து, அதன் சேமிப்பு காலத்தை அதிகரித்து, அதிக விலைக்கு விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டிட முடிகிறது.

சூரிய கூடார உலர்த்திகள் விவசாயிகள்/ விவசாய குழுக்களுக்கு 40 சதவீத மானியத்துடன் அமைக்கும் திட்டத்திற்கு, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டங்களின் கீழ் 2021-22 ஆம் நிதியாண்டில் 90 சூரிய கூடார

உலர்த்திகள் அமைக்கப்பட்டு, திட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022–2023–இல் அறிவித்தபடி, வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டத்தின் கீழ், 145 சூரிய கூடார உலர்த்திகள் 40 சதவீத மானியத்தில் மூன்று கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளன.

### 3.5. மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு

மழைநீரால் வளமிக்க மேல் மண் அடித்து செல்லப்படுவதை தடுத்திட வேளாண்மையின் ஆதாரமான மண்ணை ஆங்காங்கே நிறுத்தி, நிலங்களின் வளத்தை நிலைக்கச்செய்து வேளாண் உற்பத்தித் திறனை அதிகப்படுத்திட கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள் வேளாண்மைப் பொறியியல் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### 3.5.1.கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்

வேளாண்மைத் துறையால் 1,997 கிராமங்களில் உருவாக்கப்பட்ட தொகுப்புகளுக்கு நில நீர் ஆய்வு

அடிப்படையில் பாசன ஆதாரத்திற்கான ஆழ்துளைக் கிணறு அல்லது குழாய் கிணறுகளை அமைத்து மின்மோட்டார் அல்லது சோலார் பம்பு செட்டுகள் மூலம் விவசாய நிலத்திற்கு நீரினை எடுத்துச் செல்லும் நீர் விநியோக குழாய்கள் ஆகியவை ஏற்படுத்தப்படுகிறது. இப்பணிகள் 100 சதவீத மானியத்தில் சென்னை மற்றும் உதகமண்டலம் மாவட்டம் நீங்கலாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன.

மேலும், 500 விவசாயிகளின் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் உருவாக்குதல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சிறுபாசனக் குளங்கள், ஊரணிகள், குளங்கள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்கள் ஆகியவற்றில் மொத்தமாக 1,700 இடங்களில் வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான இயந்திரங்களை பயன்படுத்தி மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இனங்களில் உள்ள பணிகள் ரூ.210.02 கோடி மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022–2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, ரூ.270.05 கோடி நிதி ஒதுக்கீட்டில் 3,204 கிராமங்களில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்துடன் ஒருங்கிணைந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.5.2. நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளைப் பராமரித்தல்

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2021–2022 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, 1,700 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள நீர்வடிப்பகுதிகளில், வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IWDP), ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மைத் திட்டம் (IWMP) ஆகிய திட்டங்களின் கீழ் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை (TAWDEVA) மூலமாக ஏற்படுத்தப்பட்ட நீர் சேகரிப்புக் கட்டமைப்புகளுக்கு வரும் நீரோட்டத்தை அதிகரிக்க, தூர்வாரி, ஆழப்படுத்தி அவற்றின் கொள்ளளவை

அதிகரித்திட வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள இயந்திரங்கள் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை, 97 பணிகள் முடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில் அறிவித்தபடி, 1,500 நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் பராமரிப்பு பணிகள் ஐந்து கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பெறப்பட்ட நீர்வடிப்பகுதி வளர்ச்சி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

### 3.5.3. சிறப்புப் பகுதி மேம்பாட்டுத்திட்டம்

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி வனப்பகுதிகளின் அருகே உள்ள கிராமங்களில், சிறப்பு பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் தேவைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை அணுகுமுறையில் நில மேம்பாட்டு பணிகள், மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகள், வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வகையிலும் நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கும் வகையிலும் செயல்படுத்தப்படுகின்றது.

வனப்பகுதி கிராமங்களின் பழங்குடியின விவசாய நிலங்களில் 90 சதவீத மானியத்துடனும், ஆதிதிராவிட விவசாய நிலங்களில் 80 சதவீத மானியத்துடனும், இதர விவசாயிகளின் நிலங்களில் 50 சதவீத மானியத்துடனும் மற்றும் சமுதாய நிலங்களில் 100 சதவீத மானியத்துடனும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் 2021-22 ஆம் நிதியாண்டில் நீலகிரி, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, தென்காசி கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்பு பணிகளான, கம்பிவலை தடுப்பணைகள், தடுப்பணைகள், கம்பிவலை தடுப்புச் சுவர் அமைத்தல், ஓடை பராமரிப்பு பணிகள் மற்றும் நிலச்சரிவு தடுப்பு பணிகள் ஆகியவை ரூ.20 கோடி மதிப்பில் மாநில அரசின் நிதியுதவியுடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.5.4. நதிப்பள்ளத்தாக்குத் திட்டம்

வேளாண்மை, மின் உற்பத்தி, குடிநீர் உள்ளிட்ட பல்நோக்குடன் அமைக்கப்பட்ட நீர்தேக்கங்களுக்குள் மழை நீரினால் அடித்து செல்லப்படும் வண்டல்மண் படிந்து அதன் கொள்திறன் குறைவதை தடுக்கவும், மண்ணினை அந்தந்த இடத்திலேயே நிறுத்தி, நிலத்தின் தரம் மற்றும் ஈரம் நிலைநிறுத்தப்படவும் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டம் தென்பெண்ணையாறு மற்றும் மேட்டூர் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் 2013–14 ஆம் ஆண்டு முதல் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சமுதாய நிலங்களில் செயல்படுத்தப்படும் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்புப் பணிகள் 100 சதவீத அரசின் நிதி உதவியுடனும், தனிப்பட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும் கற்சுவர் அமைக்கும் பணிகள் விவசாயிகளின் நிலங்களில் 50 சதவீத விவசாயிகள் பங்களிப்போடும் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தில் 2021–22 ஆம் ஆண்டில் 41 கட்டுமானப் பணிகள், 12 எக்டர் நிலப்பரப்பு

பயன்பெறும் வகையில் மண் மற்றும் நீர்வளப்பாதுகாப்புப் பணிகள் ஆகியவை ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.5.5. நீர்வள நவீனமயமாக்குதல் – பண்ணைக்குட்டைகள் அமைத்தல்

தமிழ்நாடு நீர்வள நவீனமயமாக்குதல் திட்டம், பல்துறைகளின் ஒருங்கிணைப்போடு 43 உபவடி நிலப் பகுதிகளில் 2017-18 ஆம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 1,899 பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகள் செயல்படுத்திட ரூ.15.53 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2021-22 ஆம் ஆண்டில் 83 பண்ணைக் குட்டைகள் ரூ.61.29 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் 2022-23 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.5.6. வளம் குன்றிய நிலங்களை சீர் செய்தல்

தமிழகத்தில் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை அதிக அளவில் பயன்படுத்தியமையால் நிலப்பரப்பில் களர் மற்றும் உவர் கொண்ட வளம் குன்றிய மண் காணப்படுகிறது. எனவே, தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமாக வளம் குன்றிய நிலங்களை சீர் செய்தல் என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ், புதிய நீர் சேகரிப்பு கட்டுமானங்களை உருவாக்குதல், கடல் நீர் உட்புகாதவாறு தடுப்பணைகள் கட்டுதல், வடிகால்கள் சீரமைத்தல், ஆழ உழுதல், பசுந்தாள் உரமிட்டு சுழற்கலப்பை மூலம் நிலத்தில் சேர்த்தல், இடு பொருட்கள் வழங்குதல், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டம் ஒன்றிய அரசின் 60 சதவீத பங்களிப்புடனும் மாநில அரசின் 40 சதவீத பங்களிப்புடனும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2021-22 ஆம் ஆண்டில், ரூ.3.41 கோடி நிதி ஒதுக்கீட்டில் மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 573 எக்டர்

நிலப்பரப்பில் உவர் நில சீர்திருத்தப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் 2022–23 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.6. நீர் மேலாண்மை

நிலத்தடி நீர் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் இருப்பும் வெகுவாகக் குறைந்து வருவதால், கிடைக்கக் கூடிய நீரையும் செம்மையாக பயன்படுத்திட நீர் மேலாண்மை மிகவும் அத்தியாவசியமாகிறது. நீரின் உற்பத்தி திறனை அதிகரிக்க, நீர் பயன்பாட்டினை செம்மையாக நிர்வகிக்கும் பொருட்டு, நீர் மேலாண்மை செயல்பாடுகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 3.6.1. டெல்டா மாவட்டங்களில் "சி", "டி" பிரிவு வாய்க்கால்களை தூர்வாருதல்

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் உள்ள வாய்க்கால்களில் நீரை சீராக கொண்டு செல்வதற்கும், சரியான நேரத்தில் மற்றும் தேவையான அளவில் நீர் கடைமடையை அடையவும் "சி", "டி" பிரிவு வாய்க்கால்களை தூர்வாருவது மிக அவசியம்.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022–2023 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டவாறு, காவேரி மற்றும் வெண்ணாறு வடிநிலப்பகுதியில் உள்ள 1,580 கிலோ மீட்டர் "சி", "டி" வாய்க்கால்களை தூர்வாரும் பணிகள் இரண்டு இலட்சம் ஏக்கர் பயன்பெறும் வகையில் ஐந்து கோடி ரூபாய் மாநில அரசு நிதி உதவியுடன் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 3.6.2. மானியத்தில் மின்மோட்டார் பம்புசெட்டுகள்

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2021–2022–ல் குறிப்பிட்டுள்ளபடி, மூன்று ஏக்கர் வரை நிலம் உள்ள, புதிய மின்மோட்டார் வாங்க வசதி இல்லாத ஏற்கனவே மின்வசதி கொண்ட சிறு, குறு விவசாயிகள் பாசன நீரை இறைத்திட உதவும் வகையில், மானியத்தில் புதிய திறன்மிகு மின்மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கவும், திறன் குறைந்த பழைய மின்மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றி புதிய மின்மோட்டார் பம்பு செட்டுகள் பொருத்தவும், 1,000 விவசாயிகள் பயனடையும் வகையில் ஒரு கோடி ரூபாய் செலவில் மாநில அரசின் நிதியைக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இதுவரை, 136 பணிகள் முடிக்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022–2023–இல் அறிவிக்கப்பட்டபடி, ஒரு மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.10,000 அல்லது மின்மோட்டார் பம்புசெட் வாங்கிட ஆகும் மொத்த தொகையில் 50 சதவீதம் இவற்றில் எது குறைவோ அத்தொகை ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் 5,000 விவசாயிகளுக்கு மொத்தம் ஐந்து கோடி ரூபாய் மானியம் வழங்கிடும் வகையில் பிரதம மந்திரி வேளாண் நீர்ப்பாசன திட்டம்–ஒரு துளி நீரில் அதிக பயிர்–இதர செயல்பாடுகள்–துணைநிலை நீர் மேலாண்மை செயல்பாடுகள் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது.

### 3.6.3 கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் வழங்குதல்

விவசாயிகளின் பாசன கிணறுகளில் உள்ள நீர் வீணாவதை குறைக்கும் பொருட்டும், பாசன கிணறுகளில் அமைக்கப்பட்டுள்ள பம்புசெட்டுகளை இரவு நேரங்களில் நேரில் சென்று இயக்கும் பொழுது விவசாயிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளான

பாம்புக்கடி, காயமடைதல் ஆகியவற்றை தவிர்க்கும் பொருட்டும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022-2023 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டபடி, பம்புசெட்டுகளை தொலைவில் இருந்து கைபேசியின் மூலம் இயக்கும் தானியங்கி பம்புசெட்டு கட்டுப்படுத்தும் கருவிகள் 3,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒரு கருவிக்கு 50 சதவீத மானிய அடிப்படையில் அதிகபட்சமாக ரூ.5,000/- மானியத்தில் ரூ.1.5 கோடி செலவில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட உள்ளன.

### 3.7. உட்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல்

வேளாண்மைப் பொறியியல் துறையானது வேளாண்மை - உழவர் நலத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சகோதரத் துறைகளான வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவற்றின் உட்கட்டமைப்புப் பணிகளுக்கு தனது பங்களிப்பாக தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் உதவிகளை செய்வதுடன் அத்துறைகளின் உட்கட்டமைப்புப் பணிகள், அரசு விதைப் பண்ணைகள், மாநில தோட்டக்கலைப் பண்ணைகள்,

பூங்காக்களில் மேம்பாட்டுப் பணிகளை செயல்படுத்துவதுடன் வேளாண்மைப் பொறியியல் துறையின் உட்கட்டமைப்புப் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

வேளாண்மைத் துறைக்காக 14 ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையங்கள், 225 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள், மதுரை மாவட்டம் விநாயகபுரத்திலுள்ள நீர் மேலாண்மை பயிற்சி நிலைய அலுவலகக் கட்டிடம் ஆகியவை கட்டும் பணிகள் நபார்டு மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ரூ.122 கோடி மதிப்பீட்டில் கடந்த 2021–22 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறைக்காக 2021–22 ஆம் ஆண்டில் நான்கு வேளாண்மைப் பொறியியல் விரிவாக்க மையங்கள் ஒவ்வொன்றும் தலா ரூ.50 இலட்சம் வீதம் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன.

## 3.8. நிர்வாக அமைப்பு

வேளாண்மைப் பொறியியல் துறையின் பல்வேறு விவசாய நலத்திட்டங்களை செயல்படுத்திட தலைமையிடத்தில் ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), ஒரு தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) – நதிப்பள்ளத்தாக்கு திட்டம், மூன்று கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் இரண்டு செயற் பொறியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மண்டல அளவில் 11 கண்காணிப்புப் பொறியாளர்களும், மாவட்ட அளவில் 31 செயற் பொறியாளர்களும், சிறப்புத் திட்டங்களுக்காக 5 செயற் பொறியாளர்களும், வருவாய் கோட்ட அளவிலும் திட்டங்களை செயல்படுத்துவதற்கு 125 உதவி செயற் பொறியாளர்களும், 850 உதவிப் பொறியாளர்கள் / இளநிலைப் பொறியாளர்களும், 1,120 அமைச்சுப் பணியாளர்களும், 1,866 களப் பணியாளர்களும் வேளாண்மைப் பொறியியல் துறையில் பணியாற்றிவருகின்றனர்.

## அட்டவணை 3.1. பணியாளர்களின் விவரம்

| வ. எண் | பதவியின் பெயர் | எண்கள் |
|---|---|---|
| 1 | தலைமைப் பொறியாளர் (வே.பொ) | 1 |
| 2 | தலைமைப் பொறியாளர் (வே.பொ), நபதி | 1 |
| 3 | கண்காணிப்புப் பொறியாளர் (வே.பொ) | 14 |
| 4 | செயற் பொறியாளர் (வே.பொ) | 38 |
| 5 | உதவி செயற் பொறியாளர் (வே.பொ) | 125 |
| 6 | உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர்(வே.பொ) | 850 |
| 7 | அமைச்சுப் பணியாளர்கள் | 1,120 |
| 8 | களப் பணியாளர்கள் | 1,866 |
| | **மொத்தம்** | **4,015** |

வருவாய் கோட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை செயல்படுத்துவது உதவி செயற் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், மாவட்ட அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் அந்தந்த மாவட்ட செயற் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும், மண்டல அளவில் வேளாண்மைப் பொறியியல் துறையின் செயல்பாடுகளை தொழில் நுட்பத்துடன் நிர்வகிக்கும் பொறுப்பு கண்காணிப்புப் பொறியாளர்களின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

## 4. வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் கல்வி

மாநிலத்தின் நிலம், நீர் மற்றும் மனித வள மேம்பாட்டிற்காக வேளாண் உற்பத்தித் திறனைத் தொடர்ந்து அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய செயல்பாடுகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், முனைப்புடன் நிறைவேற்றி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 18 உறுப்புக் கல்லூரிகள் மூலம் 12 இளநிலைப் படிப்புகள், 35 முதுநிலை மற்றும் 30 முனைவர் பட்ட படிப்புகளை வழங்குகின்றது. மேலும், இப்பல்கலைக்கழகத்தின் கீழ் 29 இணைப்புக் (தனியார்) கல்லூரிகளும் இயங்கி வருகின்றன.

வேளாண்மைப் பல்கலைக்கழகம் அண்மையில் வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் தமிழ்வழி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. வேலை வாய்ப்பு மற்றும் தொழில்முனைவோரை உருவாக்கக் கட்டமைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்புத் திட்டங்கள் மூலம் இப்பல்கலைக்கழகம் விவசாயத்தில் திறந்த மற்றும் தொலைதூரக்

கல்வியை வழங்குகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சியில் முன்னிலைப் பெற்று, அதன் மூலம் பயிர் இரகங்கள், தொழில்நுட்பங்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் போன்றவற்றை விவசாய சமூகத்திற்கு பயனளிக்கும் வண்ணம் வெளியிட்டு வருகின்றது.

விவசாயிகளிடையே புதிய வகை பயிர்களை பிரபலப்படுத்துவதற்காக இப்பல்கலைக்கழகம் சிறப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. மேலும், புதிய முனைப்புகளில் தொலையுணர்வு திறன் தொழில்நுட்பங்கள், வேளாண் தொழில்முனைவை ஊக்குவித்தல் மற்றும் நானோ தொழில் நுட்பங்கள் பயன்பாடு ஆகியவை அடங்கும். ஆராய்ச்சி முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டங்களின் மூலம் வரும் ஆண்டுகளில் "ட்ரோனை" அறிமுகப்படுத்தி, விவசாயத்தில் ஆள் பற்றாக்குறையினை தீர்க்கவும், செயற்கை நுண்ணறிவு மற்றும் ரோபாட்டிக்ஸ் போன்ற கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்தவும் இப்பல்கலைக்கழகம் முனைப்புடன் செயலாற்றி வருகின்றது.

### 4.1. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிதி ஒதுக்கீடு

வேளாண்மையில் மேம்பட்ட உற்பத்தியை அடைவதற்கும் விவசாயிகளின் நலனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு உறுப்புக் கல்லூரிகள், ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நிலையங்கள் மூலம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகிய கூறுகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வருடாந்திர நிதியாக ரூ. 530.96 கோடியில் செயல்பட்டு வருகின்றது.

### 4.2. கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு கல்லூரிகளுக்கு கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி நிதியின்கீழ் 19 பணிகளுக்காக 2018-2019 ஆம் ஆண்டில் ரூ.58.68 கோடி அனுமதிக்கப்பட்டது. ஆறு வளாகங்களில் அதாவது வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (மேட்டுப்பாளையம்), வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் (திருச்சிராப்பள்ளி), தோட்டக்கலைக் கல்வி நிறுவனம்

(பேச்சிப்பாறை), தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் (ஊட்டி), திருச்சிராப்பள்ளி மற்றும் வம்பன் வேளாண்மைக் கல்வி நிறுவனங்கள் ஆகிய கல்வி வளாகங்களில் உடற்கல்வி பாடத்திற்கான கட்டமைப்பு வசதிகள், விரிவுரை அரங்கம், மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள், படிப்பு மையம், பயிற்சி விடுதி, நிர்வாக அலுவலகம், வளாகச் சுவர்கள் போன்றவற்றை ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 19 பணிகளில் 15 பணிகள் முடிக்கப்பட்டு கட்டிடங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. மீதமுள்ள நான்கு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரியக் கட்டிடத்தைப் பாதுகாத்தல், மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு ரூ.4.2 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் 2021-22 ஆம் ஆண்டிற்கு ரூ.1.6 கோடி விடுவிக்கப்பட்டது.

உயிர் தொழில் நுட்ப சிறப்பு மையம் நிறுவுவதற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் பத்தாண்டு திட்ட மொத்த ஒதுக்கீடாக ரூ. 430 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. முதல் ஆண்டு நிதியாக

ரூ.10 கோடிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு முதல் தவணையாக 2020–21–ஆம் ஆண்டிற்கு ரூ.5.7 கோடி விடுவிக்கப்பட்டது. 2021–22 ஆம் ஆண்டிற்கு இரண்டாம் தவணையாக ரூ.4.3 கோடி விடுவிக்கப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஜீனூரில் புதிய தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர், சிவகங்கை மாவட்டம் செட்டிநாடு மற்றும் கரூர் மாவட்டத்தில் என மூன்று புதிய வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் அமைக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் கல்லூரி ஒன்றிற்கு தலா இரண்டு கோடி ரூபாய் நிதி அளிக்கப்பட்டுள்ளது.

## 4.3. வேளாண்மைக் கல்வி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தற்பொழுது 12 இளமறிவியல், 35 முதுநிலை மற்றும் 30 முனைவர் பட்டப் படிப்புகளை தனது உறுப்புக் கல்லூரிகள் வாயிலாக வழங்கி வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நான்கு உறுப்புப் பட்டயப்படிப்பு நிறுவனங்கள்,

வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயப்படிப்பினை வழங்கி வருகின்றன.

இளநிலை பட்டப்படிப்பிற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 2011–12 ஆம் ஆண்டில் 9,652 ஆக இருந்து 2021–22 ஆம் ஆண்டில் 40,585 ஆக பன்மடங்கு அதிகரித்துள்ளது.

**அட்டவணை: 4.1. மாணவர்கள் சேர்க்கை மற்றும் தேர்ச்சி (2021–22)**

| படிப்பு விபரம் | சேர்க்கை | தேர்ச்சி |
|---|---|---|
| இளநிலை | நடைபெற்று வருகிறது | 2,370 |
| முதுநிலை | 398 | 477* |
| முனைவர் | 166 | 117 |
| பட்டயப்படிப்பு | நடைபெற்று வருகிறது | 371 |

*முந்தைய கல்வியாண்டுகளில் தேர்ச்சி பெறாமல் தற்போது தேர்ச்சி பெற்ற மாணவர்கள் உள்பட

## 4.4. புதிய முனைப்புகள்

பயிர் பரப்பு, பயிர் நிலை, மகசூல் மற்றும் பண்ணை அளவில் சேத மதிப்பீடு, நிலப் பதிவேடுகளை கணினி மயமாக்குதல், தாவர பாதுகாப்பு

இரசாயனங்கள் (பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக் கொல்லிகள், களைக்கொல்லிகள்), ஊட்டச் சத்துக்கள், பயிர் ஊக்கிகள் மற்றும் உயிர் உரங்களை ட்ரோன் மூலம் தெளித்தல் உள்ளிட்ட செயல்பாடுகளுக்கு கிசான் ட்ரோன்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல். ட்ரோன் உபயோகம் குறித்த நெறிமுறைகளை வகுக்க டிரோன் குழுவை உருவாக்கி, முக்கிய பயிர்களில் ட்ரோன் உபயோகத்தை செயல்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை – உழவர் நலத்துறை மூலம் அறுபது ட்ரோன்களை வாங்குவதற்கும், 14,400 எக்டரில் ட்ரோன் தெளிப்பு செயல்பாட்டிற்கும் ரூ. 10.32 கோடி செலவில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பனை மரத்தின் மரபியல் வளங்களை சேகரித்தல், அதிக மகசூல் தரும் பனை வகைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நாற்றங்கால் நுட்பங்கள் மூலம் பனை ஆராய்ச்சியை மேம்படுத்த கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, பனை பற்றிய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டங்கள் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம், வேளாண்மைக் கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஈரோடு மாவட்டம் பவானிசாகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மஞ்சள் ஆராய்ச்சி நிலையத்தில் மஞ்சள் தொடர்பான அனைத்து ஆராய்ச்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

இயற்கை வேளாண்மை விஞ்ஞானி நம்மாழ்வார் பெயரில் ஆராய்ச்சி மையமாகத் தரம் உயர்த்தப்பட்ட கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் நிலையான இயற்கை வேளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக்கான ஆராய்ச்சி மற்றும் நடைமுறைகளை நெறிமுறைப்படுத்த கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

## 4.5. மாணவர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு ஆலோசனை

மாணவர் நல மையம், மாணவர்களை ஊக்குவிக்கும் உரைகள், பயிற்சி வகுப்புகள், மாதிரி

குழு கலந்துரையாடல்கள், பயிற்சி நேர்காணல் தேர்வுகள் மற்றும் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் போன்றவற்றை நடத்தி ஆற்றல் மிக்க மாணவர்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

மாணவர் நல மையம் வாயிலாக 2021–22 ஆம் ஆண்டில் மொத்தம் 212 மாணவர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவற்றில் வேளாண் தொழில் நிறுவனங்கள் (36), உணவு நிறுவனங்கள் (39), அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் (128), நிதி நிறுவனங்கள் (7) மற்றும் இதர நிறுவனங்கள் (2) ஆகும். மாணவர்களின் தனித்திறனையும் கருத்துப் பரிமாற்ற திறனையும் மேம்படுத்தும் விதத்தில் அதிநவீன ஆய்வகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### 4.6. வேளாண்மை ஆராய்ச்சி

தமிழ்நாடு முழுவதும் 18 உறுப்புக்கல்லூரிகள் மற்றும் 39 வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள பயிர்களுக்கேற்ப ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஆய்வுகளுக்குத் தேவையான நிதி மாநில அரசு, சர்வதேச நிதி வழங்கும் நிறுவனங்கள், இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தின் வாயிலாக பெறப்படுகின்றன.

### 4.6.1. வெளியிடப்பட்ட புதிய பயிர் இரகங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கடந்த 2021-22 ஆம் ஆண்டில் பின் வரும் 17 புதிய பயிர் இரகங்களை வெளியிட்டுள்ளது:-

**1. நெல் கோ 55**

குறுகிய கால இரகம் (115 நாட்கள்); அதி விளைச்சல் இரகம், சராசரி தானிய விளைச்சலாக எக்டருக்கு 6,050 கிலோ தரவல்லது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (66 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (62 சதவீதம்) தரவல்லது; தமிழ்நாட்டில் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

**2. நெல் ஏடீடி 57**

குறுகிய கால இரகம் (115 நாட்கள்); அதி விளைச்சல் இரகம், சராசரி தானிய விளைச்சலாக எக்டருக்கு 6,500 கிலோ

தரவல்லது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (69 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (60 சதவீதம்) தரவல்லது; தமிழ்நாட்டில் சொர்ணவாரி, கார், குறுவை, நவரை மற்றும் கோடை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

**3. நெல் டிகேஎம் 15**

குறுகிய கால வறட்சியைத் தாங்கி வளரும் இரகம் (115–120 நாட்கள்); சராசரியாக எக்டருக்கு 4,200 கிலோ மகசூல் தரக்கூடியது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (68 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (63 சதவீதம்) தரவல்லது; நேரடி நெல் விதைப்பிற்கு வடகிழக்கு பருவமழை காலத்தில் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் விதைக்க ஏற்ற இரகமாகும்.

**4. நெல் டிஆர்ஒய் 5**

குறுகிய கால இரகம் (110 – 115 நாட்கள்); சராசரியாக எக்டருக்கு 5,100 கிலோ மகசூல் தரக்கூடியது; மத்திய சன்ன அரிசி உடைய இந்த இரகம் அதிக அரவைத் திறனும் (64 சதவீதம்), முழு அரிசி காணும் திறனும் (54 சதவீதம்)

தரவல்லது; உவர் நிலங்களுக்கு ஏற்ற இரகமாகும்; குறுவை, பின் தாளடி மற்றும் நவரை போன்ற பருவங்களுக்கு பயிர் செய்ய ஏற்றது.

**5. உளுந்து ஏடீடி 7**

ஏடீடி 7 என்ற புதிய உளுந்து இரகமானது ஏடீடி 3 இரகத்திலிருந்து மரபு உருமாற்றத்தில் பெறப்பட்டது; 65–70 நாட்கள் வயது கொண்டது; அதிகபட்ச தானிய விளைச்சலாக எக்டருக்கு 724 கிலோ கொடுக்கவல்லது. நெல் தரிசுக்கு உகந்த இரகம்.

**6. பச்சைபயறு விபிஎன் 5**

குறுகிய கால இரகம் (70–75 நாட்கள்) சராசரியாக எக்டருக்கு 870 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; மஞ்சள் தேமல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டுள்ளது; அனைத்து பருவங்களிலும் பயிரிட உகந்தது.

**7. நிலக்கடலை விஆர்ஐ 9**

குறுகிய கால (115 நாட்கள்) அடர் கொத்து இரகம்; சராசரியாக எக்டருக்கு 2,500 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன்

கொண்டது; அதிக விதை நம்பகத்தன்மையுடன் 47% எண்ணெய் சத்து கொண்டுள்ளது; பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது; சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.

## 8. நிலக்கடலை விஆர்ஐ 10

குறுகிய கால (95 நாட்கள்) அடர் கொத்து இரகம் சராசரியாக எக்டருக்கு 2,530 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; இலைப்புள்ளி மற்றும் துரு நோய்க்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது; அதிக விதை நம்பகத்தன்மையுடன் 48% எண்ணெய் சத்து கொண்டுள்ளது; பயிர் முதிர்ந்த பருவத்தில் முதிர்ந்த காய்கள் செடியிலேயே முளைக்கும் பண்பு அற்றது; சித்திரை, ஆடி, ஐப்பசி போன்ற பருவங்களில் மழைக்கால பயிராகவும் மார்கழிப்பட்டத்தில் இறவை பயிராகவும் பயிரிட ஏற்ற இரகமாகும்.

**9. கரும்பு கோஜி 7**

இடைக்காலப் பருவ இரகம் (12 மாதங்கள்); சராசரியாக எக்டருக்கு 134 டன் கரும்பு மகசூல் நல்ல மண் வள தன்மையிலும் மற்றும் எக்டருக்கு 126 டன் கரும்பு மகசூல் உவர் நிலத்திலும் கொடுக்கவல்லது. சிகப்பு அழுகல் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**10. வாழை கோ 3**

இதன் வயது 13 மாதங்கள்; சராசரியாக வாழைக்குலையின் எடை 21 கிலோ கொண்டிருக்கும். வாழைக்குலையில் 10–11 சீப்புகளும் ஒரு சீப்பில் 16 பழங்களும் கொண்டிருக்கும்; பழம் வெளிர் நிற மஞ்சள் நிறத்தில் சாம்பல் நிற படிவம் இல்லாமல் காணப்படும்; வேர் நுண்புழு தாக்குதலை தாங்கி வளரும் தன்மை கொண்டது.

**11.பலா பிகேஎம் 1**

இது தாய் மரபு வழித் தேர்வால் உருவாக்கப்பட்டது; வருடத்திற்கு ஒரு மரம் 2.3 டன் பழங்கள் கொடுக்கவல்லது; ஒரு பழத்தின் எடை சராசரியாக 21 கிலோ; ஒரு மரத்திற்கு 106 பழங்கள் கிடைக்கும்; எக்டருக்கு 156

மரங்கள் நடலாம்; வருடத்தில் மார்ச் – மே மற்றும் நவம்பர் – டிசம்பர் என இரண்டு அறுவடைகள் செய்யலாம்; வெப்ப மண்டல மற்றும் மிதமான வெப்ப மண்டல பகுதிகளில் பயிர் செய்ய ஏற்றது.

**12. நாவல் பிகேஎம் 1**

மரத்தின் கிளைகள் கீழ்சாய்ந்த வண்ணம் காணப்படும்; சராசரியாக ஒரு மரமானது ஓராண்டிற்கு 82 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; பழங்கள் பெரிதாகவும் ஒரு பழம் 17 கிராம் எடை கொண்டதாகவும், மருத்துவ குணங்களான ஆண்டி ஆக்சிடண்ட் மற்றும் முக்கிய தாதுக்களான பொட்டாசியம், இரும்பு மற்றும் வைட்டமின் சி ஆகியவற்றை கொண்டதாகவும் இருக்கும். வறண்ட நிலங்களிலும் பயன்படாத நிலங்களிலும் பயிர் செய்ய ஏற்ற பழவகை மரமாகும்.

**13. கத்தரி எம்டியூ 2**

பயிர் காலம் 140 நாட்கள்; சராசரியாக எக்டருக்கு 31 டன் மகசூல் கொடுக்கவல்லது; தண்டு துளைப்பான் மற்றும் பூஞ்சாண நோய்க்கு மிதமான எதிர்ப்பு திறன் கொண்டது;

ஜூன்– செப்டம்பர், மற்றும் நவம்பர் – பிப்ரவரி போன்ற மாதங்களில் பயிரிட ஏற்றது.

**14. அவரை கோ 15**

பந்தல் வகையைச் சார்ந்த இரகம்; செடிக்கு 14 கிலோ மகசூல் கொடுக்கவல்லது; நட்ட 70வது நாள் முதல் காய்கள் காய்க்க தொடங்கி, 240 நாட்கள் வரை காய்க்கும்; சுமாராக 25 அறுவடைகள் செய்யலாம்.

**15. சேனைக் கிழங்கு கோ 1**

பயிர் காலம் 240 நாட்கள்; சராசரியாக கிழங்கு மகசூல் எக்டருக்கு 50 டன் கொடுக்கவல்லது; பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் நடவு செய்யலாம்; சேலம், நாமக்கல், ஈரோடு, அரியலூர், திருப்பூர், திண்டுக்கல், கடலூர், தேனி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களுக்கு ஏற்றது.

**16. மஞ்சள் பிஎஸ்ஆர் 3**

பயிர் காலம் 240 – 250 நாட்கள்; சராசரியாக மஞ்சள் மகசூல் எக்டருக்கு 51 டன் கொடுக்கவல்லது; மே முதல் ஜூன் மாதங்களில் நடவு செய்யலாம். இதில் கர்குமின் பொருள்

4.8 சதவீதம் உள்ளது; இலைப்புள்ளி நோய் மற்றும் இலை கருகல் நோய் போன்றவற்றுக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது; கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சாகுபடிக்கு ஏற்றது.

**17. கொத்தமல்லி கோ 5**

35 – 40 நாட்கள் முதல் பச்சை இலை அறுவடை செய்யலாம்; எக்டருக்கு 4.7 டன்கள் என்ற அளவில் மகசூல் கிடைக்கும்; லினாலூள் என்ற வேதிப் பொருள் சற்று அதிகமாக உள்ளது; கரீப் மற்றும் ராபி பருவங்களில் பயிர் செய்ய ஏற்றது.

### 4.6.2. ஆராய்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பல்முனை ஆராய்ச்சித் திட்டங்களை பல்வேறு நிதி வழங்கும் நிறுவனங்கள் வாயிலாக பெறப்பட்ட நிதியினை கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

### 4.6.2.1. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2021–22 ஆம் ஆண்டில் பின்வரும் ஐந்து திட்டங்களை ரூ.5.56 கோடி மதிப்பீட்டில் அரசு வழங்கியுள்ளது:–

ஏற்காட்டில் பல அடுக்கு அமைப்பில் மலை சார்ந்த பயிர்களை ஊக்குவிப்பதன் மூலம் சேர்வராயன்மலை விவசாயிகளின் வருமானத்தை பெருக்குதல் (ரூ. 2 கோடி)

மாப்பிள்ளை சம்பா போன்ற மேம்படுத்தப்பட்ட நெல் வகைகளை உருவாக்குவதற்கும், புதிய இரகங்களை விரைவாக அறிமுகப்படுத்துவதற்கும் வேக இனப்பெருக்கம் வசதி அறிமுகப்படுத்துதல் (ரூ.1.9 கோடி)

விவசாயிகள் பங்கேற்பு விதை உற்பத்தி மூலம் பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களில் விதை மாற்று விகிதத்தை அதிகரிப்பது (ரூ.1.34 கோடி).

தமிழ்நாட்டின் வறண்ட பகுதிகளில் சோதனை அடிப்படையில் ப்ரோசோபிஸ் சினேரியா உற்பத்தி மற்றும் பிரபலப்படுத்துதல் (ரூ. 20 இலட்சம்).

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முண்டுமிளகாய் உற்பத்தித் தொழில்நுட்பங்களை மறுவரையறை செய்தல் மற்றும் தொழில்நுட்பப் பரவல் தத்தெடுப்பு மூலம் அதன் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல் (ரூ.12 இலட்சம்)

### 4.6.2.2.தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீன மயமாக்கும் திட்டம் (TN– IAMP)

உலக வங்கியின் நிதியுதவியில் தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீன மயமாக்கும் திட்டம் மூலம் (TN–IAMP) 40 உபவடி நீர்ப்படுகைப் பகுதிகளுக்கான சீரான காலநிலை மற்றும் சந்தைச் சார்ந்த வேளாண்மையை ஊக்குவிக்க, 2017–24 ஆம் ஆண்டுகளுக்காக ரூ. 87.46 கோடிஅளிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## 4.7. வேளாண் விரிவாக்கக் கல்வி

### 4.7.1. வேளாண்மை அறிவியல் நிலையங்கள்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் 14 வேளாண்மை அறிவியல் நிலையங்கள் (KVK) வாயிலாக கடந்த 2021–22 ஆம் ஆண்டில் 189 பண்ணை வழி ஆய்வுகள்,

314 முதல் நிலை செயல் விளக்கத்திடல்கள், பயிற்சிகள், விவசாயிகள் தொழில் நுட்பத் திறன் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டன. விவசாயிகளுக்கும் விரிவாக்க செயல்பாட்டாளர் களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்களும், வேளாண்மை அறிவியல் நிலையங்களில் நடத்தப்படுகின்றன.

### 4.7.2. கல்வி ஊடக மையம்

கல்வி ஊடக மையம் விவசாயிகளிடையே தொழில்நுட்பம் பரப்புவதற்காக 63 வீடியோ நிகழ்ச்சிகளை நடத்தியது. 2021-22 ஆம் ஆண்டில் விவசாயிகள் / பொது மக்களின் நம்பகத் தன்மையை அதிகரிக்க 51 வீடியோ நிகழ்ச்சிகள் TNAU TV YouTube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 4.7.3.தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இணையதளம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணையதளம் (http://agritech.tnau.ac.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் சுமார் 11 இலட்சம் பக்கங்களைக் கொண்டுள்ளது. ஒரு நாளைக்கு 871 நபர்களும், ஒரு வருடத்திற்கு 3.2 இலட்சம் நபர்களும் இணையதளத்தை பயன்படுத்திக் கொள்கின்றனர்.

### 4.7.4. வேளாண்மையில் ஆன்ட்ராய்டு செயலிகளின் பயன்பாடு

நெல், கரும்பு, கேழ்வரகு, தென்னை, வாழை ஆகிய பயிர்கள் மற்றும் கால்நடை தொழில் சார்ந்த பசு, எருமை, ஆடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய கைபேசி ஆன்ட்ராய்டு செயலிகள், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கூகுள் ப்ளே ஸ்டோர் (Google Play Store) மூலம் வழங்கப்படுகிறது. கூகுள் ப்ளே ஸ்டோரில் (Google Play Store) மொத்தம் 12 ஆன்ட்ராய்டு செயலிகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

### 4.7.5. உழவரின் வளரும் வேளாண்மை

உழவரின் வளரும் வேளாண்மை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் 1975 ஆம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வரும் தமிழ் மாத இதழாகும். இந்த உழவரின் வளரும் வேளாண்மை இதழை இதுவரை 9,698 சந்தாதாரர்கள் பதிவு செய்துள்ளனர். இவ்வாண்டில் (2021–22) 1,518 ஆண்டு சந்தாதாரர்கள் மற்றும் 21 வாழ்நாள் சந்தாதாரர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர்.

### 4.7.6. விவசாயிகள் அழைப்பு மையம் (கிஸான் கால் சென்டர்)

இம்மையத்தின் மூலம் விவசாயிகள் 1551 அல்லது 1800 – 180 – 1551 என்ற எண்ணில் வட்டார மொழியில் வல்லுநர்களுடன் தொலை பேசியில் கலந்துரையாடலாம். இம்மையம் அனைத்து வேலை நாட்களிலும் காலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை செயல்படுகின்றது. 2021–22 ஆம் ஆண்டில், மொத்தம், 1,48,367 தொலைபேசி அழைப்புகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

### 4.7.7. சமுதாய வானொலி நிலையம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வானொலி நிலையம், விவசாயி சமுதாய அலைவரிசை **107.4.** என்ற அலைவரிசையில் 2010 ஆம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. உழவர்கள் மற்றும் பொது மக்கள் தேவையை பூர்த்தி செய்யும் வண்ணம், இந்த அலைவரிசை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலிருந்து 10 கிலோ மீட்டர் சுற்றளவில் சென்றடைகின்றது. திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10–12 மணி வரை

கோயம்புத்தூர் மாவட்ட உழவர்களுக்கான வேளாண் தகவல்கள் ஒலிபரப்பப்படுகின்றது. 2021–22 ஆம் ஆண்டில் இதுவரை 1,315 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.

### 4.8. தரமான விதைகள் உற்பத்தி

கடந்த, 2021–22 ஆம் ஆண்டில், 150 டன் வல்லுநர் விதைகள், 53.01 டன் ஆதார விதைகள், 15.48 டன் சான்று விதைகள், 52.48 டன் உண்மை நிலை விதைகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்யப்பட்டது. மேலும், 12.48 இலட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது.

2022–23 ஆம் ஆண்டு, 158.28 டன் வல்லுநர் விதைகள், 100 டன் ஆதார விதைகள், 9.3 டன் சான்று விதைகள், 56.38 டன் உண்மை நிலை விதைகள் மற்றும் 27 இலட்சம் நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.9. காலநிலை ஆராய்ச்சி மையம்

தமிழ்நாடு வேளண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் வானிலை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான

ஆராய்ச்சிக்கான மேம்பாட்டு மையமாகும். இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD), புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்த மையம், தமிழ்நாட்டில் "கிராமின் கிருஷி மௌசம் சேவா" (GKMS) என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றது. தொகுதி மற்றும் மாவட்ட அளவில் விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டின் ஏழு வேளாண் பகுதிகளை உள்ளடக்கிய 11 வேளாண் வானிலை ஆய்வுப் பிரிவுகள் வாயிலாக, வானிலை அடிப்படையிலான வேளாண் ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றது. மேலும் கூடுதலாக 14 வேளாண் வானிலை அலகுகள், பல்வேறு மாவட்டங்களில் உள்ள வேளாண் அறிவியல் நிலையங்களில் தொகுதி அளவிலான ஆலோசனைகள் வழங்க தொடங்கப்பட்டுள்ளது. இந்த மையங்கள் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பைப் பாதுகாப்பதற்காக தீவிர வானிலை நிகழ்வுகளை வெளியிடுகின்றன.

அலைபேசி குறுஞ்செய்தி சேவை மூலம் சுமார் 8.25 இலட்சம் விவசாயிகள் பயனடைகின்றனர். வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தென்மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவ

மழையை, மாவட்ட வாரியாக கணித்து, மழைக்காலங்கள் தொடங்குவதற்கு முன்பே முன்னறிவிப்பை திறம்பட வழங்குகின்றது.

## 4.10.விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை நுண்தகவல்

வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையமானது (DEMIC), வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி ஆய்வு மையத்தில் (CARDS) இயங்கி வருகின்றது. தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் (TN–IAMP) விவசாயிகளுக்கு முக்கிய விவசாய மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை வழங்குகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகள் மற்றும் வாசனைப் பயிர்கள் உள்ளிட்ட 14 முக்கியப் பயிர்களுக்கான விலை முன்னறிவிப்புகளை விவசாயிகளுக்கு வழங்குகின்றது. இந்த விலை முன்னறிவிப்பு மற்றும் சந்தை ஆலோசனைகளானது விதைப்பதற்கு முன்பும், அறுவடைக்கு முன்பும் அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் மூலம் சரியான

நேரத்தில் விவசாயிகளுக்கு விதைப்பு, விற்பனை, சேமிப்பு முடிவை எடுக்க உதவுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 2021–22ஆம் ஆண்டில், விதைப்பு குறித்த 11 சந்தை ஆலோசனைகளையும், அறுவடைக்கு முந்தைய 16 ஆலோசனைகளையும் இந்த தகவல் மையம் வழங்கியுள்ளது.

### 4.11. வேளாண் வணிக மேம்பாடு

வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குநரகத்தில், வேளாண் வணிக காப்பகம், தொழில் நுட்பம், வீரிய ஒட்டு இரகம் மற்றும் இயந்திர வணிகமயமாக்கல், ஆலோசனை சேவைகள், தொழில் முதலீட்டு உதவிகள், மாணவர் தொழில் முனைவோர், நிர்வாக மேம்பாட்டு திட்டம், நிறுவன மேம்பாட்டு திட்டம் மற்றும் உன்னத் பாரத் அபியான் 2.0 ஆகிய திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒன்றிய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமான (MHRD) உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்– கழகத்தின், வேளாண் வணிக இயக்குநரகம், 174 பங்கேற்பு நிறுவனங்களின் செயல்பாடுகளை வழிநடத்தவும், கண்காணிக்கவும்

மற்றும் எளிதாக்கவும் வட்டார ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்படுகின்றது.

## 4.12. அறிவுசார் சொத்துக் காப்புரிமை (Intellectual Property Rights)

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 75 காப்புரிமைகள், இரண்டு பதிப்புரிமை விண்ணப்பங்கள் மற்றும் இரண்டு புவியியல் குறியீடுகளை தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 16 காப்புரிமைகள் மற்றும் இரண்டு பதிப்புரிமைகளைப் பெற்றுள்ளது.

## 5. சர்க்கரைத்துறை

**அரும் பெறல் அமிழ்தம் அன்ன**

**கரும்பு இவண் தந்தோன் பெரும் பிறங்கடையே.**

**–குறுந்தொகை**

பொருள்: அவன்(அதியமான்), அயல்நாட்டில் இருந்து பெறுதற்கரிய அமிழ்தம் போன்ற கரும்பை இந்நாட்டிற்குக் கொண்டு வந்தவனுடைய பெரிய வழித்தோன்றல்.

*****

விவசாயிகளின் வாழ்வாதாரம், சர்க்கரை ஆலைகளின் செயல்திறன், தமிழ்நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் முதன்மைத்தொழிலான வேளாண்மையை கருத்தில் கொண்டு சர்க்கரைத் துறை முழுமையாக வேளாண்மை – உழவர் நலத் துறையின் கீழ் செயல்பாட்டிற்கு இந்தாண்டு முதல் கொண்டு வரப்பட்டுள்ளது.

விவசாயம் சார்ந்த தொழிலான சர்க்கரை ஆலைகள், தமிழ்நாட்டில் 1,50,000 க்கும் மேற்பட்ட

விவசாயிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. சர்க்கரை ஆலைகள் 50,000க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும் 4,00,000க்கும் மேற்பட்டவர்களுக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்குகிறது. இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் உள்ளது. மாநிலத்தின் ஆண்டு சர்க்கரைத் தேவை 15 இலட்சம் மெட்ரிக் டன் என்று இருக்கும் போது ஆண்டிற்கு சுமார் எட்டு இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை மட்டுமே தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள 42 சர்க்கரை ஆலைகளில் 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையின் கீழும், இரண்டு சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையின் கீழும், 24 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையின் கீழும் உள்ளன. 2021-22 அரவை பருவத்தில் 13 கூட்டுறவு, இரண்டு பொது மற்றும் 14 தனியார் துறை சர்க்கரை ஆலைகள் என மொத்தம் 29 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

## 5.1. கரும்பு சாகுபடி

தமிழ்நாட்டில், வெண் சர்க்கரை உற்பத்திக்காக கரும்பு சுமார் 1.27 இலட்சம் எக்டர் பரப்பளவில் ஒரு எக்டருக்கு 101.5 மெட்ரிக் டன் உற்பத்தி திறனுடன் சாகுபடி செய்யப்படுவதுடன் இந்திய அளவில் உற்பத்தித் திறனில் முதலிடத்தில் உள்ளது. சர்க்கரை ஆலைகளிலிருந்து பெறப்படும் முக்கிய உப பொருட்களான கரும்பு சக்கை, கழிவுப்பாகு மற்றும் கழிவு மண் ஆகியவை சர்க்கரை ஆலைகளுக்கு கூடுதல் வருவாயை அளிக்கிறது.

கரும்பில் மகசூல் மற்றும் சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்துவதற்காக தமிழ்நாடு அரசால் பல்வேறு சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூட்டுறவு, பொது மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகளில் அதிக மகசூல் தரக்கூடிய மற்றும் அதிக சர்க்கரை கட்டுமானம் தரக்கூடிய கரும்பு இரகங்களான கோ 11015, கோ.கு 6, கோ.க 13339, கோ 0212 மற்றும் கோ 86032 ஆகிய இரகங்களை பயிரிட சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 2022–23 நடவுப் பருவத்தில் 1.4 இலட்சம் எக்டர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.1.1. கரும்பு சாகுபடி மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

### 5.1.1.2. கரும்பு விவசாயிகளுக்கு இடைக்கால உற்பத்திக்கான ஊக்கத்தொகை (TPI) மற்றும் சிறப்பு ஊக்கத்தொகை

கரும்பு விவசாயிகளின் நலனைக் காக்கும் வகையிலும், கரும்பு விலையை உயர்த்தி வழங்கவேண்டும் என்ற கரும்பு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிவர்த்தி செய்யும் வகையிலும், தமிழ்நாடு அரசு, 2020–21அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் ஆதாய விலை (FRP) யைவிட கூடுதலாக டன் ஒன்றிற்கு ரூ.42.5 இடைக்கால உற்பத்தி ஊக்கத் தொகையாகவும், சிறப்பு ஊக்கத்தொகையாக ரூ.150/– அறிவிக்கப்பட்டு முறையே. ரூ.39.4 கோடி மற்றும் ரூ. 139.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதனடிப்படையில், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதியுள்ள 91,120 கரும்பு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு

ரூ.150.89 கோடி இடைக்கால உற்பத்திக்கான ஊக்கத்தொகை மற்றும் சிறப்பு ஊக்கத்தொகையாக நேரடியாக வழங்கப்பட்டுள்ளதன் வாயிலாக நீண்ட இடைவெளியான 2015-16 அரவைப்பருவத்திற்கு பிறகு விவசாயிகள் டன் ஒன்றிற்கு ரூ. 2900/- கிடைக்கப் பெற்றுள்ளனர்.

ஒன்றிய அரசு 2021-22 அரவைப் பருவத்திற்கு 9.5 சதவிகித சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு, நியாயமான மற்றும் ஆதாய விலையாக ரூ.2,755/- எனவும், அதற்கு மேல் உள்ள ஒவ்வொரு 0.1 சதவிகித கூடுதல் சர்க்கரைக் கட்டுமானத்திற்கு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.29 எனவும் அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் சராசரி சர்க்கரை கட்டுமானம் 9.5 சதவிகிதத்திற்கும் குறைவாக இருப்பதால், பெரும்பாலான கரும்பு விவசாயிகள் நியாயமான மற்றும் ஆதாய விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 2,755/- மட்டுமே பெறுகிறார்கள்.

இதன் காரணமாக, கரும்பு விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திடவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்திடவும், 2021-22 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு

வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றிற்கு ரூ.195/- என மாநில அரசு அறிவித்துள்ளது. இதன்மூலம், தமிழ்நாட்டிலுள்ள 1.2 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

### 5.1.1.3.கரும்பு சாகுபடி மேம்பாடு மற்றும் சாகுபடி செலவினங்களை குறைக்கும் செயல்பாடுகள்

1. கரும்பு உற்பத்தி, உற்பத்தி திறன், சர்க்கரைக் கட்டுமானம், புதிய கரும்பு இரகங்களை விவசாயிகள் சாகுபடி செய்திட ஊக்குவிக்கும் வகையிலும், 2022-23ஆம் நிதி ஆண்டில் கரும்பு சாகுபடி மேம்பாட்டுத் திட்டம் ரூ.10 கோடி நிதி ஒதுக்கீட்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.
2. பண்ணையாட்களின் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு கரும்பு சாகுபடியில் நிலம் தயார் செய்வது முதல் அறுவடை வரை இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது. 2021-22ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மை

இயந்திரமயமாக்கல் (SMAM) துணைத் திட்டத்தின் கீழ் 15 கரும்பு அறுவடை இயந்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2022–23ஆம் ஆண்டில், தகுதியுள்ள கரும்பு விவசாயிகளுக்கு 25 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

3. கரும்பு விவசாயிகளுக்கு தரமான விதைப் பொருட்களை வழங்குவதை உறுதி செய்வதற்காக அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலும் மூன்று நிலை நாற்றங்கால் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
4. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு தரமான திசு வளர்ப்பு நாற்றுகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்காக கள்ளக்குறிச்சி–1 சர்க்கரை ஆலையில் திசு வளர்ப்பு ஆய்வகம் 2021 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. 2021–22 நடவு பருவத்தில், 1,20,000 தரமான திசு வளர்ப்பு நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு கரும்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

5. 1982 முதல் செங்கல்பட்டில் இயங்கி வரும் ஒரு இலட்சம் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட முதன்மை உயிரியல்–கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடத்தில் (MBRL) அசிட்டோபாக்டர், பாஸ்போபாக்டீரியா டிரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ், மெட்டாரைசியம், பேசிலஸ் துரிஞ்ஜியன்சிஸ், ஆர்பஸ்குலர் மைகோரைசா போன்ற உயிர் உரங்கள் மற்றும் உயிரி பூச்சிக்கொல்லிகள் வணிக ரீதியில் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் கரும்பு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது.
6. தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையம் மூலம் மேம்பட்ட கரும்பு சாகுபடி தொழில்நுட்பங்கள், சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள், கரும்பு விவசாயிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் கட்டுரைகள் போன்ற பல்வேறு தகவல்கள் அடங்கிய கரும்பு கரங்கள் என்ற மாத இதழ் தமிழ் மொழியில் கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலைகள் மற்றும் பிற பங்குதாரர்கள் பயன்பெறும் வகையில் வெளியிடப்படுகிறது.

## 5.2. சர்க்கரை உற்பத்தி

தமிழ்நாட்டில் 2020–21ஆம் ஆண்டில், கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் 98.67 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு, 8.97 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 8.85 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

2021–22 ஆம் அரவைப் பருவத்தில் 15.03.2022 வரை 64.32 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.16 சதவீத சராசரி சர்க்கரை கட்டுமானத்துடன் 5.76 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது

### 5.2.1.சர்க்கரை தொழிற்சாலை மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

### 5.2.1 .1. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் இணை மின் நிலைய திட்ட செயல்பாடுகள்

அனுமதிக்கப்பட்ட 12 இணை மின் நிலைய திட்ட பணிகளில் தற்போது வரை ஐந்து ஆலைகளில் (செங்கல்ராயன், வேலூர், செய்யார், அறிஞர் அண்ணா

மற்றும் பெரம்பலூர்) இணை மின் திட்ட நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. தற்போது தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 12 மெகாவாட் இணைமின் திட்டப்பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு நிர்மாணப்பணிகள் முடிவுற்று சோதனை ஓட்டத்துடன் 2021-22 அரவைப் பருவத்தில் 07.03.2022 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மே மாதம் 2015 முதல் இணை மின் திட்டப் பணிகள் ஏதும் நடைபெறாமல் இருந்த எம்.ஆர்.கே, கள்ளக்குறிச்சி-1 மற்றும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் மீண்டும் பணிகள் துவங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் பணிகள் நடைப்பெற்று வருகின்றது. மேற்கண்ட மூன்று ஆலைகளிலும் திட்டப்பணிகள் முடித்து வருகின்ற 2022-23 அரவைப் பருவத்தில் இணை மின் நிலையம் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 5.2.1.2.சர்க்கரை ஆலைகளுக்கான இதர நடவடிக்கைகள்

1. விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் நீண்ட நாள் கோரிக்கையை கருத்தில் கொண்டு, மயிலாடுதுறை மாவட்டத்தில் அமைந்துள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையினை மீண்டும் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்ய மாண்புமிகு வேளாண்மை –உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி குழு ஒன்று அமைக்கப்படும்.
2. 2022–23 ஆம் ஆண்டில், 15 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள கரும்பு எடைத்தளங்கள் ரூ.1.5 கோடி செலவில் கணினிமயமாக்கப்பட்ட நவீன தானியங்கி எடைத்தள அமைப்பாக மேம்படுத்தப்பட உள்ளது.
3. சர்க்கரை ஆலைகளில் ஆய்வுக்கூடங்களில் ஆய்வுகளை விரைவாகவும் துல்லியமாகவும் மேற்கொள்ளும் வகையில், 2022–23 ஆம்

ஆண்டில் 15 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் உள்ள ஆய்வகங்கள் ரூ.3 கோடி செலவில் நவீனமயமாக்கப்பட உள்ளது.

### 5.3. சர்க்கரை மற்றும் உப பொருட்கள் விற்பனை

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளினால் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரை மற்றும் அதன் உப பொருட்கள் தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

#### 5.3.1. சர்க்கரை விற்பனை வருவாய்

2021–22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 2.58 இலட்சம் மெட்ரிக் டன் சர்க்கரை விற்பனை செய்யப்பட்டு ரூ.856.68 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

#### 5.3.2. கரும்புச் சக்கை விற்பனை வருவாய்

சர்க்கரை ஆலை மற்றும் இணைமின் நிலைய எரிபொருள் தேவைக்கு எஞ்சிய கரும்பு சக்கையானது காகித தொழிற்சாலை மற்றும் உயிர் ஆற்றல் அலகுகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

2021–22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 60,332 மெட்ரிக் டன் கரும்புச் சக்கை விற்பனை செய்யப்பட்டு ரூ.14.63 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 5.3.3. கரும்புக் கசண்டு விற்பனை வருவாய்

அமராவதி மற்றும் சேலம் வடிப்பாலைகளின் தேவையினை பூர்த்தி செய்த பின்னர் எஞ்சிய கரும்பு கசண்டு தனியார் வடிப்பாலைகள், கால்நடை தீவன உற்பத்தியாளர்கள் மற்றும் இதர பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. 2021–22 ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 84,843 மெட்ரிக் டன் கரும்புக் கசண்டு விற்பனை செய்யப்பட்டு ரூ.64.42 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 5.3.4. எரிசாராய விற்பனை வருவாய்

சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள வடிப்பாலைகளில் 2021–22–ஆம் நிதியாண்டில் 15.03.2022 வரை 37.85 இலட்சம் லிட்டர் எரிசாராயம் விற்பனை செய்யப்பட்டு ரூ.18.19 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

## 5.4 பணியாளர் அமைப்பு

### 5.4.1. சர்க்கரைத்துறை

சர்க்கரைத்துறை மொத்தம் 59 பணியாளர்களுடன் இயங்கி வருகிறது.

அட்டவணை: 5.1. – அலுவலர்கள்

| வ. எண். | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர் இ.ஆ.ப. | 1 |
| 2. | கூடுதல் ஆணையர் இ.ஆ.ப. | 1 |
| 3. | கூடுதல் இயக்குநர் | 1 |
| 4. | இணை இயக்குநர் (கரும்பு) | 1 |
| 5. | துணை இயக்குநர் (கணக்கு) | 1 |
| 6. | உதவி இயக்குநர் | 2 |
| 7. | கணக்கு அலுவலர் | 1 |
| 8. | தொழில் நுட்ப அலுவலர் | 1 |
| **மொத்தம்** | | **9** |

அட்டவணை: 5.2. – அமைச்சு மற்றும் இதர பணியாளர்கள்

| வ. எண். | பதவி | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | கூட்டுறவு சார்பதிவாளர் (தா&நி) | 4 |
| 2. | கண்காணிப்பாளர்கள் | 6 |
| 3. | உதவியாளர்கள் | 15 |
| 4. | சுருக்கெழுத்து தட்டச்சர்கள் | 4 |
| 5. | தட்டச்சர்கள் | 3 |
| 6. | இளநிலை உதவியாளர்கள் | 3 |
| 7. | தொலைபேசி இயக்குபவர் | 1 |
| 8. | ஓட்டுநர் | 1 |
| 9. | பதிவறை எழுத்தர் | 1 |
| 10. | அலுவலக உதவியாளர்கள் | 12 |
| **மொத்தம்** | | **50** |

## 5.4.2.கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பணியாளர்கள் விவரம்

கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 8,446 பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

**அட்டவணை : 5.3. – பணியாளர்கள் விவரம்**

| வ.எண் | சர்க்கரை ஆலைகள் | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| அ. கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் | | |
| 1 | அமராவதி | 516 |
| | **வடிப்பாலை** | 47 |
| 2 | ஆம்பூர் | 516 |
| 3 | செய்யாறு | 496 |
| 4 | செங்கல்ராயன் | 509 |
| 5 | தருமபுரி | 505 |
| 6 | கள்ளக்குறிச்சி –1 | 529 |
| 7 | கள்ளக்குறிச்சி–2 | 356 |
| 8 | மதுராந்தகம் | – |
| 9 | எம்.ஆர்.கே. | 495 |

| வ.எண் | சர்க்கரை ஆலைகள் | அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 10 | ந.பு.கே.ஆர்.ஆர் | 548 |
| 11 | நேஷனல் | 529 |
| 12 | சுப்ரமணிய சிவா | 476 |
| 13 | சேலம் | 506 |
| | **வடிப்பாலை** | 47 |
| 14 | திருத்தணி | 504 |
| 15 | திருப்பத்தூர் | 444 |
| 16 | வேலூர் | 514 |
| **ஆ. பொதுத்துறை சர்க்கரை ஆலைகள்** | | |
| 17 | அறிஞர் அண்ணா | 440 |
| 18 | பெரம்பலூர் | 469 |
| | **மொத்தம்** | **8,446** |

## 6. விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றளிப்பு

வேளாண் தொழிலானது தேசத்தின் உணவுத்தேவையை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் இந்திய தொழில்துறையின் மூலப்பொருட்களின் தேவையையும் நிறைவு செய்கிறது. நமது தேசத்தின் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க தரமான விதைகளே முக்கிய காரணியாக உள்ளது. அனைத்து வேளாண்மை திட்டங்களின் வெற்றிக்கும் தரமான விதை உற்பத்தியே அடித்தளமாக அமைவதுடன் விவசாயிகளின் வருமானத்தையும் இருமடங்காக உயர்த்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அர்ப்பணிப்பு சேவை வாயிலாக தரமான விதைகள் உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது. இத்துறையானது உணவுப் பயிர்கள், எண்ணெய் வித்துக்கள், தீவனம் மற்றும் நார் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை மேற்கொள்ள அரசு, அரசு சார்பு மற்றும் தனியார் உற்பத்தியாளர்களின் பங்களிப்பை ஊக்குவிக்கின்றது.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையானது தரமான விதைகளுக்கு சான்று செய்வதுடன், விதை விநியோக நிலைகளை கண்காணித்து, விதையின் தரத்தை உறுதி செய்யும் பணிகளை மேற்கொள்கின்றது. மேலும் அங்கக பண்ணைகளை சான்று செய்து, அங்கக விளைப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றது. இப்பணிகளானது கீழ்க்காணும் பிரிவுகளை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

1) விதைச்சான்று

2) விதை தரக்கட்டுப்பாடு

3) விதை பரிசோதனை

   i. விதை பரிசோதனை நிலையங்கள்
   ii. டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்
   iii. பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை
   iv. ஒப்பீட்டு ஆய்வகம் மற்றும் பி. டி நஞ்சு பரிசோதனை ஆய்வகம்

4) பயிற்சி

5) அங்ககச்சான்று

## 6.1. விதைச்சான்றளிப்பு :

விதைச்சான்று பிரிவு, விதைகள் சட்டம் 1966 மற்றும் விதைகள் விதிகள் 1968–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி செயல்படுகிறது. அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் இரகங்களில், இந்திய குறைந்த பட்ச விதைச்சான்று தரங்களின் அடிப்படையில், முளைப்புத்திறன், புறத்தூய்மை மற்றும் இனத்தூய்மை கொண்ட விதைகளை சான்றளிப்பு செய்யும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்துறையானது நெல் மற்றும் தானியங்களில் நிர்ணயிக்கப்பட்ட சான்று விதை உற்பத்தி இலக்கினை அடைந்துள்ளது. மேலும் பயறு வகைகள், எண்ணெய்வித்துக்கள், தீவனப் பயிர்கள், நார் பயிர்களில் சான்று விதை உற்பத்தியை அதிகரிக்க தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

விதைச்சான்றளிப்பு திட்டம் 2021–22 ஆம் ஆண்டில் 65,359 எக்டர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிகப்படியாக விதைப்பண்ணை பதிவானது திருப்பூர் (9,375 எக்டர்), தஞ்சாவூர் (6,826 எக்டர்), திருவாரூர்

(6,560 எக்டர்), விழுப்புரம் (3,876 எக்டர்), நாகப்பட்டினம் (3,765 எக்டர்) ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 34,957 எக்டர் விதைப்பண்ணை பதிவு செய்யப்பட்டுள்ளது.

2021–22ஆம் ஆண்டில் நெல், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் பயறு வகைகளில் மொத்தம் 1,29,907 மெட்ரிக் டன் அளவு விதை சான்று செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் (71,282 மெ. டன்), விழுப்புரம் (8,128 மெ. டன்), மதுரை(5,668 மெ.டன்), திருநெல்வேலி(4,831 மெ. டன்), மற்றும் நாமக்கல் (3,318 மெ. டன்) ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் விதை சான்று செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் 36,680 மெட்ரிக் டன் விதை சான்று செய்யப்பட்டுள்ளது.

விதைச்சான்று துறையில் 2022–23ஆம் ஆண்டில் 57,000 எக்டர் பரப்பளவில் விதைப்பண்ணைகள் பதிவு செய்து 1,10,000 மெட்ரிக் டன் சான்று விதை உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை:6. 1 விதைச்சான்றளிப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு - 2021-2022

| வ. எண் | தலைமையிடம் | விதைப்பண்ணை பதிவு பரப்பு (எக்டர்) | | | |
|---|---|---|---|---|---|
| | | அரசு | அரசு சார்பு | தனியார் | மொத்தம் |
| 1 | காஞ்சிபுரம் | 1038 | 0 | 476 | 1514 |
| 2 | திருவள்ளூர் | 833 | 0 | 171 | 1004 |
| 3 | கடலூர் | 1835 | 11 | 608 | 2454 |
| 4 | விழுப்புரம் | 2460 | 0 | 1416 | 3876 |
| 5 | வேலூர் | 1031 | 0 | 193 | 1224 |
| 6 | திருவண்ணாமலை | 2427 | 0 | 95 | 2522 |
| 7 | சேலம் | 1193 | 65 | 439 | 1697 |
| 8 | நாமக்கல் | 668 | 42 | 95 | 805 |
| 9 | தருமபுரி | 903 | 0 | 4 | 907 |
| 10 | கிருஷ்ணகிரி | 891 | 0 | 20 | 911 |
| 11 | கோயம்புத்தூர் | 291 | 68 | 632 | 991 |
| 12 | ஈரோடு | 650 | 158 | 2463 | 3271 |
| 13 | திருச்சி | 928 | 33 | 536 | 1497 |
| 14 | பெரம்பலூர் | 571 | 0 | 605 | 1176 |
| 15 | கரூர் | 387 | 0 | 150 | 537 |
| 16 | புதுக்கோட்டை | 928 | 72 | 165 | 1165 |
| 17 | தஞ்சாவூர் | 1746 | 83 | 4997 | 6826 |
| 18 | நாகப்பட்டினம் | 2139 | 41 | 1585 | 3765 |
| 19 | திருவாரூர் | 2221 | 9 | 4330 | 6560 |

| வ. எண் | தலைமையிடம் | விதைப்பண்ணை பதிவு பரப்பு (எக்டர்) | | | |
|---|---|---|---|---|---|
| | | அரசு | அரசு சார்பு | தனியார் | மொத்தம் |
| 20 | மதுரை | 529 | 59 | 1592 | 2180 |
| 21 | தேனி | 244 | 0 | 652 | 896 |
| 22 | திண்டுக்கல் | 417 | 109 | 2825 | 3351 |
| 23 | இராமநாதபுரம் | 678 | 0 | 17 | 695 |
| 24 | சிவகங்கை | 439 | 0 | 27 | 466 |
| 25 | விருதுநகர் | 501 | 10 | 585 | 1096 |
| 26 | திருநெல்வேலி | 1368 | 8 | 1569 | 2945 |
| 27 | தூத்துக்குடி | 1252 | 20 | 228 | 1500 |
| 28 | கன்னியாகுமரி | 136 | 0 | 18 | 154 |
| 29 | திருப்பூர் | 457 | 22 | 8896 | 9375 |
| | மொத்தம் | **29161** | **810** | **35389** | **65360** |

### 6.2. விதைத் தரக்கட்டுப்பாடு:

விதைத் தரக்கட்டுப்பாடு பிரிவு பிற மாநிலங்களை காட்டிலும் தேசத்தின் முன்னோடியாகவும், செயலாக்கத்தில் முதன்மையிடத்திலும் உள்ளது. இப்பிரிவானது விதைகள் சட்டம், 1966, விதைகள் விதிகள் 1968, விதைகள் (கட்டுப்பாடு) ஆணை 1983 மற்றும் சுற்றுச்சூழல் (பாதுகாப்பு சட்டம்) 1986 போன்ற

பல்வேறு விதைச்சட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி செயல்பட்டு வருகின்றது. விதைகளின் தரத்தை கண்காணித்தும், ஒழுங்குப்படுத்தியும் தரமான விதை விற்பனையை உறுதிப்படுத்துகிறது.

இத்துறையின் மூலம் 1,405 அரசு நிறுவனங்களுக்கும், 1,167 அரசு சார்பு நிறுவனங்களுக்கும் மற்றும் 10,079 தனியார் நிறுவனங்களுக்கும் ஆக மொத்தம் 12,651 விதை விற்பனை நிலையங்களுக்கு விதைகள் (கட்டுப்பாட்டு) ஆணை 1983ன் படி விதை விற்பனை உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது. 2021–2022–ஆம் நிதியாண்டில், விதை விற்பனை நிலையங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 80,909 ஆய்வாளர் மற்றும் பணி விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதில் 1,775 மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டு துறை மற்றும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தரமற்ற மற்றும் பிற விதி மீறல்களுக்காக 2,541 மெட்ரிக் டன் அளவிலான விதைகளுக்கு விற்பனை தடை ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.22.21 கோடி ஆகும்.

2022–2023 ஆம் ஆண்டில் விதை விற்பனை நிலையங்களில் 70,000 ஆய்வுகள் மேற்கொள்ளவும், 81,000 ஆய்வாளர் மற்றும் பணி விதை மாதிரிகள் தரப்பரிசோதனைக்காக எடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 6.3 விதைப்பரிசோதனை

விதைத் தரக்கட்டுபாட்டில் விதைப் பரிசோதனை முக்கிய பங்கு வகிக்கிறது. அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்களில் விதை மாதிரிகளின் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத்திறன் மற்றும் பிறரக கலவன்கள் ஆகிய தரக்குறியீடுகள் ஆய்வு செய்யப்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைகள் உரிய காலத்தில் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில், 33 அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. திருப்பூரில் புதியதாக விதைப்பரிசோதனை நிலையம் 01.03.2022 முதல் செயல்பட துவங்கியுள்ளது. அறிவிக்கை செய்யப்பட்ட விதைப்பரிசோதனை நிலையங்களில் விதைச்சான்று மற்றும் தரக்கட்டுப்பாடு பிரிவிலிருந்து முறையே பெறப்படும் சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர்

விதை மாதிரிகள் மற்றும் விவசாயிகள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறப்படும் பணி விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படுகின்றன.

2021–22ஆம் ஆண்டில் மொத்தம் 1,09,563 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 2022–23ஆம் ஆண்டில் 1,10,000 விதை மாதிரிகள் பகுப்பாய்வு மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

**6.3.1.பன்னாட்டு விதைப்பரிசோதனை குழும அங்கீகாரம் பெற்ற விதைப்பரிசோதனை நிலையம்**

கோவை விதைப்பரிசோதனை நிலையம் 2014ஆம் ஆண்டில் பன்னாட்டு விதைப்பரிசோதனை குழுமத்தின்(ISTA, Switzerland) அங்கீகாரம் பெற்ற ஆய்வகமாக தரம் உயர்த்தப்பட்டது. இந்த ஆய்வகம் இந்தியாவிலேயே பொதுத் துறைகளில் பன்னாட்டுக் குழுமத்தின் அங்கீகாரம் பெற்ற முதல் ஆய்வகம் ஆகும். இப்பரிசோதனை நிலையம் தானியங்கள், பயறு வகைகள் மற்றும் காய்கறி பயிர்களுக்கு விதைக்குவியல்களில் இருந்து மாதிரிகள் எடுக்கவும் அவற்றின் புறத்தூய்மை, பிற தானிய விதை,

முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பதம் கண்டறியும் பரிசோதனைக்காக பன்னாட்டு குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆய்வகம் சர்வதேச தரத்தில் ஏற்றுமதியாகும் விதைக்குவியல்களுக்கு ஆரஞ்சு சர்வதேச விதைக்குவியல் சான்றிதழ் மற்றும் நீல சர்வதேச விதைமாதிரி சான்றிதழ்கள் வழங்கும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

### 6.3.2. மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்

விவசாயிகளுக்கு தரமான விதைகள் விரைவாகவும், உரிய காலத்திலும் கிடைக்க வழிவகை செய்யும் பொருட்டு உயர்தர தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய டி.என்.ஏ மரபணு ஆய்வகம் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்ககம், கோவையில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 2007 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மரபணு பரிசோதனை பகுப்பாய்வு முறையில் நெல் இனத்தூய்மை பரிசோதனை முடிவுகள் நான்கு முதல் ஐந்து நாட்களில் மிகத் துல்லியமாக கண்டறியப்படுகிறது. இந்தியாவிலேயே வேளாண்மைத் துறையின் கீழ் முதன் முதலாக நிறுவப்பட்ட மரபணு பரிசோதனை நிலையம் இதுவே

ஆகும். மேலும் 2014–இல் தமிழக அரசால் "மாநில டி.என்.ஏ கைரேகை ஆய்வகம்" என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் தற்போது தமிழ்நாட்டில் பிரதானமாகப் பயிரிடப்படும் அறிவிக்கை செய்யப்பட்ட 25 நெல் இரகங்களுக்கு **SSR** மரபணு குறியீட்டை பயன்படுத்தி மிகத் துல்லியமாக இனத்தூய்மை பரிசோதனை செய்யும் திறன் கொண்டுள்ளது.

### 6.3.3. பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை

தமிழ்நாடு அரசின் மூலம் அறிவிக்கை செய்யப்பட்ட பயிர் வளர்ப்பு பரிசோதனை பண்ணை விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநரகத்தின் கீழ் கோவை மாவட்டம், கண்ணம்பாளையத்தில் 1997 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. விதை குவியல்களில் இருந்து பெறப்பட்ட விதை மாதிரிகளின் இனத்தூய்மை இந்திய குறைந்தபட்ச விதைச்சான்று தரங்களின் படி ஆய்வு செய்யப்படுகிறது. விதை மாதிரிகளின் இனத்தூய்மையானது பயிர்களின் வளர் பருவகாலம் முழுவதும் ஆய்வு செய்யப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. இனத்தூய்மை பகுப்பாய்விற்கு பெறப்பட்ட பயிர் இரகங்கள் மற்றும் வீரிய

இரகங்களில் அந்தந்த இரகங்களுக்கு உரிய தனித்துவ புறத்தோற்ற வெளிப்பாடுகளை கொண்டு இனத்தூய்மை மேற்கொள்ளப்படுகிறது. பயிர் வளர்ப்பு பரிசோதனையின் முடிவுகள் பிரிவு 12பி விதைச்சட்டம், 1966–இன்படி விதைப் பகுப்பாய்வாளரால் அறிவிக்கப்படுகிறது. 2021–22ஆம் ஆண்டில் 4,145 விதை மாதிரிகளுக்கு இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டு 2022–23–இல் 4,200 விதை மாதிரிகளில் இனத்தூய்மை பரிசோதனை மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**6.4. பயிற்சி பிரிவு :**

இத்துறை சார்ந்த பணிகள் குறித்தும், தொழில்நுட்ப அறிவினை மேம்படுத்தும் பொருட்டும், இத்துறையின் அலுவலர்கள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் அங்கக விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

2021–2022 ஆம் ஆண்டில், 47,320 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 2022–2023 ஆம் ஆண்டில் 50,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**6.5 அங்கக சான்றளிப்பு :**

தமிழ்நாடு அங்கக சான்றளிப்பு துறையானது 2007ம் ஆண்டு தமிழக அரசால் துவங்கப்பட்டது. அங்கக முறையில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களின் தரத்தை உறுதி செய்யும் பொருட்டும், நுகர்வோர்களிடையே நம்பகத்தன்மையை ஏற்படுத்தும் வகையிலும் தரம் வாய்ந்த அங்கக உற்பத்தி நடைமுறையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு சான்றளிப்பு பணியை அர்ப்பணிப்புடன் செய்து வருகிறது. மேலும் இது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையத்தின் (APEDA) மதிப்பேற்றல் பெற்ற சான்றளிப்பு துறையாகும். இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் மற்றும் சான்றளிப்பு நடைமுறைகள் தேசிய அங்கக உற்பத்தி தரத்தின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

துறையில் வழங்கப்படும் சான்றுகள்:

அ) பயிர் உற்பத்தி

ஆ) வேளாண் விளைபொருள் பதனிடுதல்

இ) வணிகம் மற்றும் ஏற்றுமதி

இந்தியாவில் செயல்பாட்டிலுள்ள 33 அங்ககச்சான்று நிறுவனங்களுள் மிக அதிகமான தனிநபர் விவசாயிகளை உள்ளடக்கிய நிறுவனம் என்ற தனித்துவத்தை தமிழ்நாடு அங்ககச்சான்றளிப்பு துறை பெற்றுள்ளது. தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்ந்த விவசாயிகளுக்கு அதிக அளவில் குழு சான்று வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலம் வழங்கப்படும் வாய்ப்பு சான்றானது (Scope Certificate) ஒரு வருடத்திற்கு செல்லுபடியாகும். 2021-2022 ஆம் ஆண்டில் 1,632 தனிநபர் விவசாயிகளுக்கும், 158 குழு மூலம் 23,867 விவசாயிகளுக்கும், ஆறு உணவு பதனிடும் விவசாயிகளுக்கும் மற்றும் நான்கு வணிக நிறுவனங்களுக்கும் வாய்ப்பு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

இத்துறையின் மூலம் 2021-2022 ஆம் ஆண்டில் 77.6 மெட்ரிக் டன் அளவுள்ள தேங்காய் எண்ணெய், காபி, முருங்கை, தேயிலை, கோகோ ஆகியவற்றிற்கு வணிகமாற்றுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ.38.92 இலட்சம் ஆகும்.

2021–22 ஆம் ஆண்டில் 1,15,597 ஏக்கர் பரப்பளவில் அங்ககப்பண்ணை பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் திண்டுக்கல் (9,519 ஏக்கர்), சேலம் (9,044 ஏக்கர்), கிருஷ்ணகிரி (8,082 ஏக்கர்), தருமபுரி (7,384 ஏக்கர்) மற்றும் நீலகிரி (6,428 ஏக்கர்) ஆகிய மாவட்டங்களில் அதிகளவு பரப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதர மாவட்டங்களில் (75,122 ஏக்கர்) பரப்பளவு பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2022– 2023 ஆம் ஆண்டில் 1,25,000 ஏக்கர் பரப்பளவில் அங்ககச்சான்று பதிவு மேற்கொள்ள இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**6.6.விதைச்சான்றளிப்புத் துறையை கணிணி மயமாக்குதல் (SPECS – விதை உற்பத்தி. அமலாக்கம் மற்றும் சான்றளிப்பு முறை):**

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அனைத்து தொழில்நுட்ப நடைமுறைகளையும் கணினிமயமாக்கும் பொருட்டு, SPECS எனும் பிரத்யேக மென்பொருள் வேளாண்மை இயக்குநரக கணினி பிரிவின் மூலம் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இம்மென்பொருள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் அமலாக்கப்பணிகளை இணைய வழியில் அளிப்பதன் மூலம் துறையின் அனைத்து சேவைகளையும் பயனீட்டாளர்களுக்கு துரிதமாகவும், வெளிப்படை தன்மையுடனும் வழங்கப்படுவது உறுதிபடுத்தப்படுவதுடன், துறைசார்ந்த நிகழ்வுகளை அரசு கண்காணிக்கவும் உதவுகிறது.

இம்முயற்சியானது, இந்தியாவிலுள்ள ஏனைய விதைச்சான்று துறை, முகமைகளிடையே முதன்மையானது என்பது ஒரு சிறப்பம்சமாகும். தற்பொழுது, விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் அனைத்து பயனீட்டாளர்களும் இத்துறை சார்ந்த சேவைகளை விரைவாகவும், வெளிப்படைத் தன்மையுடனும், துல்லியமாகவும் SPECS மென்பொருள் மூலம் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

**6.7. பணியாளர்கள் விவரம்:**

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை மொத்தம் 845 பணியாளர்களுடன் சிறப்பாக இயங்கி வருகிறது.

**அட்டவணை : 6.2. அலுவலர்கள் விவரம்**

| வ. எண் | பணியிட விபரம் | ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் |
|---|---|---|
| 1 | விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று இயக்குநர் | 1 |
| 2 | விதைச்சான்று இணை இயக்குநர் | 1 |
| 3 | விதை ஆய்வு இணை இயக்குநர் | 1 |
| 4 | தரமேலாளர் | 1 |
| 5 | விதை ஆய்வு துணை இயக்குநர் | 15 |
| 6 | விதைச்சான்று உதவி இயக்குநர் | 38 |
| 7 | விதைச்சான்று அலுவலர் | 119 |
| 8 | விதைச்சான்று அலுவலர் மற்றும் அங்ககச்சான்று அலுவலர் | 26 |
| 9 | விதை ஆய்வாளர்கள் | 70 |
| 10 | வேளாண்மை அலுவலர்கள் | 63 |
| 11 | அங்ககச்சான்று ஆய்வாளர்கள் | 10 |
| 12 | ஆட்சி அலுவலர், சட்ட ஆலோசகர், உதவி கணக்கு அலுவலர், கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் இதர பணியிடங்கள் | 500 |
| | **மொத்தம்** | **845** |

## 7.வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை

தமிழக அரசு விளைபொருட்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு பல்வேறு தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் விளைபொருட்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. விளைந்த விளைபொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்து விவசாயிகள் பயன்பெறுவதற்குரிய விற்பனை தளத்தினை ஒழுங்குமுறை விற்பனைகூடங்களின் வாயிலாக வழங்கி வருகிறது. எனினும், விளைபொருட்களின் மதிப்புக் கூட்டுதல், விற்பனையை மேம்படுத்துதல் வாயிலாக விவசாயிகளை வேளாண் தொழில் முனைவோராக மாற்றுவதற்குரிய அனைத்து பணிகளையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களை நியாயமான விலையில், சரியான எடையில் விற்பனை செய்வதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருகின்றது. விலை வீழ்ச்சி காலங்களில், விளைபொருட்களை இருப்பு வைத்து பின்னர் விலையேற்ற காலங்களில்

விற்பனை செய்வதற்கு தேவையான கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளையும் வேளாண்மை விற்பனை பிரிவு செயல்படுத்துகின்றது.

விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களுக்கு தேசிய அளவில் அதிக விலை கிடைப்பதை உறுதி செய்திட மின்னணு விற்பனை முறை செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலம் நெல், சிறுதானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி மற்றும் தேங்காய் கொப்பரை போன்ற விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சந்தை விலை குறையும் காலத்தில், விவசாயிகளிடமிருந்து பயறுவகைகளும், கொப்பரை தேங்காயும் விலை ஆதரவு திட்டம் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் **இணைப்பு–I–ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

## 7.1. வேளாண்மை விற்பனை பிரிவின் செயல்பாடுகள்

### 7.1.1. விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்

தமிழ்நாட்டில் 27 விற்பனைக் குழுக்களின் கீழ் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் வேளாண் விளைபொருள் விற்பனையை முறைப்படுத்த செயல்பட்டு வருகின்றன. இங்கு விவசாயிகள் மறைமுக ஏலமுறையில் கலந்துகொண்டு தங்களது விளைபொருள்களை உள்ளூர் சந்தை விலை அல்லது பண்ணைவாயில் விலையை விட அதிக விலைக்கு விற்று நல்ல லாபம் பெற வழிவகை செய்யப்படுகிறது.

விற்பனைக் குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிப (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் 1987 மற்றும் அதன் விதிகள் 1991ன்–படி செயல்படுகின்றன.


2021–22ஆம் ஆண்டில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களின் அறிவிக்கையிடப்பட்ட அங்காடிப் பகுதிகளில் 27 இலட்சம் மெ.டன்

வேளாண் விளைபொருள் வர்த்தகம் செய்யப்பட்டு, ரூ.130.94 கோடி வரவினம் பெறப்பட்டுள்ளது.

அறுவடை காலங்களில் ஏற்படும் வேளாண் விளைபொருள்களின் விலை குறைவை தவிர்க்கவும், விளைபொருட்களை சேமிப்பு கிடங்குகளில் சேமிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடன் ரூ.3 இலட்சம் அல்லது விளைபொருட்களின் மதிப்பில் 50 சதவீத தொகையானது, ஐந்து சதவீத வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2021-22 ஆம் ஆண்டில், 1,700 விவசாயிகளுக்கு பொருளீட்டுக் கடனாக ரூ.36.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயிகளுக்கு பணப்பட்டுவாடா செய்வதற்காக விளைபொருளின் மதிப்பில் 50 சதவீதம் அல்லது இரண்டு இலட்சம் ரூபாய், ஒன்பது சதவீத வட்டியில் வியாபாரிகளுக்கு பொருளீட்டுக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 2021-22ஆம் ஆண்டில் 269 வியாபாரிகளுக்கு ரூ.4.65 கோடி பொருளீட்டுக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் வழங்கப்படும் சேவைகளுக்கு விவசாயிகளிடமிருந்து எந்த ஒரு கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.



### 7.1..2 மின்னணு தேசிய வேளாண் சந்தை

மின்னணு தேசிய வேளாண் சந்தை (e–NAM) என்னும் ஒரு அகில இந்திய மின்னணு வர்த்தகதளம் தொடங்கியதையடுத்து, வர்த்தகத்தில் வெளிப்படைத்தன்மை, விவசாயிகளுக்கு நல்ல விலை, விரைவு ஏல முறை, விளைபொருட்களின் தரத்திற்கேற்ற விலை மற்றும் மின்னணு பணப்பரிவர்த்தனை மூலம் விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக பணம் செலுத்துதல் ஆகியவை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தேசிய மின்னணு வேளாண் சந்தைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் 63 சந்தைகளில் 2021–22ஆம் ஆண்டில் மின்னணு வர்த்தகம் மூலம் ரூ. 471.48 கோடி மதிப்பிலான 13.39 இலட்சம் தேங்காய் மற்றும் 23.98 இலட்சம் குவிண்டால் இதர விளைபொருட்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டு, 1.60 இலட்சம் விவசாயிகளுக்கு மின்னணு தேசிய வேளாண் சந்தை வலைதளத்தின் வழியாக ரூ.445.08 கோடி பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2021–2022ஆம் ஆண்டில் சந்தைகளுக்கு இடையிலான வர்த்தகமானது

மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டத்தின் மூலம் ரூ.14.13 கோடி மதிப்புடைய 5.85 இலட்சம் குவிண்டால் வேளாண் விளைபொருட்கள் 152 வர்த்தகர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2021–2022ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தின்கீழ் மின்னணு தேசிய வேளாண் சந்தைத் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ள கீழ்ப்பென்னாத்தூர், மயிலாடுதுறை, பண்ருட்டி, உடுமலைப்பேட்டை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய சந்தைகளிலிருந்து புதுச்சேரியுடன் ரூ.1.47 இலட்சம் மதிப்புடைய 59.38 குவிண்டால் வேளாண் விளைபொருட்களான உளுந்து, எள், நெல் மற்றும் கேழ்வரகு ஆகியவை வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

மின்னணு தேசிய வேளாண் சந்தையில் இணைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையினை நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கில் (SDG–Goal 2) பசியின்மை இலக்கின் கீழ் தேசிய அளவிலான குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் உள்ள 284 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் 63 விற்பனைக் கூடங்கள் மின்னணு தேசிய வேளாண்

சந்தையில் இணைக்கப்பட்டுள்ளது. இது 22 சதவீதமாக உள்ளது.

### 7.2. வேளாண் வணிக செயல்பாடுகள்

#### 7.2.1. உழவர் சந்தை

உழவர் சந்தை திட்டம் என்பது 1999ஆம் ஆண்டு முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட ஒரு புதுமையான திட்டமாகும், இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களான காய், கனிகளை இடைத்தரகர்கள் இல்லாமல் நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்வதன் மூலம் நல்ல விலையைப் பெற்றிடலாம். தற்போது, தமிழ்நாட்டில் 180 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன.

உழவர் சந்தையின் தினசரி விலை விவரங்களை துறை இணையதளத்திலும், (www.agrimark.tn.gov.in) "உழவன்" செயலியிலும் (Uzhavan App) தெரிந்துகொள்ளலாம். நாளொன்றுக்கு சராசரியாக, ரூ 5.5 கோடி மதிப்புள்ள 1,900 மெட்ரிக் டன் காய், கனிகள் 7,000 விவசாயிகளினால் மூன்று இலட்சம் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

2021-22 வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, 50 உழவர் சந்தைகளை ரூ. 12.50 கோடி செலவில் புனரமைக்கும் பணியும், 10 புதிய உழவர் சந்தைகளை ரூ. 4.53 கோடி மதிப்பில் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, 2022-23ஆம் ஆண்டில் மேலும் 50 உழவர் சந்தைகள் ரூ.15 கோடி செலவில் புதுப்பிக்கப்படும். உழவர் சந்தைகளில் கணினிகள், விலைக் காட்சிப் பலகைகள் போன்ற வசதிகளும் வழங்கப்படும்.

ஐம்பது உழவர் சந்தைகளில், உழவர் உற்பத்தியாளர் நிறுவன உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் மற்றும் காய்கனிகள் சந்தைப்படுத்துவதற்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும். வேளாண்மை, தோட்டக்கலை துறைகளுக்கு விதைகள், உயிர் உரங்கள், காய்கறி விதைகள், நாற்றுகள், பழச் செடிகளை விற்பனை செய்ய கடைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை உழவர்சந்தை விவசாயிகள் பயன்பெறும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்/பயிற்சிகள் நடத்தப்படும்.

உணவு தானியங்களை விற்பனை செய்ய மாவட்டத்திற்கு ஒரு உழவர் சந்தை வீதம் மாலை நேரத்தில் செயல்படும்.

### 7.2.2. விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டல் வாய்ப்புகளை உருவாக்க பொதுவான வசதி மையங்களை நிறுவுதல்

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி விற்பனை செய்திட விவசாயிகள் மத்தியில் பிரபலப்படுத்தியும் ஊக்குவித்தும் வருகின்றது. இது தொடர்பாக விவசாயிகளுக்கு ஆதரவாக பல்வேறு திட்டங்களின் கீழ் முதன்மை நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை பதப்படுத்தும் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

2022–23ஆம் ஆண்டில் சிறுதானிய இயக்கத்தின் கீழ் இத்தகைய மதிப்பு கூட்டுதலுக்கான பொது வசதிகள் அமைக்கப்படும். மேலும், காபி, மிளகினை மதிப்பு கூட்ட காபி கொட்டை உடைத்து தரம் பிரிக்கும் இயந்திரம், மிளகு தரம் பிரித்து பொடி செய்யும் இயந்திரம் ரூ.75 இலட்சம் மதிப்பில் நிறுவப்பட உள்ளது.

### 7.2.3 குளிர்பதன சேமிப்பு வசதிகள்

பண்ணை பசுமை காய்கனிகள் உபரியாக விளையும் காலங்களில் குளிர்பதன கிடங்குகளில் சேமித்து, தரம் குறையாமல் பாதுகாத்து, விற்பனை செய்ய ஏதுவாக தமிழ்நாட்டில் 17,527 மெ.டன் கொள்ளளவு கொண்ட 194 குளிர் பதன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை :7.1 – கொள்ளளவு அடிப்படையில் குளிர்பதனக் கிடங்குகள் விவரம்**

| கொள்ளளவு (மெ.டன்) | எண்ணிக்கை | மொத்த கொள்ளளவு (மெ.டன்) |
|---|---|---|
| 2,000 | 2 | 4,000 |
| 500–1,000 | 12 | 8,000 |
| 100–200 | 18 | 2,155 |
| 40–75 | 17 | 850 |
| 13– 25 | 94 | 2,266 |
| 2 – 10 | 51 | 256 |
| மொத்தம் | **194** | **17,527** |

குளிர்பதன கிடங்கு வசதியை பரவலாக்குவதற்காக குறு மற்றும் பெரிய அளவிலான

குளிர்பதனக் கிடங்கு வசதிகள் தமிழ்நாட்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ளன.

விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பண்ருட்டி மற்றும் ஒட்டன்சத்திரத்தில் முறையே 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவிலான இரண்டு குளிர்பதன கிடங்குகள் நிறுவப்பட்டு வருகிறது. இதன் மூலம் குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு 40,427 மெட்ரிக் டன்கள் ஆக உயரும்.

### 7.2.4 ஒருங்கிணைந்த விற்பனை வளாகம்

ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மற்றும் உழவர் சந்தைகள் விவசாய பொருட்களை விற்பனை செய்வதற்கான ஒருங்கிணைந்த தளமாக செயல்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு ஒரே இடத்தில் சேவைகளை உறுதி செய்வதற்காக ஒரு சந்தைக்குள் இடுபொருள் கடைகள், பண்ணை இயந்திரங்கள், வங்கி, ஆலோசனை சேவைகள் போன்ற ஒருங்கிணைந்த வசதிகளை வழங்க ஒரு முன்னுதாரண மாற்றம் அவசியம். இத்தகைய ஒருங்கிணைந்த சந்தைகள் மதுரை, நீலகிரி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் நிறுவப்பட்டு வருகின்றன.

### 7.2.5.விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்தல்

அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பினை குறைக்கவும், விவசாயிகளை பெரும் சந்தைகள், பதப்படுத்துவோர் மற்றும் நுகர்வோர்களுடன் ஒருங்கிணைக்கவும், உற்பத்தி உபரியினை மதிப்புக் கூட்டு பொருளாக மாற்றவும் தரமான பழங்கள், காய்கறிகளை நுகர்வோருக்கு தடையின்றி வழங்கி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் காய்கறிகள், பழங்கள் மற்றும் பிற அழுகும் பொருட்களுக்கான விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டமானது தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி (தென்காசியும் சேர்த்து) ஆகிய பத்து மாவட்டங்களில் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி கிடங்கு உட்கட்டமைப்பு நிதி உதவியுடன் இத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக சேலம், ஈரோடு,

திருவள்ளூர், காஞ்சிபுரம் (செங்கல்பட்டும் சேர்த்து), திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் கரூர் ஆகிய எட்டு மாவட்டங்களில் 20 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் அமைத்திட நபார்டு வங்கி ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மூலம் ரூ.102.47 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமான பணிகள் நடைப்பெற்று வருகின்றன.

### 7.2.6. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்

விளைபொருட்களை உற்பத்தி செய்து, அவ்விளைபொருட்களை ஒருங்கிணைத்து சந்தைப்படுத்துவதன் மூலம் நல்ல விலை கிடைப்பதற்கு உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPO) உறுதுணையாக செயல்படுகின்றன.

**தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் சுருக்கம்**

| வ. எண். | உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்கிய துறை | எண்கள் |
|---|---|---|
| 1 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 381 |
| 2 | நபார்டு | 259 |
| 3 | தன்னார்வ நிறுவனங்கள் | 163 |

| வ. எ ண். | உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் உருவாக்கிய துறை | எண்கள் |
|---|---|---|
| 4 | ஒன்றிய சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு | 36 |
| 5 | தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் (NCDC) | 24 |
| 6 | தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை கூட்டமைப்பு (NAFED) | 25 |
| 7 | தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டம் (TNRTP) | 15 |
| மொத்தம் | | 903 |

### 7.2.6.1. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு நிதியளிப்பதற்கான மாநில அரசு திட்டம்

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் நிலைத்து, செயல்பட மூலதன நிதியாக ரூ.266·70 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு NABKISAN நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. மேற்கண்ட தொகை மூன்று கூறுகளின் கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

i) இடைநிலை (Mezzanine) மூலதன உதவி
ii) வங்கியில் கடன் பெறுவதற்கு கடன் உத்தரவாதம் வழங்குதல் (Credit Guarantee)
iii) சலுகையுடன் கூடிய சுழல் நிதி (Revolving Fund)

### 7.2.6.2. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான இதர ஆதரவுகள்

i. ஐம்பது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ரூ.30 கோடி மதிப்பீட்டில் விதை சுத்திகரிப்பு மற்றும் சேமிப்பு கிடங்குகளை அமைத்து வருகின்றன.

ii. பத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு பருப்பு ஆலைகள் அமைக்க தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் மூலம் ரூ.1.54 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

iii. ஐந்து மாநகராட்சிகளில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்யும் தளமாக 50 சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

iv. முன்னூற்று பத்து உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறந்த வேளாண் நடைமுறைகள், நிறுவன நிர்வாகம், திட்டம் மற்றும் வணிக மேலாண்மை, கணக்கு பராமரிப்பு, ஏற்றுமதி சந்தை, போன்றவற்றில் திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் பட்டறிவுப் பயணம் மேற்கொள்வது ஆகியவை தமிழ்நாடு வேளாண்மை

பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்பட உள்ளது.

v. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலமாக சிறுதானியங்களை கொள்முதல் செய்து சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள கூட்டுறவு அங்காடிகளிலும், நியாய விலை கடைகளிலும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

vi. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் எண்ணிக்கையானது நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கு (SDG Goal 1) குறியீடாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில், 903 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 7.2.7. உணவு பதப்படுத்துதல்

### 7.2.7.1. தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் கொள்கை, 2018

மாநிலத்தில் உணவு பதப்படுத்துதலுக்கான பிரத்யேக கொள்கையை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

**கொள்கையின் தொலைநோக்கு பார்வை:**

i. தமிழ்நாட்டின் உற்பத்தி திறன், நீண்ட கால தொழில் கலாச்சாரம், தொழில்நுட்ப மனிதவளம், சாதகமான வேளாண்–கால நிலைகள் மற்றும் சிறந்த இணைப்பு வசதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டினை இந்தியாவின் முதன்மையான உணவு பதப்படுத்தும் மையமாக விளங்கச்செய்தல்.

ii. மாநிலத்தின் செறிவுமிக்க மற்றும் பலதரப்பட்ட உணவு உற்பத்தி கட்டமைப்புகளை பயன்படுத்தி உணவு பதப்படுத்தும் தொழிலில் முன்னேற்றம் அடைதல்.

**7.2.7.2. பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்**

அமைப்புசாரா உணவுப் பதப்படுத்தும் குறு நிறுவனங்களை அமைக்கவும் மேம்படுத்தவும் **"பாரத பிரதமர் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்"** ஒன்றிய அரசு, மாநில அரசின் நிதி பங்களிப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் நோக்கமானது தனிப்பட்ட குறு நிறுவனங்களின் முறைப்படுத்துதலை ஊக்குவிக்க போட்டி திறனை அதிகரிப்பதும், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு உற்பத்தியாளர்களின் விளைபொருட்களின் மதிப்பு சங்கிலியை மேம்படுத்துவதும் ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் ஐந்து ஆண்டு காலத்தில் 12,000 தனிநபர் நிறுவனங்கள் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது **'ஒரு மாவட்டம் ஒரு விளைபொருள்'** என்ற அணுகுமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **(இணைப்பு–II)**

2021–22 ஆம் ஆண்டில், தனிநபர் பிரிவின் கீழ், இதுவரை 206 கடன்கள் ஒப்பளிக்கப்பட்டு ரூ.7.50 கோடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. குழு விண்ணப்பப் பிரிவின் கீழ், ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு ரூ.5.25 இலட்சம் மானியம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2022-23ஆம் ஆண்டில், இத்திட்டத்தின் கீழ் 3,942 தனிநபர்களுக்கும், 29 குழு நிறுவனங்களும், விதை மூலதனக் கூறின் கீழ் 4,520 சுய உதவிக்குழு உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.2.8 தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம்

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ரூ.125 கோடி மதிப்பீட்டில் 66 உபவடி நீர்ப்பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்குதல், ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வணிக மேம்பாடு, வேளாண் தொழில் முனைவோரை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நவீனமயமாக்குதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கான மானியத் தொகை**

1. தொடக்க மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.10 இலட்சம்.
2. உற்பத்தி முதலீட்டு மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.20 இலட்சம்.
3. வணிக விரிவாக்கம் மானியம் ஒரு நிறுவனத்திற்கு ரூ.30 இலட்சம்.

இத்திட்டத்தின் கீழ் 2021-2022ஆம் ஆண்டில் ரூ.14.15 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

**திட்ட விவரம்**

**(ரூ.கோடியில்)**

| நிலை | மாவட்டங்கள் | உபவடிநீர் பகுதி | நிர்வாக ஒப்புதல் | உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் | பயனாளிகள் | நிதி ஒதுக்கீடு (2022-23) |
|---|---|---|---|---|---|---|
| I. | 20 | 18 | 51.72 | 26 | 25,451 | 12.30 |
| II. | 17 | 16 | 26.38 | 24 | 19,700 | 7.80 |
| III. | 09 | 09 | 19.42 | 13 | 7,844 | 12.52 |

### 7.2.9. அக்மார்க் தரம் பிரிப்பு

இந்தத் திட்டம் நுகர்வோருக்கு கலப்படமற்ற உணவுப் பொருட்களை வழங்குவதற்கான தன்னார்வ திட்டமாகும். நிர்ணயித்த தரத்தினை உறுதிப்படுத்திட, 30 மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகங்களும், ஒரு முதன்மை ஆய்வகமும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன.

"அக்மார்க்" என்பது ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களுக்கான தரச்சான்றாகும். வேளாண் விளைபொருட்கள் (தரம் பிரித்தலும், குறியிடுதலும்) சட்டம், 1937–ஐ (1986–ல் திருத்தியமைக்கப்பட்டது) அடிப்படையாகக் கொண்டு ஒன்றிய அரசின் விற்பனை மற்றும் ஆய்வு இயக்குநரகத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இதுவரை, இத்திட்டத்தில் 230 பொருட்களுக்கு தரநிலைக் குறியீடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

2021–22ஆம் நிதியாண்டில் 35.65 இலட்சம் குவிண்டால் உணவுப்பொருட்கள் தரம்பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தரம்பிரிப்பிற்கான ஆய்வுக் கட்டணமாக தமிழக அரசுக்கு

ரூ.92.34 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இத்திட்டம், 2022-23 ஆம் ஆண்டிலும் தொடரும்.

## 7.3 மனிதவள மேம்பாடு

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம் ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டு செயல்படும் இத்துறையின் மூலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல், சந்தை சார்ந்த தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் களப்பணியாளர்கள் மூலம் கொண்டு சேர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்துறை 1,343 துறைப் பணியாளர்கள், 1,674 விற்பனைக்குழுப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

2022-23ஆம் ஆண்டில் ஏற்றுமதி, மதிப்புக்கூட்டல், திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகியவற்றை மேற்கொள்ள ஏதுவாக துறை வலுப்படுத்தப்பட்டு, சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**அட்டவணை: 7.2– துறை பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை கூடுதல் இயக்குநர் | 1 |
| 2 | வேளாண்மை இணை இயக்குநர் | 2 |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (வேவ) | 37 |
| 4 | வேளாண்மை உதவி இயக்குநர் | 5 |
| 5 | வேளாண்மை அலுவலர் | 170 |
| 6 | துணை வேளாண்மை அலுவலர் | 47 |
| 7 | உதவி வேளாண்மை அலுவலர் | 627 |
| 8 | ஆட்சி அலுவலர் | 1 |
| 9 | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 10 | இதர பணியாளர்கள் | 452 |
| | மொத்தம் | **1,343** |

**அட்டவணை: 7.3– விற்பனைக்குழு பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | பணியிடம் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதுநிலை செயலாளர் / வேளாண்மை துணை இயக்குநர் | 2 |
| 2 | முதுநிலை செயலாளர் | 2 |
| 3 | செயலாளர் / வேளாண்மை உதவி இயக்குநர் | 11 |
| 4 | செயலாளர் | 11 |
| 5 | கண்காணிப்பாளர் | 202 |
| 6 | பொறியியல் மேற்பார்வையாளர் | 9 |
| 7 | மேற்பார்வையாளர் | 346 |
| 8 | இதர பணியாளர்கள் | 1,091 |
| | மொத்தம் | **1,674** |

## 7.4 தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 1987ன் படி வாரியமாக மீள திருத்தி அமைக்கப்பட்டது.

### 7.4.1 . வாரியத்தின் அமைப்பு

**தலைவர்:** அரசால் நியமனம் செய்யப்படுபவர். தலைவர் நியமிக்கப்படாத பட்சத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வேளாண்மை– உழவர் நலத்துறை அவர்கள் தலைவராக செயல்படுவார்.

**உறுப்பினர்கள்:**

i. அரசு சாரா உறுப்பினர்கள் (27 வேளாண் விற்பனை குழுக்களின் தலைவர்/ சிறப்பு அலுவலர்)

ii. இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை.

iii. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்.

iv. பொது மேலாளர், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு கழகம்.

v. ஆலோசகர், வேளாண்மை விற்பனை, ஒன்றிய அரசு.

vi. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்.

vii. தலைமை செயலக வேளாண்மை–உழவர் நலத்துறை சார்ந்த துணை செயலர்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் செயல்பட்டு வருகின்றது.

### 7.4.2. நிதி ஆதாரம்

விற்பனைக் குழுக்கள் வசூலிக்கும் உரிமக்கட்டணம் மற்றும் சந்தை கட்டண தொகையிலிருந்து 15 சதவீதத்தை தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்திற்குப் பங்குத் தொகையாக செலுத்துகின்றன.

### 7.4.3. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் செயல்பாடுகள்

1. சந்தை தொடர்பான ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள்.
2. சந்தை சார்ந்த உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், பராமரித்தல்.
3. விவசாயிகள், அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குதல்.
4. கருத்தரங்குகள், மாநாடு மற்றும் பொருட்காட்சிகள் நடத்துதல்.

5. விலை ஆதரவுத் திட்டத்திற்கு மாநில இணைப்பு முகமையாக செயல்படுதல்.
6. வேளாண் ஏற்றுமதி தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.

### 7.4.3.1 திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல்

சேலத்தில் மாநில பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் வேளாண்மை விற்பனை, வேளாண் வணிகத்துறை அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் பயிற்சி வழங்குதல் மற்றும் விவசாயிகளுக்கு மதிப்புக் கூட்டுதல், விளைபொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மின்னணு சந்தை தொடர்பான பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

2021-22ஆம் ஆண்டில் ரூ. 12.15 இலட்சம் மதிப்பில், 45 பயிற்சிகள் 1,522 தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டிலும் இப்பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

### 7.4.3.2. கட்டுமானப் பணிகள்/பராமரிப்புப் பணிகள்

தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் கட்டுப்பாட்டில் பொறியியல் பிரிவு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவிற்கு சென்னை,

மதுரை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உபகோட்ட அலுவலகங்கள் உள்ளன. பொறியியல் பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள், உழவர் சந்தைகள், உணவுப்பூங்காக்கள், கிடங்குகள், குளிர்பதனக்கிடங்குகள் போன்ற கட்டுமானங்களை உருவாக்கி அவற்றை பராமரித்து வருகின்றது.

2021-22ஆம் ஆண்டில் ரூ. 275 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. 2022-23ஆம் ஆண்டிலும் கட்டுமானப் பணிகள், பராமரிப்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்,

### 7.4.3.3 விலை ஆதரவுத் திட்டம்

பயிர் அறுவடைக் காலங்களில் விலை வீழ்ச்சி ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்படுவதை தடுத்திட, விலை ஆதரவுத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் மாநில செயலாக்க முகமையாக செயல்பட்டு வருகின்றது. "ஒன்றிய கொள்முதல் முகமையாக" ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை இணையத்தின் (NAFED) சார்பில்

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், விவசாயிகளிடமிருந்து நேரடியாக விளைபொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட தரத்தில் கொள்முதல் செய்யப்படுகின்றது. ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலை விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு மின்னணு முறையில் அனுப்பி வைக்கப்படுகின்றது.

திட்ட துவக்க காலத்திலிருந்து இதுவரை ரூ.116.15 கோடி மதிப்பிலான 17,072 மெட்ரிக் டன் பயறு வகைகள் மற்றும் 387 மெட்ரிக் டன் கொப்பரை ஆகியவை 15,488 விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில் 50,000 மெட்ரிக் டன் அரவைக் கொப்பரையும் 1,000 மெட்ரிக் டன் பந்து கொப்பரையும் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டு இதுவரை ரூ.12.52 கோடி மதிப்பிலான 1182 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், 10,992 மெட்ரிக் டன் துவரை, 14,282 மெட்ரிக் டன் பச்சைப்பயறு மற்றும் 57,350 மெட்ரிக் டன் உளுந்து ஆகியவற்றையும் கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

வெளிச்சந்தை விலை குறைவிலிருந்து விவசாயிகளை பாதுகாத்திட 2022–23 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

அரசின் இச்செயல்பாட்டினால், பயறு வகைகள், கொப்பரை ஆகியவற்றின் வெளிச்சந்தை விலையினை நிலைப்படுத்துவதுடன், விலை வீழ்ச்சியிலிருந்து விவசாயிகளை பாதுகாத்திடவும் வழிவகை ஏற்பட்டுள்ளது.

### 7.4.3.4. வேளாண் ஏற்றுமதி வளர்ச்சிப் பணிகள்

தமிழக அரசு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் விளைபொருட்களின் அளவினை அதிகரிக்கும் நோக்கத்தோடு பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. விவசாயிகளுக்கு ஏற்றுமதி குறித்து உதவுவதற்கு சென்னையில் வேளாண்மை ஏற்றுமதி சேவை மையம் உருவாக்கப்பட உள்ளது.

ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் வாய்ந்த வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை ஊக்குவிப்பதற்கு வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு

ஆணையம் (APEDA) மற்றும் தேசிய பயிர் பாதுகாப்பு நிறுவனம் (NPPO) போன்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்திட்டம் வகுக்கப்படும். முதல் முறையாக ஏற்றுமதி செய்பவர்களுக்கு பரிசோதனை ஆய்வகங்களுக்கான தேசிய அங்கீகார வாரியத்தின் (NABL) அங்கீகாரம் பெற்ற ஆய்வகங்களில், ஏற்றுமதிக்காக மேற்கொள்ளப்படும் ஆய்வக சோதனைகளுக்கு 50% நிதியுதவி (அதிகபட்சமாக ரூ.10,000/-) வழங்கப்படவுள்ளது. விவசாய ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயி கண்டறியப்பட்டு அவருக்கு இரண்டு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படவுள்ளது.

புவிசார் குறியீடு பெறப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துவதால் அதன் தேவை மற்றும் ஏற்றுமதி அளவை அதிகரிக்கலாம். இதனை கருத்தில் கொண்டு மாநிலத்தின் தனித்துவமான பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறும் நடவடிக்கைகளை அரசு துவக்கியுள்ளது. தற்போது சோழவந்தான் வெற்றிலை, பண்ருட்டி பலா, முந்திரி போன்றவற்றிற்கான புவிசார் குறியீடு பெற பதிவு செய்யும் பணி நிறைவடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும், முருங்கை தற்போது அதிக ஏற்றுமதி திறனைக் கொண்டுள்ளது. முருங்கை மற்றும் அதன் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதி திறனை கருத்தில் கொண்டு தேனி, திண்டுக்கல், கரூர், தூத்துக்குடி, அரியலூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய ஏழு மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியை முருங்கை ஏற்றுமதி மண்டலமாக அரசு அறிவித்துள்ளது. முருங்கை ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரிக்க மதுரையில் சிறப்பு ஏற்றுமதி வசதி மையம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.4.3.5 உணவுப் பூங்காக்கள் அமைத்தல்

வேளாண் விளை பொருட்களில் மதிப்பு கூட்டல் அதிக வருமானத்திற்கு வழிவகுக்கிறது, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் கொள்கையின்படி தமிழ்நாட்டில் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

i. **திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் பெரிய அளவிலான உணவுப் பூங்கா அமைத்தல்** :

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மைய வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில்,

**"பெரிய அளவிலான உணவுப் பூங்கா"** ரூ.77.02 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியம் இத்திட்டத்தின் திட்ட செயலாக்க முகமையாக செயல்பட்டு வருகிறது.

ii. **சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள் / வேளாண் பதப்படுத்தும் தொகுப்புகள் அமைத்தல் :**

சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள் பத்து ஏக்கர் பரப்பளவில் **கடலூர், தேனி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, சேலம் மற்றும் மதுரை** ஆகிய ஏழு இடங்களில் ரூ.191.88 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன. விற்பனைக்குழு செயலாளர்கள் இத்திட்டத்திற்கு திட்ட செயலாக்க முகமைகளாக செயல்பட்டு வருகின்றனர்.

**திருவாரூர், தருமபுரி, அரியலூர், கரூர், பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் தென்காசி** ஆகிய ஏழு மாவட்டங்களில் சிறிய அளவிலான உணவுப் பூங்காக்கள் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

# இணைப்பு I

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்

(அலகு எண்களில்)

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 4 | -- | 7 | 4000 | -- | -- | 6 | -- | 7 | -- |
| 2 | செங்கல்பட்டு | 10 | -- | 2 | 2600 | 1 | 2 | 1 | -- | 2 | -- |
| 3 | திருவள்ளூர் | 6 | -- | 10 | 12800 | -- | -- | 5 | -- | 7 | -- |
| 4 | கடலூர் | 5 | -- | 14 | 19600 | 4 | 77 | 29 | 10 | 15 | -- |
| 5 | விழுப்புரம் | 3 | -- | 17 | 41100 | 2 | 40 | 38 | -- | 11 | -- |
| 6 | கள்ளக் குறிச்சி | 3 | -- | 16 | 23000 | 2 | 50 | 29 | -- | 7 | -- |
| 7 | வேலூர் | 4 | -- | 8 | 5000 | 2 | 27 | 4 | -- | 3 | -- |
| 8 | இராணிப் பேட்டை | 2 | -- | 10 | 8500 | -- | -- | 10 | -- | 6 | -- |
| 9 | திருப்பத்தூர் | 3 | -- | 8 | 7250 | 4 | 77 | 1 | -- | 2 | -- |
| 10 | திருவண்ணா மலை | 8 | -- | 31 | 34100 | 7 | 175 | 47 | 10 | 12 | -- |
| 11 | தருமபுரி | 5 | 5 | 8 | 7600 | 7 | 1310 | 6 | 10 | 10 | 1 |
| 12 | கிருஷ்ணகிரி | 5 | 10 | 10 | 9600 | 21 | 1547 | 3 | -- | 10 | 1 |
| 13 | சேலம் | 11 | -- | 17 | 15000 | 12 | 260 | 17 | -- | 16 | -- |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | நாமக்கல் | 6 | -- | 8 | 7600 | 6 | 84 | 4 | -- | 5 | 1 |
| 15 | ஈரோடு | 5 | -- | 40 | 53602 | 7 | 1225 | 36 | 10 | 34 | 3 |
| 16 | திருப்பூர் | 6 | -- | 59 | 81650 | 6 | 152 | 33 | -- | 45 | 2 |
| 17 | கோயம்புத்தூர் | 8 | 7 | 31 | 26405 | 20 | 1694 | 19 | 10 | 30 | 3 |
| 18 | நீலகிரி | 4 | 9 | -- | -- | 9 | 592 | 1 | -- | -- | 1 |
| 19 | பெரம்பலூர் | 2 | -- | 2 | 2500 | 2 | 75 | 1 | -- | 1 | 1 |
| 20 | அரியலூர் | 2 | -- | 5 | 5500 | 1 | 25 | 14 | -- | 7 | -- |
| 21 | திருச்சிராப் பள்ளி | 7 | 12 | 14 | 13000 | 12 | 3282 | 15 | -- | 20 | 4 |
| 22 | கரூர் | 5 | -- | 2 | 1000 | 2 | 27 | 1 | -- | -- | -- |
| 23 | தஞ்சாவூர் | 5 | -- | 28 | 41150 | 3 | 127 | 22 | -- | 5 | 2 |
| 24 | திருவாரூர் | 7 | -- | 17 | 14600 | 1 | 2 | 9 | -- | 8 | -- |
| 25 | நாகப் பட்டினம் | 1 | -- | 13 | 11320 | -- | -- | 4 | -- | -- | -- |
| 26 | மயிலாடு துறை | 2 | -- | 4 | 3500 | -- | -- | 7 | -- | 5 | -- |
| 27 | புதுக் கோட்டை | 6 | -- | 6 | 4350 | 2 | 125 | 3 | -- | 4 | 1 |
| 28 | மதுரை | 7 | -- | 13 | 15900 | 3 | 29 | 4 | -- | 7 | 1 |
| 29 | திண்டுக்கல் | 5 | 5 | 14 | 19200 | 9 | 1115 | 6 | -- | 8 | 1 |
| 30 | தேனி | 7 | 5 | 12 | 13500 | 12 | 722 | 8 | -- | 7 | 3 |

| வ. எண் | மாவட்டம் | உழவர் சந்தை | முதன்மை பதப்படுத்தும் நிலையம் | கிடங்குகள் | கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | குளிர்பதன கிடங்குகள் | குளிர்பதன கிடங்குகளின் மொத்த கொள்ளளவு (மெ.டன்) | பரிவர்த்தனை கூடம் | வணிகர் கடைகள் | உலர்களம் | சிறப்பு வணிக வளாகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31 | விருதுநகர் | 8 | -- | 15 | 17200 | 3 | 150 | 5 | -- | 5 | -- |
| 32 | சிவகங்கை | 5 | -- | 17 | 16450 | 1 | 25 | 3 | -- | 7 | -- |
| 33 | இராமநாதபுரம் | 3 | 3 | 9 | 13050 | 6 | 2155 | 3 | 25 | 9 | 1 |
| 34 | திருநெல் வேலி | 4 | 2 | 8 | 10800 | 5 | 72 | 4 | -- | 5 | 2 |
| 35 | தென்காசி | 2 | 3 | 6 | 12000 | 9 | 1980 | 6 | 10 | 5 | -- |
| 36 | தூத்துக்குடி | 2 | 3 | 18 | 20100 | 11 | 277 | 7 | -- | 5 | 1 |
| 37 | கன்னியா குமரி | 2 | -- | 11 | 10500 | 2 | 27 | 3 | -- | 4 | 2 |
| | **மொத்தம்** | **180** | **64** | **510** | **605027** | **194** | **17527** | **414** | **85** | **334** | **31** |

# இணைப்பு – II
## மாவட்டவாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட விளைபொருட்கள் விவரம்

| வ. எண் | மாவட்டம் | விளைபொருட்கள் |
|---|---|---|
| 1. | அரியலூர் | முந்திரி சார்ந்த பொருட்கள் |
| 2. | செங்கல்பட்டு | மீன் வளப்பொருட்கள் |
| 3. | சென்னை | அடுமனை பொருட்கள் |
| 4. | கோயம்புத்தூர் | தென்னை சார்ந்த பொருட்கள் |
| 5. | கடலூர் | முந்திரி சார்ந்த பொருட்கள் |
| 6. | தர்மபுரி | சிறு தானிய பொருட்கள் (மக்காச் சோளம் தவிர) |
| 7. | திண்டுக்கல் | கால்நடை தீவனம் |
| 8. | ஈரோடு | மஞ்சள் சார்ந்த பொருட்கள் |
| 9. | கள்ளக்குறிச்சி | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 10. | காஞ்சிபுரம் | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 11. | கன்னியாகுமரி | மீன் வளப்பொருட்கள் |
| 12. | கரூர் | முருங்கை சார்ந்த பொருட்கள் |
| 13. | கிருஷ்ணகிரி | மா சார்ந்த பொருட்கள் |
| 14. | மதுரை | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 15. | நாகப்பட்டினம் | மீன் வளப்பொருட்கள் |
| 16. | நாமக்கல் | கோழி தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள் |
| 17. | பெரம்பலூர் | கால்நடை தீவனம் |
| 18. | புதுக்கோட்டை | நிலக்கடலை சார்ந்த பொருட்கள் |

| வ. எண் | மாவட்டம் | விளைபொருட்கள் |
|---|---|---|
| 19. | இராமநாதபுரம் | மீன் வளப்பொருட்கள் |
| 20. | இராணிப்பேட்டை | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 21. | சேலம் | மரவள்ளிக்கிழங்கு சார்ந்த பொருட்கள் |
| 22. | சிவகங்கை | தென்னை சார்ந்த பொருட்கள் |
| 23. | தென்காசி | எலுமிச்சை சார்ந்த பொருட்கள் |
| 24. | தஞ்சாவூர் | தென்னை சார்ந்த பொருட்கள் |
| 25. | நீலகிரி | காய்கறி சார்ந்த பொருட்கள் |
| 26. | தேனி | வாழை சார்ந்த பொருட்கள் |
| 27. | திருவள்ளூர் | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 28. | தூத்துக்குடி | பனை பொருட்கள் |
| 29. | திருநெல்வேலி | வாழை சார்ந்த பொருட்கள் |
| 30. | திருப்பத்தூர் | நிலக்கடலை சார்ந்த பொருட்கள் |
| 31. | திருப்பூர் | கோழி தீவனம் மற்றும் அது சார்ந்த பொருட்கள் |
| 32. | திருவண்ணாமலை | நிலக்கடலை சார்ந்த பொருட்கள் |
| 33. | திருவாரூர் | பருப்பு சார்ந்த பொருட்கள் |
| 34. | திருச்சி | வாழை சார்ந்த பொருட்கள் |
| 35. | வேலூர் | பால் பொருட்கள் |
| 36. | விழுப்புரம் | சமையல் எண்ணெய் (நிலக்கடலை) |
| 37. | விருதுநகர் | சிறு தானிய பொருட்கள் (மக்காச் சோளம் தவிர) |


DISTRICT
PRODUCT

## 8. தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை

**8.1.**தரிசு நிலங்களில் உள்ள நீர்வடிப்பகுதிகளை பங்கேற்பு அணுகுமுறையில் மேம்படுத்தும் நோக்கத்தோடு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை 2002ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1975இன் கீழ் நிறுவப்பட்டது. பின்னர், 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் மாநில அளவிலான இணைப்பு முகமை (SLNA) அமைக்கப்பட்டு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்களான வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் (DPAP), ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டம் (IWDP), தேசிய மானாவாரி நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் (NWDPRA) மற்றும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் (IWMP) ஆகியவை இதன் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுத்தப்பட்டன.

தற்போது, கீழ்க்கண்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்கள் இம்முகமையின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

1. நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2.0 (WDC – PMKSY 2.0)

2. நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி (WDF)

3. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்புத் திட்டம் (NAFCC).

மேலும், மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கான இணைப்பு முகமையாக (Nodal Agency) தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அறிவிக்கப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் திட்ட செயலாக்க துறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்துகிறது.

1. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் – (RKVY/ NADP) – RAFTAAR

2. நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கம் (NMSA)

3. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் (PMKSY)
   i. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – துளி நீரில் அதிக பயிர் (PMKSY – PDMC)
   ii. பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – ஒவ்வொரு பண்ணைக்கும் நீர் (PMKSY – HKKP)
   iii. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டம் (AIBP)

4. வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி (AIF)

## 8.2. நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2.0 (WDC – PMKSY 2.0)

நீர்வடிப்பகுதி மேம்பாடு – பிரதம மந்திரியின் விவசாய பாசனத் திட்டம் – 2.0 (WDC – PMKSY 2.0) என்பது மானாவாரி மற்றும் வளங்குன்றிய நிலங்களை மேம்படுத்துவதற்கான திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :

i. **பொருளாதாரம் (Economy)** – இயற்கை வளங்களை சமச்சீரான, ஒருங்கிணைந்த, நிலையான, திறன்மிகு முறையில் பயன்படுத்துவதன் மூலம் பல்வேறு பயிர்களின்

உற்பத்தித்திறனை அதிகரிப்பதுடன் நீர்வடிப்பகுதிகளிலுள்ள கிராம சமுதாயத்தின் வருமானத்தை மேம்படுத்துதல்.

ii. **சூழலியல் (Ecology) –** சமூக அமைப்புகளை உருவாக்கி எளிய, சாத்தியமான (affordable) தொழில்நுட்பங்களையும் நடைமுறைகளையும் ஊக்குவிப்பதன் மூலம் இயற்கை வளங்களை (சூழல் சமநிலையை மீட்டெடுக்க) பயன்படுத்துதல், பாதுகாத்தல், மேம்படுத்துதல்.

iii. **சமபங்கு (Equity) –** நிலம், நீர் மற்றும் வளங்களை ஏழை, நிலமற்றோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் பெண்களை சமமாக அணுகுவதை உறுதிபடுத்ததுவதோடு, பல்வேறு சமுதாய நிறுவனங்களில் அவர்களை ஈடுபடுத்தி சமூக மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துதல்.

இத்திட்டமானது, பெரம்பலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், தருமபுரி மற்றும் விருதுநகர் ஆகிய ஏழு மாவட்டங்களில் 275 நீர்வடிப்பகுதிகளில் 27 திட்டங்களை ரூ.286.73 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22 முதல் 2025-26 வரையிலான ஐந்து ஆண்டு

காலத்தில் 1.3033 இலட்சம் எக்டர் பரப்பில் செயல்படுத்த ஒன்றிய அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 8.1 மாவட்ட வாரியாக ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்**

| வ. எண் | மாவட்டம் | திட்டங்களின் எண்ணிக்கை | நீர்வடிப் பகுதிகளின் எண்ணிக்கை | திட்ட பரப்பு (எக்டரில்) | திட்ட மதிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|---|
| 1 | பெரம்பலூர் | 3 | 28 | 11,855 | 26.08 |
| 2 | தூத்துக்குடி | 7 | 66 | 35,430 | 77.95 |
| 3 | கிருஷ்ணகிரி | 3 | 52 | 16,203 | 35.65 |
| 4 | இராமநாதபுரம் | 3 | 21 | 15,000 | 33.00 |
| 5 | திண்டுக்கல் | 5 | 33 | 21,067 | 46.35 |
| 6 | தர்மபுரி | 3 | 31 | 15,775 | 34.71 |
| 7 | விருதுநகர் | 3 | 44 | 15,000 | 33.00 |
| | **மொத்தம்** | **27** | **275** | **1,30,330** | **286.74** |

### 8.2.1 திட்ட செயல்பாடுகள்

இத்திட்டம் மூன்று கட்டங்களாக ஐந்து வருடங்களில் செயல்படுத்தப்படும்.

i. **கட்டம்–I:** ஆரம்ப கட்டம் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரை திட்டமிடுதல், திறன் மேம்பாட்டு பணிகள், நுழைவு கட்ட பணிகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல் ஆகியன மொத்த நிதி ஒதுக்கீட்டில் ஆறு சதவீதம் செயல்படுத்தப்படும்.

ii. **கட்டம்–II:** செயலாக்க கட்டம் – இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை மொத்த திட்ட ஒதுக்கீட்டில் 79%. இயற்கைவள மேம்பாட்டு பணிகள், பண்ணை உற்பத்தி அமைப்பு பணிகள், நிலமற்றவர்களுக்கான வாழ்வாதார பணிகள், குறு நிறுவனங்கள் மற்றும் வணிக மேம்பாடு பணிகள் செயல்படுத்தப்படும்.

இயற்கைவள மேம்பாட்டு பணிகளின் கீழ், பண்ணைக் குட்டைகள், கசிவு நீர்க்குட்டைகள், சிறு, நடுத்தர மற்றும் பெரிய தடுப்பணைகள், கிராம குட்டைகள், ஊருணிகள் மற்றும் நீர்வரத்துக் கால்வாய்களை தூர்வாருதல், கேபியான் அமைப்புகள், நீர் செறிவூட்டம் அமைப்புகள்,

கிணறுகளை சீரமைத்தல் மற்றும் அமிழ்வு நீர்குட்டைகள் அமைக்கப்படும்.

பண்ணை உற்பத்தி அமைப்பு பணிகளின் கீழ், தோட்டக்கலைப் பயிர்கள், வேளாண் காடுகள், மலர் பயிர்கள் மற்றும் தீவனப் புல் வளர்த்தல், பயிர் செயல் விளக்கங்கள், மண் புழு உரம் தயாரித்தல், விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், தார்ப்பாலின் மற்றும் புல்வெட்டும் கருவி விநியோகம், பண்ணை குட்டைகளில் மீன் வளர்த்தல், வெள்ளாடு/ செம்மறியாடு வழங்குதல், தேனீ வளர்ப்புக் கூடுகள் விநியோகம் மற்றும் கோழி வளர்த்தல் ஆகிய செயல்பாடுகள் நீர்வடிபகுதி கிராமங்களின் சமுதாயத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த செயல்படுத்தப்படும்.

நிலமற்றவர்களுக்கான வாழ்வாதார பணிகளின் கீழ், ஆயத்த ஆடை தயாரித்தல், தையல் இயந்திரம், கறவைமாடு வழங்குதல், வீடுகளில் கோழி வளர்த்தல், உணவுப்பொருள் தயார் செய்தல் மற்றும் வெதுப்பகம், பெட்டிக்கடை, கரி தயாரித்தல், உணவு மற்றும் நிகழ்ச்சி மேலாண்மை, கைவினை பொருள்கள் தயாரித்தல், ஆடு வளர்த்தல், வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு வழங்குதல், தையல் இயந்திரம், சலவைப்

பெட்டி, தேனீ கூடு விநியோகம், இட்லி/ தோசை மாவு அரைக்கும் இயந்திரம் வழங்குதல் மற்றும் சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல் மூலம் நீர்வடிப்பகுதிகளில் உள்ள கிராம சமுதாயத்தில் சமூக மற்றும் பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பணிகள் செயல்படுத்தப்படும்.

iii. **கட்டம்–III:** ஒருங்கிணைப்பு மற்றும் திரும்பப்பெறுதல் கட்டம் – கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பணிகள் – ஆறு மாதம் முதல் ஒரு வருட காலத்தில் திட்ட நிதி ஒதுக்கீட்டில் ஐந்து சதவீதம்.

2021–22ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் ரூ.71.68 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒன்றிய அரசு விடுவிக்கப்பட்ட தொகையின் அடிப்படையில் 2021–22 ஆம் ஆண்டிற்கு ரூ.17.92 கோடி ஒப்புதல் வழங்கி அரசாணை வழங்கப்பட்டது. விரிவான திட்ட அறிக்கைகள் தயாரித்தல், நுழைவு கட்டப்பணிகள் மேற்கொள்ளுதல், திறன் மேம்பாட்டு பணிகள், நிலமற்றவர்களுக்கான வாழ்வாதார பணிகள், இயற்கைவள மேம்பாட்டு பணிகள், பண்ணை உற்பத்தி அமைப்பு பணிகள் மற்றும் குறு நிறுவனங்கள் மற்றும் வணிக மேம்பாடு நிர்வாக பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம்

2022–23ஆம் ஆண்டு ரூ.125.44 கோடி நிதி ஒதுக்கிட்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 8.2.2 திட்டத்தின் பலன்கள்

i. பயிர்கள், கால்நடைகள், பிற விவசாய சார்ந்த இனங்களில் சராசரி உற்பத்தித்திறனை அதிகரித்தல்.
ii. அனைத்து விவசாய விளைபொருட்களின் ஒட்டுமொத்த உற்பத்தியினை அதிகரித்தல்.
iii. பன்முகப்படுத்தப்பட்ட உற்பத்தி முறை மூலம் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தும் நிலைகளில் உள்ள அபாயம், நிச்சயமற்ற தன்மைகளைக் குறைத்தல்.
iv. விவசாயிகளின் சராசரி வருமானத்தை அதிகரித்தல்.
v. விவசாயிகள் மத்தியில் நீடித்த நிலையான உற்பத்தி தொழில்நுட்பங்கள் மற்றும் பண்ணை மேலாண்மை நடைமுறைகளை பிரபலப்படுத்துதல்.

### 8.3.நபார்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டம்

இத்திட்டம் 2004ஆம் ஆண்டு முதல் அரசு சாரா நிறுவனங்களின் (NGO) மூலம் செயல்படுத்தப் படுகின்றது. இந்நீர்வடிப்பகுதி திட்டங்கள் மாநில

அளவிலான வழிகாட்டுதல் குழுவினால் (State Level Steering Committee) அனுமதியளிக்கப்பட்டு, திறன் மேம்பாட்டு கட்டத்திற்கு (Capacity Building Phase) பின் முழு செயலாக்க கட்டத்தை (Full Implementation Phase) செயல்படுத்திட தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைக்கு ஒப்படைக்கப்படுகின்றன. இத்திட்டமானது மாநில அரசு (50% கடன்) மற்றும் நபார்டு வங்கி (50% மானியம்) நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

### 8.3.1. தற்போது செயல்படுத்தப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு நிதி திட்டங்கள்

தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையால் எட்டு திட்டங்கள் முறையே, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒடுக்கூர், மாம்பட்டி, திருவள்ளூர் மாவட்டத்தில் கொப்பூர், திருச்சி மாவட்டத்தில் அய்யம்பாளையம், கடலூர் மாவட்டத்தில் காரைக்காடு, மதுரை மாவட்டத்தில் கேசம்பட்டி, திருவண்ணாமலை மாவட்டத்தில் சேத்துப்பட்டு மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் இடையாமேலூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் முழு செயலாக்க கட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டங்களுக்கான 50% திட்ட ஒதுக்கீடான ரூ.3.47 கோடியில் அரசு சாரா நிறுவனங்களுக்கு

ரூ.3.11 கோடி விடுவிக்கப்பட்டு இதுவரை ரூ.2.97 கோடியில் செயல்பரப்பு பணிகள், வடிகால் அமைப்பு பணிகள், நிலமற்ற மகளிருக்கு வாழ்வாதார உதவிகள், பயிற்சி ஆகிய இனங்களில் செலவினம் மேற்க்கொள்ளப்பட்டது. இத்திட்டங்கள் 2022–23ஆம் ஆண்டும் தொடர்ந்து ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும்.

### 8.4. பருவநிலை மாற்றத்திற்கான தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி நீர்வடிப்பகுதிகளில் பருவநிலை பாதுகாப்பு திட்டம்

இத்திட்டம் மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் நிதி (Grants–in–aid) உதவியுடன், நபார்டு வங்கியை தேசிய செயலாக்க நிறுவனமாகவும் (National Implementing Entity), தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையை செயலாக்க நிறுவனமாகவும் (Executive Entity) கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 15,990 எக்டர் பரப்பளவில் ரூ.23.80 கோடி ஒதுக்கீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு

வருகிறது. திட்ட செயலாக்க காலம் 2019−20 முதல் 2022−23 வரை ஆகும்.

### 8.4.1 திட்டத்தின் நோக்கம்

1. மண், நீர் பாதுகாப்பு மேலாண்மை மூலம் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை தகவமைத்தல்.
2. பல்வகைப் பயிர்களை ஊக்குவித்தல், மாற்று வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதன் மூலம் நீடித்த நிலையான வாழ்வாதாரங்களை உறுதி செய்தல்.
3. காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப சமுதாயத்தின் திறனை உருவாக்குதல்.

### 8.4.2. திட்டத்தின் இனங்கள்

கிராம மக்களுடன் இணக்கமான உறவை ஏற்படுத்துவதற்காக, நீர்வடிப்பகுதியின் மிக முக்கிய தேவையான நீர் சேமிப்பு தொட்டிகள் நுழைவுகட்டப்பணியாக அமைக்கப்பட்டுள்ளன. திட்ட செயலாக்கத்தின் தொடர்ச்சியாக, நீர்வள மண்வள மேலாண்மை செயல்பாடுகளான தடுப்பணைகள் அமைத்தல், பண்ணைக்குட்டைகள் அமைத்தல், நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஏற்படுத்துதல்

ஆகியனவும், வாழ்வாதாரத்திற்கு உழவும் வகையில், சிறுகுறு தொழில் செயல்பாடுகளான மண்புழு உரம் தயாரித்தல், வீடுகளில் கோழி வளர்ப்பு ஆகியனவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. பருவநிலை பாதுகாப்பு செயல்பாடுகளான மாற்றுப் பயிர்கள், பருவகாலமாற்ற நிலையை தாங்கக்கூடிய பயிர் ரகங்கள், பொது மற்றும் தனியார் நிலங்களில் காடு வளர்த்தல், சூரிய ஒளியால் இயங்கும் நீர் இறைப்பான், உயிரியல் முறையில் மக்கும் உரம் தயாரிப்பு, உயிரி எரிபொருள் அமைப்புகள், வானிலை கண்காணிப்பு நிலையங்கள் ஆகியன வழங்கப்படுகின்றன.

2021–2022ஆம் ஆண்டு வரை இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் மூலம் ரூ.11.52 கோடி விடுவிக்கப்பட்டு, இதுவரை ரூ.7.63 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022–23ஆம் ஆண்டில், ரூ.12.28 கோடி நிதி ஒதிக்கீட்டில் பருவநிலை பாதுகாப்பு திட்ட பணிகள் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

## 8. 5. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

**இலக்கு : 6** பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி

**குறிக்கோள் : 6.6** மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்நிலைகள் மற்றும் ஏரிகள் உள்ளிட்ட நீர் சுற்றுச்சூழல் அமைப்புகளை பாதுகாத்து, மீட்டெடுத்தல்.

**மாநில குறிகாட்டி : 6.6.4** வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் உருவாக்கப்பட்ட பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள், கசிவுநீர் குட்டைகள் மற்றும் புதுப்பிக்கப்பட்ட தற்போதுள்ள கட்டமைப்புகளின் எண்ணிக்கை.

2022–23 ம் ஆண்டு 3,845 மழைநீர் சேகரிப்பு கட்டுமானங்கள் மற்றும் 2,54,170 மீட்டர் நீர்வரத்து கால்வாய்களை தூர்வாரும் பணிகள் ஏழு மாவட்டங்களில் பிரதம மந்திரியின் விவசாய நீர்பாசன திட்டம் 2.0 திட்டத்தின் கீழ் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பருவ நிலை மாற்றத்திற்கான, தேசிய தகவமைப்பு நிதியின் கீழ் சேலம் மற்றும் விருதுநகர் மாவட்ட மானாவாரி

நீர்வடிப்பகுதிகளில் 935 மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் உருவாக்கப்படவுள்ளது.

### 8.6. வேளாண்மை உட்கட்டமைப்பு நிதி

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ள வேளாண்மை உட்கட்டமைப்புக்கான நிதியின் கீழ், அறுவடைப் பின்செய் மேலாண்மைக்கான நிலைத்த கட்டமைப்புகளுக்கும், சமுதாய வேளாண் கட்டமைப்புகளுக்கும் தேவைப்படும் முதலீடுகளுக்கான நிதி உதவி, மத்திய காலக் கடனாகவோ நீண்ட கால கடனாகவோ வழங்கப்படும்.

அறுவடைக்குப் பிந்தைய வேளாண் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் விளைப்பொருட்கள் வீணாவதைக்குறைத்து, மதிப்பு கூட்டி விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்யலாம்.

இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக இரண்டு கோடி ரூபாய் வரையிலான கடனுக்கு, ஏழு ஆண்டு காலத்திற்கு ஆண்டிற்கு மூன்று சதவீதம் வட்டியில் சலுகை (Interest Subvention) வழங்கப்படுகின்றது. இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடனாக இருந்தால், இரண்டு கோடி ரூபாய் வரையிலான தொகைக்கு மட்டும் மூன்று சதவீதம் வட்டிச் சலுகை

கட்டுப்படுத்தப்பட்டு வழங்கப்படுகிறது. மேலும் இரண்டு கோடி ரூபாய் வரை உள்ள கடன்களுக்கு கடன் உத்தரவாதமும் வழங்கப்படுகிறது.

இத்தகைய வேளாண்மை உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்குத் தேவைப்படும் கடன் தொகையை ஆண்டுக்கு ஒன்பது சதவீத வட்டி வீதத்தில் மூன்று சதவீத வட்டிக் குறைப்புடன் வழங்கும் வகையில், பட்டியலிடப்பட்ட பொதுத்துறை, தனியர் வணிக வங்கிகள், சிறு நிதி நிறுவனங்கள், மண்டல கிராம வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்கள், ஒன்றிய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் (PACCS), உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), சுய உதவிக் குழுக்கள் (SHGs), விவசாயிகள், கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் (JLGs), பல்வகை கூட்டுறவு சங்கங்கள், வேளாண் தொழில்முனைவோர், புதியதாக தொழில் துவங்க முன்வரும் நிறுவனங்கள், கடன் வசதி பெற இயலும்.

இத்திட்டத்தின் கீழ், 2020–2021 முதல் 2032–33 வரையான திட்டக் காலத்தில் ரூ.5,990 கோடி கடன் வசதியுடன் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் கீழ் 2021–22–ஆம் ஆண்டில், ரூ.33.62 கோடி மதிப்பிலான 290 திட்டங்கள், நபார்டு வங்கியின் மூலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கும், ரூ.59.71 கோடி மதிப்பிலான 95 திட்டங்கள் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் மூலம் தனிநபர் பயனாளிகளுக்கும் அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

2022–23 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.1660 கோடி நிதியில் வேளாண் உட்கட்டமைப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2022–2023–இல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

## 2022 –2023 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 12,875,31,22 | 274,47,08 | 75,17 | 13,150,53,47 |
| மொத்த தொகை சாட்டியது | 3 | --- | --- | 3 |

# நிகர செலவு

**(ரூபாய் ஆயிரத்தில்)**

| கணக்குத் தலைப்பு | | 2020 – 2021 | 2021 – 2022 | 2021 – 2022 | 2022–2023 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2059 | பொதுப்பணிகள் | 2,31,29 | 2,70,75 | 2,70,75 | 2,82,50 |
| 2401 | பயிர் வளர்ப்பு | 9,144,58,36 | 10,963,39,78 | 10,861,29,29 | 11,951,17,39 |
| 2402 | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 87,38,69 | 166,61,24 | 136,28,16 | 147,51,06 |
| 2408 | உணவு சேமிப்பு – கிடங்கு வசதி | 46,57,62 | 161,05,01 | 59,52,88 | 5,00,03 |
| 2415 | வேளாண்மை ஆராய்ச்சியும் மற்றும் கல்வியும் | 592,72,00 | 622,61,44 | 523,56,78 | 486,74,82 |
| 2435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் | 224,32,19 | 275,61,76 | 285,17,99 | 246,83,18 |
| 2501 | ஊரக வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் | --- | 6 | 6 | --- |
| 2551 | மலைப் பகுதிகள் | 69,96 | 73,76 | 72,03 | 82,96 |
| 2702 | சிறுபாசனம் | 6,64,16 | 7,25,85 | 6,85,24 | 8,27,39 |

| கணக்குத் தலைப்பு | | 2020 – 2021 | 2021 – 2022 | 2021 – 2022 | 2022–2023 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 2705 | பாசனப் பகுதி மேம்பாடு | --- | 3 | 3 | --- |
| 2810 | புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி | --- | 31,62,38 | 1 | 1 |
| 3054 | சாலைகளும் பாலங்களும் | --- | --- | --- | 3,74,68 |
| 3451 | தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 12,83,29 | 17,73,94 | 14,27,80 | 16,37,10 |
| 4401 | பயிர் வளர்ப்பு குறித்த மூலதனச் செலவு | 90,12,03 | 221,17,08 | 142,84,17 | 165,94,74 |
| 4402 | மண்வள நீர்வளப் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு | 23,35,26 | 26,61,01 | 23,15,21 | 24,49,80 |
| 4435 | ஏனைய வேளாண்மைத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 173,34,84 | 301,61,28 | 190,70,62 | 84,02,54 |

| கணக்குத் தலைப்பு | | 2020 – 2021 | 2021 – 2022 | 2021 – 2022 | 2022–2023 |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | திருத்த மதிப்பீடு | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
| 6401 | பயிர் வளர்ப்புக்கான கடன்கள் | --- | 130,00,00 | 130,00,00 | 1 |
| 6425 | கூட்டுறவு குறித்த கடன்கள் | --- | ---- | --- | 16 |
| 7610 | அரசுப் பணியாளர் முதலியோருக்குக் கடன்கள் | 61,10 | 75,00 | 75,00 | 75,00 |

## கோரிக்கை 05 வேளாண்மை – உழவர் நலத்துறை

## 2022 – 2023 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

**(ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 005 01 | வேளாண்மை – உழவர் நலத்துறை – தலைமைச் செயலகம் | அனுமதித்தது | 16,37,10 | --- | 75,00 | 17,12,10 |
| 2. | 005 02 | வேளாண்மை இயக்ககம் | அனுமதித்தது | 9,204,89,41 | 163,75,73 | 1 | 9,368,65,15 |
| 3. | 005 03 | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம் | அனுமதித்தது | 245,46,67 | 84,02,54 | --- | 329,49,21 |
| 4. | 005 04 | விதைச் சான்று இயக்ககம் | அனுமதித்தது | 44,88,17 | --- | --- | 44,88,17 |
| 5. | 005 05 | தோட்டக்கலை, மலைத்தோட்டப் பயிர்கள் இயக்ககம் | சாட்டியது | 1 | --- | --- | 1 |
| | | | அனுமதித்தது | 1,969,49,15 | 2,19,00 | --- | 1,971,68,15 |
| 6. | 005 06 | வேளாண்மைப் பொறியியல் துறை | சாட்டியது | 2 | --- | --- | 2 |
| | | | அனுமதித்தது | 912,28,19 | 24,49,81 | --- | 936,78,00 |
| 7. | 005 07 | வேளாண் பொறியியல் பணிகள் | அனுமதித்தது | 70,02 | --- | --- | 70,02 |

| வ. எண் | துறைத் தலைவர் | | | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | 005 08 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் | அனுமதித்தது | 471,75,25 | --- | --- | 471,75,25 |
| 9. | 005 09 | அங்ககச் சான்றளிப்பு இயக்ககம் | அனுமதித்தது | 78,19 | --- | --- | 78,19 |
| 10. | 005 10 | சர்க்கரை இயக்ககம் | அனுமதித்தது | 8,69,07 | --- | 16 | 8,69,23 |
| **மொத்தம்** | | | சாட்டியது | **3** | **---** | **---** | **3** |
| | | | அனுமதித்தது | **12,875,31,22** | **274,47,08** | **75,17** | **13,150,53,47** |

# நிறைவுரை

வேளாண் பெருமக்களின் நலன் காக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நற்சிந்தனையின்படி வேளாண்மை – உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, முதன் முறையாக 2021–2022–ஆம் ஆண்டில், விவசாயிகள் முதல் வேளாண்சார் வல்லுநர்கள் வரை அனைவரின் கருத்துக்களையும் கேட்டறிந்து, வேளாண்மைக்கென்று தனி நிதிநிலை அறிக்கையினை தமிழக சட்டமன்ற பேரவையில் தாக்கல் செய்து, பல்வேறு சிறப்பான செயல்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

முதலாமாண்டில் திட்டச் செயல்பாடுகளில் கிடைத்த அனுபவங்கள், ஏற்றுமதியாளர்கள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள், வர்த்தகர்கள், வேளாண் மற்றும் அதனைச் சார்ந்த துறை அலுவலர்களின் கருத்துக்களைப் பெற்று, 2022–2023 ஆம் ஆண்டில் இரண்டாம் வேளாண் நிதிநிலை அறிக்கை, செவ்வனே தாக்கல் செய்யப்பட்டு மேலும், பல புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட உள்ளன.

பாரம்பரிய தொழில் நுட்பங்களுடன் காலமுறை மாற்றத்திற்கு உகந்த வகையில் மின்னணு முறைகளும் வேளாண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டு, வேளாண்மை – உழவர் நலத்துறை ஆக்கபூர்வமான பரிணாம வளர்ச்சி பெற்று வேளாண் பெருமக்களின் வாழ்வில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி. மேலும், விவசாயிகள் விதைப்பு முதல் சந்தைப்படுத்துதல் வரை எதிர்கொள்ளும் சிரமங்களை களையும் வகையில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படவுள்ளன.

வேளாண்மையை வணிக ரீதியாக இலாபம் ஈட்டும் தொழிலாக மாற்றுவதற்காக கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், பனை மேம்பாட்டு இயக்கம், நுண்ணீர் பாசனத் திட்டம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் சந்தை, வேளாண் விளைபொருட்களை ஏற்றுமதியை உயர்த்துவதற்கென்று தனித்துறை என்று விவசாயிகளின் உணர்வுளை பிரதிபலிக்கும்

வகையில் வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, தமிழ்நாடு அரசு எடுத்துவரும் பல்வேறு சீரிய நடவடிக்கைகளினால், தமிழ்நாட்டில் உணவுப் பாதுகாப்பும், ஊட்டச்சத்து பாதுகாப்பும் உறுதிசெய்யப்படும் என்பதுடன், விவசாயிகளின் வருமானமும் உயரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களை 19.03.2022 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் 2022-2023 ஆம் ஆண்டிற்கான வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் நிதிநிலை அறிக்கையை சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதற்கு முன்பாக, மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



26.02.2022 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற அனைத்து கிராம மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பு கருத்தரங்கில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இக்கருத்தரங்கில்,தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு,இ.ஆ.ப.,உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களிடம் 17.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் சட்டப் பேரவையில் வேளாண்மை - உழவர் நலத்துறை நிதிநிலை அறிக்கையின்போது உறுதியளித்தபடி ஒரு இலட்சம் பனை விதைகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள், வேளாண்மை - உழவர் நலத்துறை செயலாளர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 08.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், பருத்தி விவசாயிகளின் நலன் கருதி, ரூபாய் 11 கோடி மதிப்பில் நீண்ட இழை பருத்தி சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த உத்திகளை 25 ஆயிரம் எக்டர் பரப்பளவில் செயல்படுத்திட நீடித்த நிலையான பருத்தி இயக்கம் என்ற புதிய திட்டத்தை ஐந்து விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள், தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் / சர்க்கரைத்துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 16.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு விவசாய நிலங்களில் நீடித்த பசுமைப் போர்வைக்கான இயக்கம் என்ற புதிய வேளாண்காடு வளர்ப்புத் திட்டத்தினை ரூபாய்.11.14 கோடி மதிப்பில் 73 இலட்சம் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு விநியோகிப்பதன் துவக்கமாக, விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 06.12.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறி தோட்டத் திட்டத்தின்கீழ், 225 ரூபாய் மானிய விலையில் மாடித்தோட்ட தளைகளையும், ஊரகப் பகுதிகளில் காய்கறித் தோட்டம் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக 15 ரூபாய்க்கு 12 வகை காய்கறி விதை தளைகளையும், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்த ஊட்டச்சத்து தளைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், 25 ரூபாய்க்கு 8 செடிகள் அடங்கிய ஊட்டச்சத்து தளைகளையும் பயனாளிகளுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் 08.01.2022 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகள் பயன்பெறும் வகையில், வாடகைக்கு வழங்கப்படும் வேளாண் இயந்திரங்களை, விவசாயிகள் வீட்டிலிருந்தபடியே முன்பதிவு செய்ய இ-வாடகை ஆன்லைன் செயலியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்கள், தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் / சர்க்கரைத்துறை ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தனிநபருக்கான நீர் சேமிப்பு அமைப்பு (பண்ணைக்குட்டை)



கிருஷ்ணகிரி



கோயம்புத்தூர்



நீலகிரி



மாண்புமிகு தமிழக வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள்
ட்ரோன் செயல் விளக்கத்தை பார்வையிட்டார்.




தருமபுரி உழவர் சந்தையின் செயல்பாடு,



திண்டிவனம் உழவர் சந்தையின் செயல்பாடு.



ஓசூரில் மலர்களுக்கான பன்னாட்டு ஏல மையத்தில் 2.50 இலட்சம் மலர் தண்டுகளுக்கான குளிர்பதன கிடங்கு, ஏல மையம், தரப்பிரிப்பு கூடம், வணிகர் கூடம், 16 கடைகள், கூட்ட அரங்கம், பயிற்சி அரங்கம், விநியோகக் கூடம், 2000 மெ.டன் சேமிப்பு கிடங்கு ஆகிய கட்டுமானப் பணிகள்



பூந்தோட்டம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் 2000 மெ.டன் மற்றும் 1000 மெ.டன் சேமிப்பு கிடங்கு கட்டுமானப் பணிகள்



புதிய கரும்பு இரகம் கோ 11015 - கடலூர் மாவட்டம்



செம்மை நெல் சாகுபடி – திருநெல்வேலி மாவட்டம்



கோனோ வீடர் மூலம் களை எடுத்தல் – தென்காசி மாவட்டம்

## சிறுதானிய இயக்கம்



கேழ்வரகு-கிருஷ்ணகிரி மாவட்டம்



மக்காச்சோளம்-பெரம்பலூர் மாவட்டம்



சோளம்-தென்காசி மாவட்டம்



கம்பு-கள்ளக்குறிச்சி மாவட்டம்



சூரியகாந்தி –தென்காசி மாவட்டம்



நிலக்கடலை- நாமக்கல் மாவட்டம்



எள்-விழுப்புரம் மாவட்டம்



மா-கிருஷ்ணகிரி மாவட்டம்



பலா- கடலூர் மாவட்டம்



சம்பங்கி- திண்டுக்கல் மாவட்டம்



சூரிய ஒளி உலர்த்தி

அரசு மைய அச்சகம், சென்னை—600 001.